632

மாத வெளியீடு

விஜய - ஆனி

சக்தி

632

மலர் - 4 இதழ் - 6

அணா நான்கு

காக்ஷிக்குத் தயார்!

ஜூபிடரின் மகோன்னத
தமிழ் சமூகப் படம்

டைரக்ஷன்
M. கிருஷ்ண
ரத்தினம்

☆

படப்பிடிப்பு
S. சரூஸ்

☆

ஒலிப்பதிவு
M. A. N.
அய்யங்கார்

☆

ஸ்டுடியோ
பாரத்
மூவிடோன்



மியூசிக்
டைரக்ஷன்
M. S. ஞான
மணி

☆

பாட்டு
T. V.
நடராஜ
ஆச்சாரி

☆

கதை
K. ஹிரணய்யா

நடிகர்கள்

P. A. குமார்	P. S. ஞானம்	P. G. வெங்கடேசன்
P. R. மங்களம்	C. S. D. சிங்	T. S. ஜெயா
K. P. ஜெயராம்	குமாரி செல்வா	M. L. பதி
மாஸ்டர் தங்கவேலு	லூஸ் ஆறுமுகம்	M. V. சாமிநாதன்

விபரங்களுக்கு :— **ஜூபிடர் பிலிம்ஸ்,** (புதுக்கோட்டை)
9, வாசு தெரு, கீழ்ப்பாக்கம், மதராஸ்.

"ஸாவித்ரி" யில் ஷாந்தா ஆப்தே

பாடிய கீதங்கள்

N. 18129	N. 18130
உயர் மிகு	அன்னை பூமி துவைத கீதங்கள்
ஸஹியேன்	வானேங்கிய ,,

எல்லா "எச். எம். வி." கிராமபோன் வியாபாரிகளிடமும் கிடைக்கும்.

"ஹிஸ் மாஸ்டர்ஸ் வாய்ஸ்"

'லிஸ்ஸன்' ரேடியோக்கள்

(பிரிட்டிஷ் மேக்)



5 VALVES
MODEL 'DOVER'
3 WAVE BANDS
Rs. 225/-

நீங்கள் ஏன் 'லிஸ்ஸன்' ரேடியோவையே வாங்கவேண்டும்?

☆ உத்திரவாதம் உள்ளவை.

☆ உயர்தரமான வேலைப்பாடுகளுடன் கூடியவை.
—'முல்லார்ட்' வால்வுகள் பிட்டப் செய்யப்பட்டுள்ளவை.

☆ அழகும் வனப்பும் வாய்ந்தவை.

☆ குறைந்த விலை உள்ளவை.

☆ A. C. மெயின்களிலும் 6 வால்ட் பேட்டரிகளிலும் வேலை செய்யப்படுபவை—'WINDSOR'

☆ போர்டபில் ட்ரை பேட்டரி மாடல்கள்—'CARAVAN'

☆ சிக்கன முடையவர்களுக்குக் குறைந்த விலை மாடல்கள் —'DOVER'

7 VALVES
MODEL 'KINGS GATE'
4 WAVE BANDS
Rs. 445/-



Stockists & Sole Distributors for Madras Presidency including Native States :—

'ஜயபோன் கம்பெனி' — 1-8, பிராட்வே, மதராஸ்

JAY-O PHONE COMPANY — 1-8, BROADWAY, MADRAS

சக்தி மலர்கள்

1. இனி நாம் செய்யவேண்டுவது யாது? — [லியோ டால்ஸ்டாய்] ரா. விசுவநாதன் மொழிபெயர்ப்பு — அணு 12

சுத்தமான தமிழ் மொழிபெயர்ப்பு. ஒவ்வொரு தமிழனும் படித்துப் பயன்பெறத் தக்க அனுபவக் களஞ்சியம்.

2. உலகம் சுற்றும் தமிழன் — ஏ. கே. செட்டியார் — அணு 12

பல நாட்டின் பழக்க வழக்கங்களையும், புதுமைகளையும் எளிய இனிய தமிழில் சித்தரித்துக் காட்டும் பல கட்டுரைகள் கொண்ட நூல் இது ஒன்றே நந்தமிழ் மொழியில் வந்துளது.

3. நிர்மலகுமாரி — காழி. சிவ. கண்ணுசாமி — அணு 12

இந்து தேச சரித்திரத்தை யொட்டி யெழுந்த ஒப்பற்ற இனிய நவீனம். எளிய நடை. படிப் பதற்குகந்த இனிமையான கதை.

4. அசலா [கிருஹதாஹ்] — [சரத் சந்திர சட்டர்ஜி] ஆர். ஷண்முகசுந்தரம் மொழிபெயர்ப்பு — ரூ $1\frac{1}{2}$

ஸ்ரீ சரத் சந்திர சட்டர்ஜியின் நாவல்களில் **அசலா** மிக சிறந்த தென்று எல்லோராலும் இனிய நடையில் ஸ்ரீ ஆர். ஷண்முகசுந்தரம் மொழி பெயர்த்திருக்கிறார்.

5. சிறை அனுபவங்கள் — கி. சடகோபன் — அணு 12

மனிதனுடைய உண்மைச் சொரூபத்தைக் காட்டிவிடக் கூடியது சிறைதான். அந்தச் சிறை நம் நாட்டில் எப்படி யிருக்கிறது என்பதை, உருக்கமாகவும் நகைச்சுவை யுடனும் இதிலே வர்ணிக்கப்பட் டிருக்கிறது.

காந்தித் தாத்தா கதை — ஸ்ரீமதி காவேரி வெங்கட்ராமன், ஸ்ரீ எஸ். ஆர். வெங்கட்ராமன் — அணு 8

முதியோர் கல்வி அபிவிருத்திக்காகவும், சிறுவர் அறிவைப் பெருக்க வேண்டியும் பொதுவாக அனைவருக்கும் பயன்பட வேண்டியும் எழுதப்பட்டது இந்தப் புஸ்தகம். அருமையான பல படங்கள் சேர்க்கப்பட்டிருக்கின்றன. படிக்கப் படிக்க தெவிட்டாத நடையில் இயற்றப்பட் டிருக்கிறது.

இன்னும் ருஷிய மகான் டால்ஸ்டாய் எழுதிய மற்றெல்லா நூல்களையும் தமிழில் மொழிபெயர்த்து வெளியிடப்பெறும்.

சக்தி காரியாலயம்

46, முத்துமாரி செட்டித் தெரு, ஜி.டி. சென்னை

சக்தி மலர் 7

ஸ்ரீ ஏ. கே. செட்டியார்

எழுதிய

அமெரிக்கா



விரைவில் வெளிவரும். விலை ரூ. 1/-

சக்தி மலர் 6

கூண்டுக் கிளி

முதலிய நாடகங்கள்

ஆசிரியர்: ஹரீந்திரநாத சட்டோபாத்யாயா

மொழிபெயர்த்தவர்: தி. ஜ. ர.

தேவிட்டாத இனிய நடை; அரிய கருத்துக்கள்;
உள்ளத்தை அள்ளும் கற்பனை

விலை ரூ. 1

சக்தி காரியாலயம் :: ஜி. டி. சென்னை

கல்கி

தமிழரின் புதிய பத்திரிகை

~~~~மாத மிருமுறை~~~~

ஆசிரியர்: ரா. கிருஷ்ணமூர்த்தி
(மாஜி ஆனந்த விகடன் ஆசிரியர்)

நண்பர்களுக்கு ஒரு விண்ணப்பம். 'கல்கி' முதல் இதழிலிருந்து பெற விரும்புவோர் தயவு செய்து வருஷ சந்தா ரூ. 3 அனுப்பி வைக்கவும்.

மானேஜர்,

கல்கி ஆபீஸ்,

காந்தி இர்வின் ரோடு, எழும்பூர், சென்னை.

பொருளடக்கம்

ஹிட்லரின் சூழ்ச்சி ... 241
உலக வம்பு
'ரதி' ... 242
ராஷ்டிரபதி ஆஜாத் ... 243
மனச் சாந்தி
'சரோஜா' ... 245
உடம்பும் மருந்தும் ... 248
நான் வளர்த்த அணில்
'ராமகிருஷ்ணன்' ... 249
நாடு தேடிய வீரர்கள்
'ஜான் புல்லர்' ... 250
கண்ணும் பொன்னும்
பொ. திருகூடசுந்தரம் ... 252
சீகாழிப் பள்ளு
மு. அருணசலம் ... 253
பத்திரிகை விபரீதம்
லியோ டால்ஸ்டாய் ... 255
சின்னஞ் சிறிய கிளி
'சுரபி' ... 256
கமலா
ரா. ரா. ... 257
காந்தி வாக்கு ... 260
பாலி மக்களின் கலை வாழ்வு
'சஞ்சாரி' ... 261
பாலி நடனப் படங்கள் ... 264
சகுணக் கடவுள் வணக்கம் நல்லதா?
ஆல்பர்ட் ஐன்ஸ்டைன் ... 266
வெள்ளி உலக வேந்தர்கள்
எம். நாகலிங்கம் ... 267
தறிகாரன் ஜீவனம்
ஆர். ஷண்முகசுந்தரம் ... 269
கல்யாணச் சீர்
கே. ஸ்ரீனிவாஸன் ... 271
காலத்தேர்
சுவாமி சுத்தானந்த பாரதியார் ... 273
ஆங்கில நாடகத் தந்தை — மார்லோ
'ஆனந்தன்' ... 277
ரோஜா மொட்டு
வெ. ராமராவ் ... 278
கோல மா.........?
எஸ். விசாலாக்ஷி ... 281
பறித்த பூக்கள் ... 283
புத்தக உலகம் ... 285
கதம்பம் ... 286
பாலர் பாட்டு: புரு
வித்வான் சு. உமைதாணு பிள்ளை ... 286
,, கதை: மந்திரக்காரியின் மரங்கள்
'மாமி' ... 287
~~~~

சக்தி

அன்பும் அறிவும் அறமும் திருவும் அருளும் ஆற்றலும்
இன்ப வாழ்வும் விளங்கச் சக்தி எழுந்து பொலிகவே!

மலர் ௪ : இதழ் ௯ — விஷு — ஆனி

13 MAR 1942 MADRAS

ஹிட்லரின் சூழ்ச்சி

ருஷியா மீது போர் தொடுத்த ஹிட்லர் முட்டாள் என்று சாமான்ய ஜனங்கள் நினைப்பார்கள். ஆனால், அப்படி அவர் ஒரு முட்டாள் அல்ல என்று ஸ்ரீ. சர்ச்சிலுக்குத் தெரியும். "ருஷியாமீது ஜெர்மனி போர் தொடுத்திருப்பது, பிரிட்டன்மீது படையெடுப்பதற்காக ஜெர்மனி செய்யும் முன்னேற்பாடே யாகும்" என்று அவர் கூறுகிறார். இது விளையாட்டல்ல; உண்மையே யாகும்.

யுத்த ஆரம்பத்தில்

யுத்த ஆரம்பத்தில் ருஷியாவும் ஜெர்மனியும் ஒப்பந்தம் செய்துகொண்டன; போலந்தைப் பங்குபோட்டுக் கொண்டன. பால்டிக் நாடுகளில் ருஷியா ஆக்ரமித்து, படைத்தளங்களை அமைத்துக் கொள்வதற் கெல்லாம் ஹிட்லர் உடந்தையா யிருந்தார். இப்படி யெல்லாம், இரு நாடுகளும் நேசங்கொண் டிருந்தாலும், 'நாஜிகளுக்கு ஸோவியத்திடமும், ஸோவியத்துக்கு நாஜிகளிடமும் தீராப் பகைமையுண்டு; என்றோ ஒருநாள் அவை போரிடத்தான் போகின்றன' என்று மட்டில், உலகெங்கும் தெரிந்துதானிருந்தது. ஆனால், இவ்வளவு சீக்கிரத்தில் அதை யாரும் எதிர்பார்க்க வில்லை.

ஸ்டாலின் நினைப்பு

அந்தக் காலத்தில், ஸ்டாலின் என்ன நினைத்தார்? "நம்மையும் ஜெர்மனியையும் சிண்டு முடிந்துவிட்டு வேடிக்கை பார்க்க, பிரிட்டன் விரும்புகிறது. அந்தச் சூழ்ச்சியில் நாம் மாட்டிக் கொள்ளலாகாது. பிரிட்டனுக்கும் ஜெர்மனிக்குந்தான் சண்டை மூளட்டுமே; அதை நாம் வேடிக்கை பார்ப்போமே. அவ்விரண்டும் சண்டையிட்டு மண்டையை உடைத்துக்கொண்டு மடியும்போது, நமது ராணுவத் தற்காப்பு ஏற்பாடுகளை யெல்லாம் நாம் பலப்படுத்திக் கொள்ளலாம்" என்பதுதான் ஸ்டாலினின் யோசனை.

ஹிட்லர் எண்ணம்

ஆனால், ஜெர்மனியின் எண்ணமென்ன? "தற்காலிகமாக ருஷியாவுடன் நேசம்கொண்டு, கிழக்கே திக்பந்தனம் செய்துவிட்டு, மேற்கே ஒருமுனைப் பட்டு, நாடுகளை ஒவ்வொன்றாய், நமது இணையற்ற ராணுவ பலத்தைக்கொண்டு வீழ்த்தி, ஐரோப்பா பூராவையும் அடிமை செய்துவிட்டால், பிறகு கிழக்கே திரும்பலாம்" என்று ஹிட்லர் நினைத்தார்.

பிரிட்டனின் முயற்சி

பிரிட்டனுக்கு நாஜிகளிடமும் வெறுப்பு; ருஷியாவிடமும் வெறுப்பு. ஆனால், எப்படியாயினும் சமாதானமாய் வாழ்ந்தால் போதும் என்று அது திரும்பத் திரும்ப முயன்று வந்தது. சொல்லப் போனால், ருஷியாவுக்கு மனஸ்தாபம் வந்தாலும் பாதகமில்லை என்று நினைத்து, நாஜி வெறியர்களை எவ்விதமாவது திருப்தி செய்து சமாதானத்தை நிலைநாட்டவே, பிரிட்டன் பெரிதும் பிரயாசைப்பட்டது. இப்படி நடு மையமாய் நின்றுகொண் டிருந்த பிரிட்டனையே கடைசியில் ஹிட்லர் சண்டைக் கிழுத்துவிட்டார்!

படையெடுப்பின் காரணம்

ருஷியாமீது ஹிட்லர் இன்று போர் தொடுத்திருக்கும் காரணமென்ன? கிழக்கே, பிடிபட்ட பிரான்ஸிலே, பிரிட்டன் படையெடுக்க முடியாது; பிடிபடாத பிரான்ஸையோ, பிரிட்டனுக்கே விரோதமாய்ச் சண்டையிடச் செய்தாயிற்று. ஸ்பெயினோ, நாஜிகளுக்கு நேசம். மத்திய தரைக் கடலிலும் பூர்ண ஆதிக்கம் பெற்றாயிற்று. துருக்கியின் நேசத்தைச் சம்பாதித் தாயிற்று. ஆகையால், தங்கள் மீது படை யெடுக்க, பிரிட்டனின் தரைப்படை, ஐரோப்பாவுக்குள்ளே காலடி எடுத்துவைக்க முடியாது என்பது ஹிட்லரின் அசட்டுத் துணிச்சலாகும். தங்களுடைய 'ரோட் ரோலர்' போன்ற அபார பலமுள்ள டாங்கிப் பட்டாளங்களின் மூலம், சில மாதங்களுக்குள் ருஷியாவின் கேந்திர ஸ்தானங்களைக் கைப்பற்றி, அதை முறியடித்து விட்டால், பிறகு நிஷ்கவலையாய் பிரிட்டன்மீது பாயலாம் என்று அவர் கனவு கண்டுகொண் டிருக்கிறார்.

ஸ்ரீ சர்ச்சில் பேச்சு

இப்போது பிரிட்டன் என்ன செய்யப் போகிறது? ஸ்ரீ. சர்ச்சிலின் பேச்சிலே இலக்கியச் சுவை நிறைந்திருந்தாலும், உறைப்பு இல்லை. ருஷியாவிடம் அவருடைய வெறுப்பு குறையவில்லை. "ருஷியாவுக்குப் புத்தி உதவியும் பண உதவியும் செய்கிறோம். ஜெர்மனிமீது குண்டுகள் போட்டு, ஜனங்களை யெல்லாம் கொல்லுகிறோம்" என்கிறாரே யொழிய, ருஷியாவுடன் பூர்ண ராணுவ ஒத்துழைப்புச் செய்து, ஜெர்மனியை மறுபக்கத்தில் தாங்கள் படையெடுத்துத் தாக்குவதாகச் சொல்லவில்லை. நாடுகள் ஒவ்வொன்றாக ஜெர்மனியின் அரக்க பலத்துக்குப் பலியாகி விழுந்துவிட்டதைக் கண்ட பிறகும், பிரிட்டன் இப்படி ஒரு எதிர்மறையான கொள்கையைக் கடைப்பிடிக்கலாகாது. தற்காப்புச் 'சுகத்'திலேயே மூழ்கி யிராமல், இந்த நல்ல தருணத்தில் ஜெர்மனியைத் தாக்குவது பற்றிப் பிரமாதமான முடிவுகளை, கூடிய சீக்கிரம் பிரிட்டன் செய்யுமென்றே எதிர்பார்க்கிறோம்.

—

உலக வம்பு — 'ரதி'

மாஜி மந்திரி ராமநாதன் ஜப்பானுக்குப் போயிருந்தபோது, அங்குள்ள சில பிரபலஸ்தர்கள், அவருக்கு ஒரு விருந்து வைத்தார்கள். அந்த விருந்தில் நமது மந்திரியின் வாய்க்கு அகப்பட்டது ஒரு முத்து! தெற்கே ஒரு ஜமீன்தாரின் வீட்டுக் கலியாணத்தில் சாப்பிட்டுக் கொண்டிருக்கும்போது, ஒருவருக்குப் பவுன் காசு ஒன்று அகப்பட்டதாம்.

அதிர்ஷ்டசாலிகளுக்கு இப்படிப் பொன்னும் மணியுமாக அகப்படுகின்றன. ஆனால், நாம் சாப்பிடும்போது நமது வாயிலே அகப்படுவது என்ன? கேட்க வேணுமா? 'மலைப்பிஞ்சு'தான்!

* *

நீலகிரி யோரத்திலுள்ள சில சாமியார்களுக்கு, ஒரு பெண் பிரதி தினமும் பால் ஊற்றி வந்தாளாம். ஒரு நாள், வழக்கப்படி பாலோடு கொஞ்சம் வெள்ளரிக்காயும் இளநீரும் அந்தப் பெண் எடுத்துக்கொண்டு போயிருந்தாள். பாலைத் தவிர வேறொன்றையும் தீண்டாத அந்தச் சாமியார்களுக்கு இதைக் கண்டு கோபம் பொத்துக் கொண்டு கிளம்பியதாம். ஏக வசனத்தில் திட்டத் தொடங்கி விட்டார்களாம்!

மாங்காய்ப் பாலுண்டு
மலைமேலிருப் போர்க்குத்
தேங்காய்ப் பால் எதுக்கடி?

என்ற பாட்டை அவள் எப்படி மறக்கலாம் என்ற கோபமாயிருக்கலாமோ ஒரு வேளை?

* *

இந்த யுத்தம் தொடங்கியதற்கப்புறம், இத்தாலியிலே பல பள்ளிக்கூடங்கள் மூடுண்டு விட்டனவாம். அந்த இடங்களில் சிப்பாய்களும் பல கோவேறு கழுதைகளும் நடமாடுவதற்கு ஏற்பாடாகியிருப்பதாகத் தெரிகிறது. மேற்படி பள்ளிக்கூட உபாத்தியாயர்களும் பையன்களும் இப்போது சந்தித்தால், பின் வரும் சம்பாஷணையை எதிர்பார்க்கலாம்:

வாத்தியார்: ஏண்டா கழுதை! நம்ம பள்ளிக்கூடப் பக்கம் போயிருந்தாயா?

பையன்: ஆமாம், ஸார்! அங்கே இப்போது பல நிஜக் கழுதைகளும் நிற்கின்றன.

* *

பெர்லினில் ஒரு ஆசாமி, தம்முடைய பக்கத்து வீட்டுக்காரர் பாடுவது, 'பூனை கத்துகிற மாதிரி இருக்கிறது!' என்று போலீஸுக்குப் புகார் செய்தாராம்!

வீட்டிலே எலி உபத்திரவமுள்ளவர்கள், எலிப்பொறி வாங்கித் திண்டாடுவானேன்? அந்த மனிதரை வரவழைத்துப் பாடவிட்டால், எலிகளெல்லாம் தாமே ஓடி, வளையில் போய்ப் பதுங்கிக் கொள்ளுமல்லவா?

* *

முச்சந்தி கூடுகிற இடத்தில், பத்துப் பேருக்கு முன்னால், நம்முடைய கடன்காரர், நம்மை மடக்கிக்கொண்டு விடுகிறதாக வைத்துக்கொள்வோம். அவர் கையில் ஒரு வேஷ்டியும் இருந்தால், நம் கழுத்தில் போட்டுவிடுகிறார்! உடனே அவர் வாயிலிருந்து வரும் வார்த்தை என்ன? "ஏனையா, உமக்கு மூக்கு இருக்கிறதா இல்லையா?" என்பதுதானே? சரி அப்போது நாம் மூக்கையா தொட்டுப் பார்க்கிறோம்? இல்லை; தலை கவிழ்ந்துகொள்கிறோம் — ஏன்? நமக்குத்தான் மூக்கு போய் விடுகிறதே! இன்னும், மனைவிமார்கள் எய்யும் பாணங்களாலும் எத்தனையோ பேருக்கு மூக்கு போய் விடுகிற தல்லவா?

இதெல்லாம் ஞாபகம் வந்த காரணத்தைச் சொல்லுகிறேன்: பீவார் என்ற ஊரிலே, ஒரு மாமா, தம்முடைய மருமகனுக்குப் பெண்ணைக் கொடுப்பதற்குப் பதிலாக, அவனுடைய மூக்கை நிஜமாகவே சீவி விட்டாராம். சாதாரணமாக, கலியாணமான பின்பு எல்லாருக்கும் போகிற மூக்கு, அதற்கு முன்னாலேயே அந்தப் பிள்ளையாண்டானுக்குப் போய் விட்டதே என்பதுதான் நம் வருத்தம்!

* *

ஒரு ஜெர்மன் விவசாயி, குண்டுச் சத்தங்களைப் பொறுக்க மாட்டாமல், தன் காதிலே பஞ்சை வைத்து அடைத்துக் கொள்கிறாராம்!

ஆங்கிலேயர் காதிலும் பஞ்சு அடைத்துக் கொண்டிருப்பதாகவே நமக்குத் தோன்றுகிறது. இல்லாவிட்டால், இந்தியர்களின் 'கூக்குரல்' அவர்கள் காதில் விழாதிருக்குமா?

* *

இங்கே இந்தியாவில் கொண்டு வந்து வைத்திருக்கும் இத்தாலியக் கைதிகள் அடிக்கடி கம்பி நீட்ட ஆரம்பிக்கிறார்கள். ஆனால், ஒவ்வொரு தடவையும் அவர்கள் பிடிபட்டே போகிறார்கள். போன வாரம் ஓட்டமெடுத்த பல கைதிகளைச் சில கிராமவாசிகள் துரத்திப் பிடித்து விட்டார்களாம்.

யுத்தத்தின் முடிவு எப்படியிருந்தாலும் சரி; இதெல்லாம் ஒரு வழிப்பட்ட பிறகு, இத்தாலிக்காரர்கள், "அடேயப்பா! எது எவ்விதமானாலும் இந்தியர்களை ஓட்டப் பந்தயத்தில் மட்டும் நாம் ஜயிக்க முடியாது" என்று தங்கள் ஊரில் பேசிக் கொள்வார்கள் என்பதில் சந்தேகமில்லை!

* *

"நாஜிகளை பிரிட்டன் எதிர்த்து நிற்க முடியுமா?" என்ற கேள்விக்கு, கடற்படை மந்திரி கர்னல் நாக்ஸ் "பந்தயம் கட்டுகிறீர்களா?" என்று பத்திரிகைக்காரர்களுக்குப் பதில் சொன்னாராம்.

"சரி, அப்படியா சேதி? ஒரு கட்டுரை அல்லது கதை இல்லாவிட்டால் ஒரு கவிதை எழுதுகிறதாகப் பந்தயம் போட்டுக் கொள்ளலாமா? அமெரிக்க மந்திரியார் இதற்குத் தயார்தானா?" என்று, சகோதர வாஞ்சை கொண்ட ஒரு தமிழ் எழுத்தாளர் கேட்கிறார். தடபுடலாகப் பணங் காசு பந்தயம் கட்டத் தமிழ் எழுத்தாளர் எங்கே போவார்?

ராஷ்டிரபதி ஆஜாத்

(மகாதேவ தேசாய்)

[ராஷ்டிரபதி ஆஜாத்தின் ஜீவிய சரித்திரம் ஒன்றை வெளியிட, லண்டனிலுள்ள **ஆலன் அண்டு அன்வின்** *என்ற பிரசுரகர்த்தர்கள் விரும்பினார்கள். ஸ்ரீ. மகாதேவ தேசாய் அதை எழுதித் தந்தார். புஸ்தகம் சென்ற வருஷமே தயாராகி விட்டாலும், இவ்வருஷந்தான் வெளியாகி, இப்போதுதான் இந்தியாவில் கிடைத்துள்ளது. அதிலிருந்து ஒரு பகுதியை இங்கே மொழிபெயர்த்துத் தந்திருக்கிறோம்.]*

மௌலானா, ஒரு பெரிய கீழ் நாட்டுப் பண்டிதர். அரபு, பாரசீகம் இரண்டிலும் ஆழ்ந்த ஞானம் படைத்தவர். ஆனால், அவர் பேசும்போது, மிகத் தூய, நயமான, எளிய உர்தூவில் பேசுவார். சிரமமின்றி அதை எவரும் புரிந்து கொள்ளலாம். இந்தியாவின் பொதுப் பாஷை ஹிந்துஸ்தானி என்று காந்திஜி சொல்லுகிறாரே, அது மௌலானா பேசுவதுதான். சரியான வார்த்தை கிடைக்காமல், அவர் ஒரு போதும் திண்டாடுவதேயில்லை. சாதாரணமாய் அவர் பேசிக்கொண்டிருக்கும் பேச்சிலேகூட, சில சமயம் எளிய, மனதில் பதியத்தக்க உபமானங்களும் பொருட் செறிவும் நிறைந்திருக்கும். வேறெப்படிச் சொன்னாலும் உங்களுக்குப் புரியாததை, புரியும்படி செய்துவிடும் அவர் பேச்சு.

1936-ஆம் ஹு சில நிமிஷ நேரம் அவருடன் ஏதோ பொதுவாய்ப் பேசிக்கொண்டிருந்தேன். நமது மகாஜனங்கள் எளிய நம்பிக்கையும் மத பக்தியும் நிறைந்திருப்பதைப்பற்றி யாரோ ஒரு நண்பர் குறிப்பிட்டார். "ஜனங்களுக்கு அந்த நம்பிக்கையிருப்பதால்தான், நாம் அநேக போராட்டங்கள் நடத்தி, அவற்றில் ஓரளவு வெற்றியும் பெற்றோம்" என்று அந்த நண்பர் சொன்னார்.

இதைப்பற்றி உடனே மௌலானா செய்த வியாக்கியானத்தை இங்கே குறிப்பிட விரும்புகிறேன். அவர் பேச்சைக் கேட்பது செவிக்கு விருந்தாகும். அவர் கூறினார்: "ஆமாம், ஆமாம். அந்த நம்பிக்கைதான் இதைச் செய்தது; இன்னமும் அது எத்தனையோ செய்யும். ஆனால், அதில் ஒரு சங்கடம் இருக்கிறது. மத நம்பிக்கை என்பது அளவிட்டுச் சொல்லமுடியாத ஒரு சக்தியாகும். மாட்டு வண்டியை ஒரு முட்டாள் ஓட்டினால், அதனால் ஏற்படக்கூடிய விபத்து என்ன? மிதமிஞ்சிப் போனால், வண்டிக்காரனுக்கும் இன்னும் இரண்டு பேருக்கும் காயம் ஏற்படலாம். ஆனால், ஒரு ரெயில் விபத்து நேரும்போது, என்ன நிகழ்கிறதென்று நாம் அறிவோம். நூற்றுக் கணக்கான பேர் உயிர் இழக்கிறார்கள்; சொல்லமுடியாத பொருட்சேதம் ஏற்படுகிறது. மதம் என்பது ஒரு பிரமாண்டமான நீராவி எஞ்சினாகும். மிகச் சாமர்த்தியமுள்ள, நல்ல விழிப்புடைய ஒரு 'டிரைவர்' அதற்கு வேண்டும். தகுதியற்ற ஒரு 'டிரைவ'ரின் கையிலே அது அகப்பட்டால், சொல்லொணாத் துன்பமே ஏற்படும். நமது துரதிர்ஷ்டவசமாக, தகுதியற்றோர் கையிலே மதம் இப்போது அகப்பட்டுக் கொண்டுள்ளது. அவர்கள் அதை நாஸ்திகமாக்கிவிட்டார்கள். நாம் எங்கே சென்றுகொண்டிருக்கிறோமென்றே எனக்குத் தெரியவில்லை."

மௌலானா மிகவும் சொற்பமாய்த்தான் ஆங்கிலம் பேசுவார். ஆயினும், அவரது புஸ்தகசாலையில் மிகச் சிறந்த பிரஞ்சு, ஆங்கில இலக்கியங்கள் ஏராளமாய் இருக்கின்றன. பல ஆங்கிலக் கவிகளை அவர் படித்திருக்கிறார். கதே, ஸ்பினோஸா, ரூஸோ, மார்க்ஸ், ஹாவ்லக் எல்லிஸ் போன்ற உலகின் மிகச் சிறந்த சிந்தனையாளர்களின் நூல்களும், உபநிஷத்துக்களும், வேதங்களும் அவரது புத்தகசாலையிலே இருக்கின்றன. சகல நாட்டு ஜனங்கள், சரித்திரங்கள், சர்வதேசப் பிரபல இலக்கியங்கள் முதலிய பல நூல்கள் அதில் இருக்கின்றன. வேவெர்லி நாவல்கள், டூமாஸ் நாவல்கள், ஹியூகோவின் நாவல்களை யெல்லாம் போரவலோடு, அவர் படித்திருக்கிறார். டால்ஸ்டாய், ரஸ்கின் இந்த இருவரது நூல்களையும் ஒருமுறையல்ல, பல முறை படித்திருக்கிறார். ஒரு சமயம் ரெயிலிலே நியாய வைசேஷிக சாஸ்திரத்தை அவர் படித்துக் கொண்டிருந்ததை, நான் கண்டேன். நபிகளைப் பற்றியும், மகா ஓமரைப் பற்றியும் மிகச் சமீபத்தில் வெளியான நூல்களெல்லாம் அவரது மேஜையிலே கிடக்கின்றன. மாடம் பொவாரி போன்ற பிளாபர்ட்டின் நாவல்களும் அதிலே கிடக்கின்றன! அரபு, பாரசீகம், துருக்கி முதலிய பாஷைகளிலுள்ள ஏராளமான புஸ்தகங்கள், பல அலமாரிகளை நிறைத்திருக்கின்றன; அவற்றின் பெயர்கூட நமக்குத் தெரியாது.

கடிதப் போக்குவரத்துக்களின் மூலம், வெளி உலகத்தோடு அவர் எப்போதும் சம்பந்தம் வைத்துக் கொண்டிருக்கிறார். காலஞ் சென்ற ஜக்லூல் பாஷா, பாத்திபீ ஆகியவர்கள் அவருக்குக் கடிதம் எழுதி யிருக்கிறார்கள். காலஞ்சென்ற முஸ்தபா கெமால் பாஷாவுடனும் இதர துருக்கித் தலைவர்களுடனும் அவருக்குப் பழக்கம் உண்டு. 1908-ஆம் ஹு புரட்சியை நடத்திய 'வாலிபத் துருக்கி' என்ற கட்சியைச் சேர்ந்த சகலரும் அநேகமாக மௌலானாவின் நண்பர்கள்தான். துருக்கிப் பார்லிமெண்டின் தலைவர் அஹமத் ரெடா, டாக்டர் ஸேலாஹுத்தீன், என்வெர் பாஷா, ஜாவேத்பீ ஆகியவரெல்லாம் அவருக்குக் கடிதம் எழுதி யிருக்கிறார்கள். இரான் தேசத்துத் தீவிரவாதியான பிரசித்திபெற்ற டாக்குவி ஜாடே, மௌலானாவுக்கு ஒரு நண்பர்.

படிப்பிலே ஆழ்ந்திருப்பவராதலால், தனிமையிலே அவருக்கு ஒருவித விருப்ப மிருக்கிறது. ரொம்ப ஸரளமும் மரியாதையும் உடையவரா யிருந்தும், மேற்குறித்த காரணத்தால் அவருக்குச் சிநேகிதர்கள் குறைவு. அருமையாய்ச் சம்பாஷிக்கக்கூடியவர்; என்றாலும், பெரும்பாலும் மௌனமே சாதிப்பார். ஒதுங்கி யிருக்கும் சுபாவமுடையவராதலால், நம்மில் பெரும்பாலோருக்கு அவர்

வாழ்க்கையைப்பற்றி ஒன்றும் தெரிவதில்லை. தேநீரில் ரொம்பப் பிரியமுடையவர், ஓயாமல் ஸிகரெட் குடிப்பார் என்பது மட்டிலுமே நமக்குத் தெரிகிறது.

அவர் மிகவும் எளிய வாழ்க்கையைக் கடைப்பிடிக்கிறார். அவருடைய ஆபீஸ் அறையிலோ கூடத்திலோ புத்தகங்களையன்றி வேறொன்றையும் நீங்கள் காண முடியாது; போட்டோப் படங்கள்கூடக் கிடையாது.

"சிறைக்குப் போயிருந்தபோது, ஸிகரெட்டுக்கு என்ன செய்தீர்கள்?" என்று நான் அவரைக் கேட்டேன்.

அவர் சொன்னார்: "இந்தக் கேள்வியைக் கேட்டீர்களே, இதற்குச் சந்தோஷிக்கிறேன். 1921-ஆம் ஆண்டு என்னை அலிபுரம் சிறைக்கு அதிகாரிகள் அழைத்துச் சென்றார்கள். அப்போது, என் ஸிகரெட் பெட்டியில் பத்து ஸிகரெட்டுகள் இருந்தன. இரண்டைக் குடித்துவிட்டு, பாக்கியைச் சிறை அதிகாரிகளிடம் ஒப்புவித்துவிட்டேன். 'சிறையிலே உங்களுக்கு அவை வேண்டியிருக்குமே!' என்று சொல்லி, தேசபந்து தாஸ் என்னைக் கோபித்துக் கொண்டார். 'நான் விடுதலையடையும் வரையில் தேவையில்லை' என்று அவருக்குப் பதிலளித்தேன். அவை கிடைக்கவில்லையே என்ற எண்ணங்கூட, கொஞ்ச காலத்தில் எனக்கு இல்லாமற் போய்விட்டது."

இவ்விஷயத்தில், காலஞ்சென்ற மோதிலாலைப் போல் இருக்கிறார் மௌலானா. மோதிலால் ஒரு முறை என்னிடம் சொன்னார்: "வாழ்க்கையின் நல்ல பொருள்களில் எனக்கு ஆசையுண்டு; ஆனால், அவற்றோடு நான் பந்தப்பட்டிருக்கவில்லை. நினைத்த மாத்திரத்திலே அவற்றைத் துறந்துவிட, என்னால் முடியும்."

ஆனால், ஸ்ரீ. டி வாலராவையோ, சர்தார் வல்லபாய் படேலையோ, ஆஜாத் ஒத்திருக்கவில்லை.

"உங்களிடம் சில்லறைத் துர்ப்பழக்கங்கள் இல்லையே; ஸிகரெட்கூட நீங்கள் குடிக்கக்காணோமே! இது எனக்கு ஆச்சர்யமாயிருக்கிறது" என்று, ஸ்ரீ டி வாலராவிடம் ஒரு சமயம் ஸ்ரீ தாமஸ் சொன்னார்.

ஸ்ரீ டிவாலரா அளித்த பதிலாவது: "இல்லை, மிஸ்டர் தாமஸ்! உங்கள் ஆங்கிலேயர்கள்தான் அதற்குப் பொறுப்பாளிகள். என் ஞாபகத்தை விட்டகலாதது அந்தச் சந்தர்ப்பம். அப்போது என்னை உங்களுடைய லிங்கன் ஜெயிலுக்குக் கொண்டு சென்றார்கள். அது உங்களுக்கு ஞாபகமிருக்குமே? சிறைச்சாலையை அடையுமுன், என்னைக் காவல் செய்துவந்த போலீஸ்காரனிடம், நான் ஒரு ஸிகரெட் குடிக்க விரும்புவதாகச் சொன்னேன். அவன் ஆட்சேபிக்கவில்லை. ஆகையால், ஸிகரெட்டைக் கொளுத்தினேன். ஸிகரெட்டைப் பார்த்துக்கொண்டே, நான் இவ்வாறு சிந்திக்கலானேன்: 'பிரிட்டிஷார் என்னைத் தூக்கிலிட விரும்புகிறார்கள். அப்படியானால், இதுவே என்னுடைய கடைசி ஸிகரெட்டாகும். ஆனால், எப்படியாவது தப்பித்து வெளியேறினேனானால், இந்த ஞாபகத்தை மறவாதிருக்க வேண்டும். ஆகையால், மற்றொரு ஸிகரெட்டை நான் தொடுவதேயில்லை.' அவ்வாறே தப்பித்து வெளி வந்துவிட்டேன் என்பதுதான் உங்களுக்குத் தெரியும். அதிலிருந்து நான் ஒருபோதும் புகை குடித்ததில்லை."

1930-ஆம் ஆண்டு ஸர்தார் வல்லபாய்க்கும் இதேமாதிரி ஒரு சங்கதி நிகழ்ந்தது. முதன் முதலாக அப்போதுதான் அவர் கைதியானார். அவர் தூக்குத் தண்டனை விதிக்கப்படவில்லை. அவரது சிறைவாசக்காலம் மிக அற்பமாகும்—மூன்றே மாசந்தான். தம்மைக் காவல் செய்து சென்ற போலீஸாரிடம் ஸிகரெட் வாங்கிக்கொள்ள, அவர் மறுத்துவிட்டார். அதிலிருந்து புகையிலையை, சர்தார் ஒருபோதும் தொடுவதில்லை.

மௌலானாவோ பதினைந்து மாத காலம் ஸிகரெட்டேயில்லாமல் வாழ்ந்தார். ஆனால், விடுதலையடைந்த நிமிஷத்திலேயே ஒரு ஸிகரெட்டைக் குடிக்கத் தொடங்கிவிட்டார். மீரட் சிறையில், ஸிகரெட் குடிக்கலாம் என்று அவரை அதிகாரிகள் அனுமதித்தார்கள். அதை வேண்டாமென்று அவர் மறுக்கவில்லை.

மௌலானா மிக ஒழுங்கான பழக்கங்கள் உடையவர். அதிகாலையில் படுக்கையைவிட்டு எழுந்திருந்துவிடுவார். ஸிகரெட் குடிப்பதைத் தவிர, வேறே எந்தச் சிறு துர்ப்பழக்கங்களும் அவரிடமில்லை. தமாஷாக்கள் பார்க்க, அவர் செல்வதில்லை. ஆடம்பரங்களையோ ஊர்வலங்களையோ அவருக்குப் பிடிக்காது. விருந்து முதலியவற்றுக்கு அழைப்பு வந்தால், அவர் மறுத்துவிடுவார். நேர்த்தியாயும் மெருகிட்டாற் போலவும் பேசுவார். தெருப் பிரசங்கிகளுக்குச் சில வன்மைகளுண்டு; குறைகளுமுண்டு. இந்த இரண்டுமே அவரிடம் கிடையாது. விவாதங்களின்போது, அவர் கூறும் அபிப்பிராயங்கள் ரொம்ப மதிப்புள்ளவையாயிருக்கும். கமிட்டிக் கூட்டங்களில்தான், அவருடைய பேச்சு மிகச் சிறப்பாயிருக்கும். நேரடியாய், எளிமையாய், கூர்ந்த வாக்கு வன்மையோடு பேசி, சபையோரைத் தம் வசமிழுக்க வல்லவர் அவர்; ஆயினும், பொது ஜனங்களின் மனதைக் கவரும் இயல்புடையவர் அல்ல.

விமானத்தில் வந்த ஸ்பெஷல் படம்



இத்தாலிக்குச் சொந்தமான டிரிபோலியை பிரிட்டிஷ் யுத்தக் கப்பல்களும் விமானங்களும் தாக்கும் ஒரு கற்பனைச் சித்திரம்





தினசரி இதே பேச்சுதான்! முதலில் ஜலம் கொட்டுகின்றது. பின்பு சொட்டு சொட்டாக விழுகின்றது. கடைசியில் நின்று விடுகிறது. பிறகுதான் கஷ்டம். வீட்டு வேலைகளுக்கு போதிய ஜலம் இராது. ஸ்நானத்திற்கோ அல்லது தோட்டங்களுக்கோ ஜலம் கிடையாது. டெமிங் "மார்வல்" பம்புகளை அமைத்தால் இவ்வளவு கஷ்டமிராது. தண்ணீர் தட்டே ஏற்படாது. இன்றே இதை அமைத்துக் கொள்ளுங்கள்.

13 MAR 1942

டெமிங் "மார்வல்" பம்பு

இதர விவரங்களுக்கு எழுதவும்:

☆

ராயல் ஸைகிள் & மோட்டார் கம்பெனி

எலெக்ட்ரிக் மோட்டார் — சகல வித பம்பு வியாபாரிகள்

13-14, பிராட்வே :: மதராஸ்

பிராஞ்சுகள்: கோச்சி & மதுரை



ஓடியன் புதிய வெளியீடு
T.S.துரைராஜ் - N.S.கிருஷ்ணன் பாடிய
சகுந்தலை
டாக்கீ ரிகார்டு
C.A.1403
வெகுதூரம் கடல்தாண்டி
இன்னிக்கு காலையிலே
G.H.RAO
SARASWATHI STORES, MADRAS.

ஓரங்க நாடகம் :

சிற்றன்னை யென்றால், கொடுமையின் அவதாரமா என்ன? லட்சுமியின் கதையைப் பாருங்கள்....

மனச் சாந்தி — சரோஜா

[கோபாலையரின் வீடு. கூடத்தில் அவர மனைவி லட்சுமி கட்டிலில் படுத்திருக்கிறாள். அவர்களுடைய பெண் வத்ஸலை, பக்கத்தில் உட்கார்ந்திருக்கிறாள்.]

லட்சுமி : (பலமாக இருமிக் கொண்டே) வத்ஸலை, என் கண்ணே! உடம்பை என்னமோ செய்கிறதடி. உன் அப்பா இல்லையா? பாலன் காலேஜிலிருந்து வந்துட்டானா? (திரும்பிக் காலண்டரைப் பார்த்துவிட்டு) பங்குனி இருபது தேதியாடீ? அவர் நெஞ்சழுத்தத்தை என்ன சொல்ல! கண் தெரியலையா அவருக்கு? ஏதடா, இருபது வயசான பெண்ணை, சிறையில் வைக்கிற மாதிரி, வீட்டில் அடைத் திருக்கிறோமே என்று...(ஆயாசத்தால் கண்ணை மூடிக் கொள்கிறாள்.)

வத்ஸலை : சித்தீ! சித்தீ! பால் தரட்டுமா? பேசாதேன்னுக் கேட்கமாட்டேங்கறயே! பிராப்தம் வரப்போ நடக்கிறது. சித்தீ! கண்ணைத் திற. வீணை வாசிக்கட்டுமா? பாட்டு என்றால் பிடிக்குமே உனக்கு.

லட்சுமி : (கண்ணைத் திறந்து பார்த்துவிட்டு) ஏண்டி பூவே வைச்சுக்கலை? வாடிக்கைக்காரி கொண்டு வரலையா? உனக்குப் பிடிச்சால் தானே பூ வைச்சுக்க. என்ன சொன்னே? வீணை வாசிக்கட்டுமான்னு தானே? வாசி யடி. உன் பாட்டும்......கதையும்—அந்தப் பகவானுக்குத்தான் கண் இல்லையோ!

[நீர் வழியும் கண்களுடன், வத்ஸலை வீணை வாசிக்கிறாள். 'ஆண்டவனே உன்னை நம்பினேன்' என்ற பாட்டு ரீங்காரம் செய்கிறது. லட்சுமி மெய் மறந்து கையைக் கூப்பி நமஸ்கரிக்கிறாள் வீணையின் சப்தம் கேட்டு, கோபாலையர் உள்ளே வருகிறார்.]

கோபாலையர் : என்ன இது தலை வேதனையாய்! உன்னை யார் வாசிக்கச் சொன்னது? எடுத்து வை. அவளுக்கு அதிர்ச்சியே கூடாதுன்னு, டாக்டர் படிச்சுப் படிச்சுச் சொல்றார். 'டும், டும்'னு வீணை!

லட்சுமி : நீங்க எதுக்காகக் குழந்தையைக் கோவிச்சுக்கிறயள்? இன்னும் எத்தனை நாள் அவள் பாடறதைக் கேட்கப் போறேன். நீங்கதான் காலா காலத்திலே அவளுக்குக் கல்யாணம்னு பண்ணாமே, காலத்தைக் கடத்தறேள். அதைத்தான் பாவி கண்ணால் பார்க்க முடியாது போலிருக்கு. பாட்டைக்கூட என் வாண்டாங்கணும்?

கோபாலையர் : சரி சரி......உன் துணப்பல் போரும். எனக்குத் தெரியாத யோசனை! கவர்மெண்டில் முட்டாள் தனமாய்ச் சம்பளம் கொடுக்கலை எனக்கு. எத்தனை வரன் வந்தாலும் பிடிக்கலையே அவளுக்கு; நான் என்ன பண்ண? டாக்டர் வந்து 'பிளட் டெஸ்ட்' (ரத்த சோதனை) பண்ணணும்கிறார். நீ பாட்டுக்கு இரைச்சல் போட்டுண்டு இருக்காதே.

[வத்ஸலை வீணையை உறையில் மாட்டி வைத்துவிட்டு, விளக்கேற்றப் போகிறாள். காலேஜிலிருந்து பாலன் வருகிறான்.]

லட்சுமி : ஏண்டா இத்தனை நாழி? நாலு மணிக்கு விட்ட காலேஜில் இருந்து ஆறு மணிக்கு வரயே! வீட்டிலே நான் செத்துக்கிடந்தா, என்ன பண்றது? உன் அப்பா சிடுமூஞ்சித்தனத்துக்கும்......உன் சவரணைக்கும், இந்தத் தெய்வம் என்னைக் கொண்டு போகாமே......

பாலன் : உஸ்ஸ்.......இரையாதே, அம்மா! காலேஜிலே படிப்போடு போச்சா? இன்னிக்கி 'லிட்டரரி யூனியனி'ல் லெக்சர் (இலக்கியச் சங்கத்தில் பிரசங்கம்); நாழியாயிடுத்து. இப்போ ஒனக்கு என்ன வேணும், சொல்லு.

லட்சுமி : எனக்கு என்ன வேண்டிக் கிடக்கு. நீ போய்க் காப்பி சாப்பிடு. வத்ஸலை உள்ளே யிருக்கா. அவளோடு ஏதாவது பேசிண்டு இரு, போ. குழந்தை தனியாய் மொட்டு......மொட்டுன்னு! அதன் தலை எழுத்து.

[வத்ஸலை பாலனுக்கு டிபன் கொடுத்துவிட்டு, ஒரு பக்கமாய் நிற்கிறாள். கண்களிலிருந்து நீர் வழிகிறது.]

பாலன் : என்ன, வத்ஸலை? ஏன் அழறே? அப்பா ஏதானும் கோவிச்சிண்டாரா? அவர் குணந்தான் தெரியுமே. அம்மா ஒண்ணும் சொல்லலையே?

வத்ஸலை (தேம்பிக் கொண்டே) : எனக்கு உலகமே பிடிக்கலை, பாலா! சித்தி என்னைக் கோவிச்சிண்ட நாள் உண்டா? என் அதிர்ஷ்டம்தான் அவளை வியாதி பிடுங்கித் தின்கிறது. அப்பாவுக்குத்தான் கோபம். எந்த வரன் வந்தாலும் வேண்டாங்கிறேனாம். நான் என்ன பண்ண? என் மனசை நீ அறிவாய். ஐயோ! நான் என்ன பண்ண?

பாலன் : இதுக்கா அசடுமாதிரி அழறே?... ஆனால்...

[லட்சுமியின் குரல், "பாலா! பாலா!" என்று கேட்கிறது.]

வத்ஸலை (பாலன் கையைப் பிடித்து): என்ன

நீர்வழியும் கண்களுடன், வத்ஸலை வீணை வாசிக்கிறாள்

பாலா! சமாசாரத்தைச் சொல்லிட்டுப் போயேன். என்ன விஷயம்?

பாலன்: ஒண்ணுமில்லை; வழியிலே சீனுவைப் பார்த்தேன்.

வத்ஸலை: அவரையா? அவர் என்ன சொன்னார்? (இத்தனை நேரம் அழுது சிவந்திருந்த கண்கள் ஒளியோடு பிரகாசிக்கின்றன.)

பாலன்: 'வத்ஸலைக்கு இந்த வருஷம் கல்யாணம் பண்ணலையா?' என்று கேட்டான். 'பண்ணணும்' என்று நான் சொன்னேன். 'வரன் நிச்சியமாயிடுத்தா?' என்றான்.

[லட்சுமியின் குரல் மறுபடியும்' "பாலா! வத்ஸலை!" என்று கேட்கிறது.]

வத்ஸலை: வளர்த்தாமே சீக்கிரம் சொல்லேன்; சித்தி கூப்படறாளே!

பாலன்: 'உங்கப்பாவுக்கு நான் லட்சியமாய்த் தோணலை யப்பா. மாசம் நாற்பது ரூபாய்தானே சம்பளம் என்கிற யோசனை போலிருக்கு. நான் படிச்சவனில்லையா? நாளைக்கே சம்பளம் உசராதா? வத்ஸலைக்கு மனசு இருக்கச்சே ஏன் தட்டிக் கழிக்கணும்?' என்றான். நிஜமாவே உங்கிட்ட அவ்வளவு அன்பு அவனுக்கு.

வத்ஸலை: வேறே ஒண்ணும் சொல்லலையா?

பாலன்: (சிரித்துக் கொண்டே) இந்தா, இந்தக் கடிதாசியை உன்கிட்டக் கொடுக்கச் சொன்னான்.

[காகிதத்தை நீட்டிவிட்டு, பாலன் லட்சுமி யிடம் போகிறான்.]

வத்ஸலை: (கடிதத்தைப் படித்துவிட்டு) என்ன அன்பு! என்ன ஆசை! படிச்ச மேதாவி இல்லையா அவர். 'முடவன் கொம்புத் தேனுக்கு ஆசைப்படற மாதிரி என் ஆசை' என்று எழுதியிருக்காரே. 'அப்பாவை ஒரு வார்த்தை நீ கேளேன்' என்கிறாரே. நினைச்சாலே பயமாயிருக்கே. அம்பிகே! தாயே! உன் கிருபை என்னிக்கி வருமோ?

[கடிதத்தைக் கண்களில் ஒற்றிக் கொள்ளுகிறாள். கூடத்தில் டாக்டரின் குரல் கேட்கிறது. வத்ஸலை உள்புறமிருந்து பார்த்துக்கொண்டு நிற்கிறாள்.]

டாக்டர்: உடம்பு எப்படி யம்மா இருக்கு? நேத்திக்குக் கொடுத்த இஞ்சக்ஷனால் ஏதாவது குணமா? இந்த உடம்பில் வீணாய் மனசை அலட்டிக்கப்படாது. எல்லாம் நடக்கிறபடி நடக்கும்னு தைர்யமா யிருக்கணும்.

கோபாலையர்: நீங்களே சொல்லுங்கோ, டாக்டர்! வாய் ஒரு நிமிஷமாவது பேசாமே இருக்கணுமே; யாரையாவது இழுத்து வைச்சுப் பேசறா. இந்த மாதிரி பண்ணினா எவ்வளவு பணம் கொட்டினாத்தான் உடம்பு குணப்படும்?

லட்சுமி: டாக்டர்! நீங்க என் உடன் பிறந்தவர் மாதிரி. நீங்களே சொல்லுங்கோ; இந்த வீட்டுக்கு நான் கால் வைச்சுப் பதினெட்டு வருஷமாச்சு; ஏன், பத்தொன்பது இருபது கூட இருக்கும். அப்போ வத்ஸலை மூணு மாசக் குழந்தை. இத்தனூண்டு இருந்தா. தாயில்லாத அந்தக் குழந்தையைக் காப்பாத்தறது எவ்வளவு கஷ்டம்னு உங்களுக்குத் தெரியாதா, என்ன? வத்ஸலையை மூத்தாள் பொண்ணுன்னு நான் நினைக்கவேயில்லை. என் பையன் பாலன்கிட்டே கூட, அத்தனை ஆசை இல்லை எனக்கு. அவள் புத்திசாலித்தனத்துக்கு, காலாகாலத்திலே கல்யாணம்னு ஒண்ணு ஆயிட்டால் தேவலை. நான் கண்ணை மூடிண்டா, அப்புறம் 'பாட்டி, அத்தை'யின்னு யாரிருக்கா அவளுக்கு? பாலன் புருஷப் பிள்ளை; எப்படியாவது பிழைச்சுக்குவன். (மூச்சுத் திணறுகிறது.)

டாக்டர்: நீங்க இப்படி அதிகமாய்ப் பேசப்படாது, அம்மா! கல்யாணம் பண்ணினால் போறது. கோபாலையருக்குத் தெரியாதா? தானே செய்யறார்.

[லட்சுமிக்கு வத்ஸலை மருந்து கொடுக்க வருகிறாள்.]

டாக்டர்: என்ன வத்ஸலையா? ஏனம்மா இப்படி இளைச்சுட்டே? உடம்புக்கு ஒண்ணுமில்லையே?

வத்ஸலை: (தலையைக் குனிந்து கொண்டே) ஒண்ணுமில்லை. ஆத்தில் அலைச்சல். காப்பி தரேன். சாப்பிட்டுட்டுப் போகலாம்.

டாக்டர்: காப்பி கிடக்கு, அம்மா! நீ கல்யாணச் சாதம் போடப் போறதில்லையா? சித்திக்கு உன் கவலை தாம்மா பெரிசாயிருக்கு...உன் கல்யாணமாயிட்டால், அவளுக்குப் பாதி வியாதி தீர்ந்துடுமின்னு எனக்குத் தோணறது......

[வத்ஸலை பேசாமல் உள்ளே போகிறாள். பாலன் டாக்டரோடு, 'கேட்' வரையில் ஏதோ பேசிக்கொண்டு போகிறான். அவன் திரும்பிய பிறகு, டாக்டர் கோபாலையரைக் கூப்பிடுகிறார்.]

டாக்டர்: நான் ஒண்ணு சொல்றேன். இந்தக் காலத்தில் அவா அவா மனசுக்குப் பிடிச்சால்தான் பண்ணணும். நாம் என்னமோ சாஸ்திரப்படி சின்ன வயசில் கல்யாணம் பண்ணலை. வத்ஸலைக்குப் பிடிச்ச இடத்தில் பண்ணிடுங்கோளேன்.

கோபாலையர்: அவளுக்குப் பிடிச்சது எதுன்னு எனக்கு ஜோஸ்யமா தெரியும்? வாயைத் திறந்து சொன்னால் தானே. எதைக் கேட்டாலும், 'கல்யாணம் வேண்டாங்கறது' மாத்திரம் அவளுக்குச் சொல்லத் தெரியறது.

டாக்டர்: நீங்க அவள் மனசை அறியலை. ஸ்திரீகள் மனசை அறியறது கஷ்டம்னு பெரியவா சொல்லுவா. அடுத்த தெருவிலே நாராயணையர் பிள்ளை ஸ்ரீனிவாசன் இருக்கானேல்லியோ, அவனைப் பத்தி ஏதோ அபிப்பிராயம் இருக்கும் போலிருக்கு வத்ஸலைக்கு. நீங்க கேட்டுப் பாருங்கோளேன்.

கோபாலையர்: அது பழைய கதையின்னா. வேண்டாமின்னுதானே அந்த வரனைத் தள்ளினேன். அவனுக்கு வர சம்பளத்துக்கும் அவன் குடும்பம் இருக்கிற நிலைக்கும் அவனுக்குக் கல்யாணம் வேறேயா? எனக்குப் பிடிக்காமல்தான் விட்டுட்டேன்.

டாக்டர்: அதுதான் தப்பு. வரனைப் பத்தி நாம் நிச்சயிக்கப்படாது. இருபது வயசுப் பிள்ளையானால், நம் சொல்லுக்கு அடங்குவானா? பெண் மாத்திரம் என்ன தாழ்த்தி? வத்ஸலை படிச்சவள்......புத்திசாலி. அவள் இஷ்டப்படி போறதுதான் நமக்கு மரியாதை.

கோபாலையர்: (தலையைத் தடவிக் கொண்டே) என்னமோ நீங்க சொல்றேள். நாளைக்குக் கண்ணைப் பிசைஞ்சுண்டு நின்னா நம்ம மனசுதானே கஷ்டப்படும்?

டாக்டர்: (புன்சிரிப்போடு) அந்தப் பளுவைத்தான் அவளே போட்டுக்கறாளே?

கோபாலையர்: என்னமோ லட்சுமியைக் கேட்போம். ஒரு பெண், அதன் அதிர்ஷ்டம் எப்படியிருக்கோ! இதெல்லாம் யார் சொன்னது உங்களுக்கு?

டாக்டர்: பாலன்தான் சொன்னான். அவனுக்குச் சீனுகிட்ட ரொம்ப நெருக்கம் போலேருக்கு. இதெல்லாம் வளரும் குழந்தைகளின் இஷ்டப்படி நடந்துட்டுப் போகவேண்டிது. பேசாமெ அவன் அப்பாவை ஒரு வார்த்தை கேட்டுண்டு முகூர்த்தம் வைச்சுடுங்கோ.

[வத்ஸலை டாக்டருக்குக் காப்பி எடுத்துக்கொண்டு வந்தவள், சம்பாஷணையை ஒட்டுக் கேட்டுவிட்டு, திரும்பி, காப்பி

யோடு சமையலறைக்குப் போகிறாள். வழியில் பாலன் வருகிறான்.]

பாலன் : என்ன, சந்தோஷம் தாங்கலை? பாலனால்தான் காரியம் முடிஞ்சிதுன்னு தெரிஞ்சுக்கோ.

வத்ஸலை : உன்னால்தாண்டா முடிஞ்சுது. விக்கினம் வராமெ முழுக்க நடக்கணும்.

[பாலன் போனபிறகு, வத்ஸலை ஒரு மல்லிகை ஹாரத்தைத் தேவியின் படத்துக்குப் போட்டுவிட்டு, நமஸ்காரம் பண்ணுகிறாள். வாசலில் சீனுவின் குரலும், அவன் தகப்பனாரின் குரலும் கேட்கிறது.]

டாக்டர் : பழம் நழுவிப் பாலில் விழுந்த மாதிரீன்னா இருக்கு. இப்பதான் உங்களைப் பத்தி நானும் கோபாலையரும் பேசிண்டிருந்தோம். அவர் உள்ளே போயிருக்கார். உக்காருங்கோ.

நாராயணையர் : கோபாலையரின் சம்சாரத்துக்கு உடம்பு ஜாஸ்தீன்னு பாலன் சொன்னான். எப்படியிருக்கோன்னு பார்த்துட்டுப்போக வந்தேன். பாவம்! மஹாலட்சுமி மாதிரி. அப்படி ஒண்ணும் வயசும் ஆகிவிடலை. கோபாலையரின் அதிர்ஷ்டமும், குழந்தைகளின் அதிர்ஷ்டமும் எப்படியிருக்கோ?

பாலன் : ஹல்லோ சீனு! வாப்பா உள்ளே. என் கேட்டண்டையே நிக்கறே?

[சீனு தயங்கியபடி வருகிறான்.]

டாக்டர் : என்னப்பா, சீனு! பிரமோஷன் ஏதாவது உண்டா? 'வொர்க்' (வேலை) எப்படி யிருக்கு?

சீனு : இப்பகூட ஒரு 'டெஸ்ட்' பாஸ் பண்ணினேன். கஷ்டப் பட்டால் பலன் கிடைக்காதா?

[கோபாலையர் உள்ளே யிருந்து வருகிறார்]

கோபாலையர் : வாங்கோ நாராயணையர்வாள்! ரொம்பதூரம் வந்துட்டயளே. சௌக்யந்தானே? ஆத்துலே படுத்துண்ட அப்புறம், உங்களை யெல்லாம் பார்க்கவே முடியலை.

நாராயணையர் : ஆமாம், சம்சாரத்திலே எங்கே முடிகிறது? உங்களுக்கும் ரொம்பச் சிரமந்தான். வீட்டில் நோயாளியைப் பார்த்துக்கிறதுன்னா லேசா?

கோபாலையர் : நான் பார்த்துக்கிறதாவது! எல்லாக் காரியமும் வத்ஸலைதான்.

நாராயணையர் : எங்க ஆத்தில்கூடச் சொன்னா. குழந்தை புத்திசாலி. பெண்ணாய்ப் பிறந்தால் மாத்திரம் போருமா? எல்லாம் பொருந்தி யிருக்கணும்.

[வீட்டுக்குள் லட்சுமிக்கும் வத்ஸலைக்கும் சம்பாஷணை நடக்கிறது.]

லட்சுமி : வத்ஸலை! யாரம்மா வந்திருக்கா?

வத்ஸலை : அடுத்த தெரு நாராயண மாமா வந்திருக்கா, சித்தீ!

லட்சுமி : ஹூம்......அவர் பிள்ளை சீனுகூடத் தங்கமான பிள்ளை. நான் பார்த்ததில்லையா என்ன? உன் அப்பா ஆகாசத்தைப் பார்க்கிறார்.

வத்ஸலை : (சந்தோஷத்தோடு) அப்பாவுக்குக்கூட மனசு திரும்பிட்டாப்பிலே இருக்கு, சித்தீ! வாசலில் டாக்டரிடம் சீனுவைப்பத்தி என்னமோ பேசிண்டிருந்தா.

[யாரோ வரும் சப்தம் கேட்கிறது. வத்ஸலை மறைவாக நிற்கிறாள். பாலன் சீனு, நாராயணையர், கோபாலையர், டாக்டர் ஆகியவர் வருகிறார்கள்.]

நாராயணையர் : என்ன, அம்மா! உடம்பு எப்படியிருக்கு? தைர்யமாயிருங்கோ.

[லட்சுமியின் கண்களிலிருந்து நீர் வழிகிறது.]

லட்சுமி : என் தைர்யத்தில் என்ன இருக்கு! பகவான் கிருபை இருக்கணும். நான் என்னமோ பிழைக்கப் போறதில்லை. எல்லோரும் நிக்கறயளே! பாலா! நாற்காலியைப் போடேன். வயசாகிறதே தவிர, மரியாதை மட்டுத் தெரியலைடா உனக்கு?

சீனு : நீங்க உடம்பை அலட்டிக்காதீங்கோ, மாமீ! நின்னால் என்ன, பரவாயில்லை.

லட்சுமி : சீனுவா, அப்பா? சௌக்யமா? வேலை ஆச்சாமே?

டாக்டர் : (சிரித்துக் கொண்டே) உங்களுக்கு ஒரு நல்ல சேதி சொல்லப் போறேன். தைரியமா யிருப்பேளோ இல்லியோ?

லட்சுமி : (கண்களை அகல விழித்து) சொல்லுங்கோ; பகவான் இருக்கான்.

டாக்டர் : வத்ஸலைக்குக் கல்யாணம் நிச்சயமாயிடுத்து. சீனுவுக்குக் கொடுக்க, கோபாலையர் சம்மதிச்சுட்டார். இனிமே நீங்க கவலை வைச்சுக்கப்படாது.

லட்சுமி : நிஜமாவா? 'தெய்வம் மானுஷ ரூபேணா' இன்னு சொல்வாளே, அது வீணில்லை. எல்லாரும் உக்காருங்கோ. குழந்தையை வீணை வாசிக்கச் சொல்றேன். அவள் பொறுமைக்கு......

[வத்ஸலை வெட்கம் நிறைந்த முகத்தோடு வீணை வாசிக்கிறாள். ஆனந்தத்தால் குரல் கம்முகிறது.]

பாலன் : (விஷமமாய்) சந்தோஷத்திலே பாதி நாளைக் கிருக்கட்டும். சரியாய்ப் பாடு.

[வத்ஸலை கோபம் வந்தவளைப் போன்ற பாவனையுடன், பாலனை ஏறிட்டுப் பார்க்கிறாள். சீனுவின் விழிகளுடன் சந்திக்கிறது அந்தப் பார்வை. 'சடா'ரென்று தலை குனிகிறது. சீனுவும் புன்சிரிப்போடு வேறு பக்கம் திரும்புகிறான்.]

லட்சுமி : என் குறை யெல்லாம் தீர்ந்துடுத்து. பாக்கிக் கார்யத்தைப் பகவான்தான் நடத்தணும். வத்ஸலை! உன் பொறுமை உனக்குத் துணை இருந்தது. எல்லோரும் கல்கண்டு எடுத்துக்குங்கோ.

[லட்சுமி மயக்கமடைகிறாள்.]

வத்ஸலை : சித்தீ, சித்தீ!

சீனு : மாமீ! கண்ணைத் திறவுங்கோ. இதுக்குள்ளே அதிர்ச்சி ஏற்பட்டுடுத்தே! ஏதாவது கொடுத்தால் தேவலை.

[வத்ஸலை பால் கொண்டுவந்து வாயில் விடுகிறாள். லட்சுமி கண்ணைத் திறந்து, அவள் முகத்தைப் பரிவோடு தடவிக் கொடுக்கிறாள். நாராயணையரும் சீனுவும் போகிறார்கள்.]

டாக்டர் : திரும்பத் திரும்ப, ஒரே விஷயத்துக்கு மனசைக் கொண்டு போகாதீங்கோ. நான் காலமே வரேன்.

[அன்று இரவு ஒரு மணி. லட்சுமியின் பிதற்றல் அதிகமாகிறது.]

லட்சுமி : சீனு! வத்ஸலை சமத்து. அவளை நன்னா வைச்சுக்கோ......பாலா! ......உன் சின்னக் கையால் சம்பாதிச்சு நான்......இப்பவாவது உங்க மனசு திரும்பித்தே......

கோபாலையர் : லட்சுமீ, லட்சுமீ! பேசாமல் இரேன். டாக்டரைக் கூப்பிடட்டுமா?

லட்சுமி : (ஈனஸ்வரத்தில்) தாயே! நான் உன்னைப் பூஜை பண்ணினதுக்கு இந்த மகராஜிப் பட்டம் கிடைச்சுதே. என் குழந்தைகளைக் காப்பாத்தடி,

அம்மா! அதோ வந்திருக்காளே வத்ஸலையின் அம்மா. வத்ஸலே!......பாலா!......நீங்க எனக்காக அழாதிங்கோ. உங்களிடம் பதம் பெத்துப் போறேன். ......நாராயணா!......அம்பிகே!......

[லட்சுமியின் கண்கள் மூடிக்கொள்கின்றன.

பாலன்: அம்மா! அம்மா! என்ன இது?......டாக்டருக்கு டெலிபோன் பண்ணட்டுமா, அப்பா?

கோபாலையர்: வேண்டாண்டா......டாக்டரும் மருந்தும் இனி அவளுக்குத் தேவையில்லேடா! லட்சுமி!......லட்சுமி!......எனக்கு யாரடி இருக்கா?

வத்ஸலே: (லட்சுமியின் பாதங்களைக் கண்ணில் ஒற்றிக்கொண்டு) சித்தி! உன்னைப்போல் யார் வருவா? நீ வைச்சிருந்த ஆசைக்குக் கல்யாணத்தைக் கண்ணால் பார்க்காமே போயிட்டயே! கல்யாணம் நடக்கும் என்கிற விஷயமே உன் மனசுக்குச் சாந்தி தந்துடுத்தா! என் கல்யாணமானல், உன் வியாதி கொஞ்சம் தீருமின்னு டாக்டர் சொன்னரே; அதுக்குள்ளே உன் வியாதியெல்லாம் தீர்ந்துடுத்தா! (கண்ணீர் விடுகிருள்.)

கோபாலையர்: (வத்ஸலையின் கண்ணீரைத் துடைத்துக்கொண்டு) அழாதே, அம்மா வத்ஸலே! அழாதே. அவள் புண்யவதியாய்ப் போயிட்டா. அவள் மனசைப்போல் நீ க்ஷேமமாய் இருந்தால் அது போரும் எனக்கு......ஆனல்......லட்சுமி!......லட்சுமி!......

[விளக்குச் சுடர் விழுகிறது. விர்ரென்று காற்று வீசுகிறது. வண்டொன்று, வீணைகானம்போல் ரீங்காரம் செய்கிறது. லட்சுமியின் முகத்திலே சாந்தி நிறைந்த புன்முறுவல் தவழ்கிறது.]

'நாம் ஏன் சிரிக்கிறோம்?' என்ற கேள்விக்கு, டாக்டர் வில்லியம் மிக்டகல் என்பவர் மிகவும் திருப்திகரமான தொரு பதில் தந்திருக்கிருர்.

சிரிப்பு என்பது அழுகைக்கு மாற்றாகும். நாம் சிரிக்கிற அநேக சந்தர்ப்பங்களில், அப்படிச் சிரிக்காவிட்டால் அழுது விடுவோம். கூட்டத்தோடு வாழ விரும்பும் சுபாவமுடையவன் மனிதன். அத்தகைய வாழ்வுக்கு அனுதாபம் மிக முக்கியமாகும். ஆனல், எதற்கெடுத்தாலும் அனுதாபம் செலுத்திக் கொண்டிருந்தால், மனிதன் பெரிய அழுமூஞ்சியாகி விடுவான். அந்த அபாயத்திலிருந்து நம்மைக் காப்பாற்றி யிருக்கும் அற்புத வரம் நகைப்புத்தான் என்கிருர் அந்த டாக்டர்.

உடம்பும் மருந்தும்

ஐக்கிய அமெரிக்காவிலே ஒரு விநோத வழக்கு நடந்தது. ஸ்ரீமதி பாலின் ஸ்டெம்மெர் என்ற ஒருத்தி. வயது 45. அவளுக்கு நோவும் மயக்கமும் மிகுந்திருந்தது. டாக்டர் வில்லியம் கிளீன் என்ற பிரபல ரேடியோ டாக்டரிடம் சென்றாள். அவளுடைய மர்மஸ்தானத்தில் உள்ளூர ஏதோ கட்டி இருப்பதாகவும், எக்ஸ்-ரே மூலம் அதை அகற்றிவிடலாமெனவும் டாக்டர் சொன்னர். அவள் இசைந்தாள். நோய் சொஸ்தமாயிற்று. ஆனல், ஒரு மாசத்துக் கெல்லாம் ஸ்ரீமதி ஸ்டெம்மருக்கு ஒரு குழந்தை பிறந்தது—செவிடும் குருடுமான முட்டாள் குழந்தை!

டாக்டரின் மீது ஸ்ரீமதி ஸ்டெம்மர் தன் சார்பாகவும் தன் குழந்தையின் சார்பாகவும் ஒரு வியாச்சியம் தொடுத்தாள். "என் கர்ப்ப சக்தி பல வருஷங்களுக்கு முன்பே நின்று விட்டது. எனது கடைசிக் குழந்தைக்கு 17 வயது. இந்த ரேடியோ வைத்தியமே எனக்கு மூடக் குழந்தை பிறந்ததற்குக் காரணம். அதற்கு இந்த டாக்டர் நஷ்ட ஈடு கொடுக்க வேண்டும்" என்பது அவள் வாதம். கோர்ட்டிலே அது பலித்து விட்டது. குழந்தையைப் போஷிக்கப் பெற்றோருக்கு 5000 பவுனும், குழந்தையின் வருங்காலம் நாசமானதால் அதற்கு 11,600 பவுனும் நஷ்ட ஈடாக டாக்டர் கொடுக்க வேண்டுமென்று தீர்ப்பாகி விட்டது. டாக்டர் அப்பீல் செய்யப் போகிருர்.

ரத்தப் பொடி தயாரிக்கும் துழாய்கள்

பாவம்! உபகாரம் செய்ய வந்த டாக்டருக்கு இப்படி வந்து சேர்ந்தது ஒரு விபரீதம்!

ரத்தப் பொடி

யுத்தகளத்தில் காயம் பட்டு ரத்தச் சேதம் ஏற்படுபவர்களுக்கு, பிறரது ரத்தத்தை எப்படி உதவுவது என்ற பிரச்னை டாக்டர்களுக்கு இது வரையில் மிகப் பெருங் கவலையா யிருந்தது. இப்போது அதற்கொரு வழியை, பிலடெல்பியாவில் உள்ள டாக்டர் ஸ்டுவேர்ட் மட் என்பவரும் வேறு சிலரும் சேர்ந்து கண்டு பிடித்துள்ளார்கள்.

சுத்த ரத்தமும் போதிய பலமும் உள்ளவர்களை ரத்த தானத்துக்காக யுத்த களத்துக்கு அழைத்துச் செல்வதென்றால், போதிய ஆட்கள் கிடைப்பதில்லை. சுத்த ரத்தத்தைச் சேகரித்து ரிபிரிஜெரேட்டரில் பாதுகாத்து யுத்தகளத்துக்குக் கொண்டுசென்ருல், அது பத்து நாள்களுக்குப் பிறகு கெட்டுவிடுகிறது.

ஆகையால், விலைக்கு வாங்கும் ரத்தத்தை இறுகச் செய்து, அப்படி இறுகியதைப் பொடியாக்கி, சிறு சிறு சீசாக்களில் அடைத்து அனுப்பும் புதிய முறையை மேற்படி டாக்டர்கள் கண்டு பிடித்திருக்கிருர்கள். தேவைப்பட்டபோது, அந்த ரத்தப் பொடியைச் சுத்த ஜலத்தில் போட்டுக் கரைத்து, காயப்பட்டவனுக்கு 'இஞ்செக்ட்' செய்து விடலாமாம்.

காருக் கருணையின் குணம்

நமது கறிகாய் வகைகளில் உத்தமமான குணமுடைய ஒன்று காருக் கருணை யாகும்.

இந்தக் கிழங்கைச் சமைத்துப் புசிக்க, மூல வியாதி தீரும். நசுக்கிக் கட்டிகளுக்கு வைத்துக் கட்டினல், அவை கரையும். வேகவைத்து, உலர்த்திப் பொடித்து மாவாக்கி, சீதபேதிக்குக் கொடுக்கலாம்.

அந்தப் பொடியை வேறு மருந்துகளுடன் சேர்த்து லேகியமாகக் கிளறி, சரும வியாதிகளுக்கும் கொடுக்கலாம் என்று சென்னை சர்க்காரின் பிரசுரமான குணபாடம் கூறுகிறது.

நகைச் சுவை

"மிக உயர்ந்த உணர்ச்சிகளும் அனுதாபமும் நிறைந்த நரம்புகளை மனுஷனுக்கு இயற்கைத் தேவி அமைத்துள்ளாள். துயரமும் துன்பமும் நிறைந்த உலகில் அந்த நுட்பமான நரம்புகளைக் காப்பாற்றுவது எப்படி? அவற்றை மரத்துவிடச் செய்யும் ஏதேனும் ஒரு லாகிரியையும் இயற்கைத் தேவி சிருஷ்டித்திருக்கலாம். ஆனல், அவள் அப்படிச் செய்யாமல் துன்பத்தை இன்பமாக மாற்றும் ஒரு சூட்சமத்தையே சிருஷ்டித்து விட்டாள். அதுதான் நகைச்சுவை என்பது" என்கிருர் டாக்டர் ஆர். பி. காட்டெல்.

Fashion Insists on-
Smartness !

FOR MODERN SAREES

SHOP AT

RANGOON HALL

RANGOON MERCHANT

அழகு செய்வது தற்கால நாகரீக ஆடைகளே !

உயர்தர ஜவுளிக்கு

உத்திரவாதமுள்ள இடம்

ரெங்கோன் - - - ஹால்

கு. அ. அங்கமுத்து முதலியார்

பட்டு ஜவுளி வியாபாரம்

அம்மன் சன்னதி :: காரைக்குடி

Your **EASTERN BUSINESS**

is safe with us. We transact every description of Banking & Exchange business. We offer Special facilities for Collection on Malaya. Promptness & Service are our watchwords.

INDIAN OVERSEAS BANK LTD.

ஹெட் ஆபீஸ் :

மதராஸ்

பிராஞ்சுகள் :

கன்னனூர்	சிங்கப்பூர்
கோயம்புத்தூர்	புதுக்கோட்டை
தேவகோட்டை	ரங்கூன்
காரைக்குடி	சிவகங்கா
குலாலம்பூர்	மேட்டூர் டாம்
பினங்கு	தலைச்சேரி (சப் ஆபீஸ்)

மேல்நாட்டு ஏஜண்டுகள்

தி சேஸ் நேஷனல் பாங்க் ஆப்
தி ஸிடி ஆப் நியூயார்க்
லண்டன் & நியூயார்க்

உங்கள் விலை யுயர்ந்த சாமான்களை
Safe Deposit Vault-இல்
பத்திரப் படுத்துங்கள்

இந்தியன் ஓவர்ஸீஸ் பாங்கு

லிமிடெட்

எஸ்ப்ளனேட் :: மதராஸ்



PSG

P. S. G. சாமான்கள் உயர்தர உலோகங்களைக் கொண்டு, நவீன சாதனங்கள் மிகுந்த தொழிற் சாலையில் சிறந்த வேலைப்பாட்டுடன் செய்யப்படுவதால், அவைகளின் சிறப்பு விற்பனையாளர்களால் மட்டுமின்றி, விவசாயிகளாலும், மற்றும் அவற்றை உபயோகித்தவர்களாலும், தேசம் முழுவதும் பரவி வருகிறது.







தயார் செய்பவை

விவசாயக் கருவிகள்	டெக்ஸ்டைல் இயந்திரங்கள்
விவசாய இயந்திரங்கள்	வீட்டுச் சாமான்கள்

நாங்கள் தயார் செய்பவைகளின் ஜாபிதாவிற்கும், விபரங்களுக்கும் எழுதுங்கள்.

விற்பனை ஸ்தலங்கள் :—

(1) கார்டன் உட்ராப் & கோ., (மதராஸ்) லிமிடெட், தபால் பெட்டி நெ. 42 (கிளை ஆபீஸ்கள் : விசாகபட்டணம், விஜயநகரம், காகிநாடா & பெஜவாடா), மதராஸ். (2) V. குருசாமி, சைதாப்பேட்டை, மதராஸ். (3) ஜெனரல் & மெஷினெரி கம்பெனி, ஆஸ்மானியா பில்டிங்ஸ், ஸ்ரீ நரசிம்ம ராஜா ரோடு, பங்களூர். (4) வேலு & கோ., அருணாசல ஆசாரி வீதி, சேலம். (5) நியோ எலெக்டிரிக் சர்வீஸ், திருவண்ணாமலை. (6) S. ராமநாத ஐயர், தென்காசி. (7) K. L. சங்கம நாயுடு, மகாலட்சுமி விலாஸ் ஷோரூம்ஸ், தேனி. (8) R. M. S. ராமசாமி நாயுடு, அருப்புக்கோட்டை. (9) P. S. G. C. I. கிளை ஆபீஸ், தெற்கு மாசி வீதி, மதுரை. (10) P. S. G. C. I. கிளை ஆபீஸ், 113, தளி ரோடு, உடுமலைப்பேட்டை. (11) P. S. G. C. I. கிளை ஆபீஸ், பாண்டி ரோடு, விழுப்புரம். (12) ஏஷியன் டெக்ஸ்டைல் இஞ்சினீயரிங் கார்பரேஷன், ஸர் பிரோஷா மெத்தா ரோடு, பம்பாய்.

தன்னினமல்லாத ஒரு விசித்திர மனிதப் பிறவியுடன் அந்த அணில் எப்படிக் கட்டுப்பட்டிருக்க முடியும்? அதனால்தான் அப்படிச் செய்தது!

நான் வளர்த்த அணில்

ஒரு நாள் காலை பத்து மணிக்கு எங்கள் வீட்டுக் கொல்லைப் புறத்தில் அணில் குஞ்சொன்று கீழே விழுந்து கிடப்பதைக் கண்டேன். அது அன்றுதான் பிறந்ததோ என்னவோ! என் சுண்டு விரலிற் பாதியேயிருந்த அக் குஞ்சின்மீது எறும்புகள் மொய்க்க, அது விறிட்டலறியது. அதன் உடலினின்று எறும்புகளை அகற்றினேன். பிறகு, அதைக் கையிலெடுத்தேன். ஒரு வேளை அது கடித்து விடுமோ என்னும் சந்தேகம் எனக்கு உண்டாயிற்று. ஆனால், அது என் உள்ளங் கையிலே நெளிந்து புரண்டது; வேறொன்றுஞ் செய்யவில்லை.

அதை என்ன செய்வதெனத் திர ஆலோசித்தேன். குளிப்பாட்டுவதைவிட, அதற்கு உணவளித்தலை முதலில் செய்ய வேண்டிய காரியம் எனத் தீர்மானித்தேன். சிறிது பால் கொணர்ந்து, விரல் முனையில் ஒரு சொட்டுப் பாலை யெடுத்து, அந்தக் குஞ்சுக்கு ஊட்டினேன். அது ஆவலுடன் பாலைப் பருகியது. ஆனால், இந்த முறை உபத்திரவமானதென்று தோன்றிற்று. ஆகையால், ஒரு யுக்தி செய்தேன். பவுண்டன் பேனாவுக்கு மை நிரப்பும் கண்ணாடிக் குழாய் ஒன்றை எடுத்து, இந்தக் குழந்தைக்குப் பால் புகட்டும் சங்காக அதை உபயோகித்தேன். வெகு விரைவில் அதிலிருந்து பாலை, தானே உறிஞ்சிக் குடிக்க, அணில் குஞ்சு தெரிந்து கொண்டது.

பிறகு, இவ்விள வுயிரின் வாசஸ்தலப் பிரச்னையில் கருத்தைச் செலுத்தினேன். அதன் பெற்றோரிடமே அதைச் சேர்ப்பிக்க, நான் செய்த முயற்சிகள் வீணாயின. ஆதலால், நானே அதன் போஷகனாகி, அதை ரட்சிப்பதில் கவலை கொண்டேன். அணில் குஞ்சுகளைக் கண்டால் பூனைக்கு மிகவும் பிரியமென்பது பற்றி, பெரிதும் குழம்பினேன்.

பழைய கண்ணாடி விளக்குக் கூண்டொன்றை எடுத்துச் சுத்தஞ் செய்து, அதனுள்ளே மெத்தெனத் துணிகளைப் பரப்பி, அணில் குஞ்சை அதில் படுக்க வைத்தேன். அன்றிரவும் அதன் பிறகும், அணில் பெரியார் அதில் பள்ளிகொண்டு நன்றாய்த் தூங்கலானார்.

அணில் பிள்ளை சற்றே வளர்ந்ததும், பாலை நிறுத்தி, அரிசித் துணுக்குகள், திராட்சைப் பழம், பிஸ்கத் முதலியவற்றை அதற்குக் கொடுக்கத் தொடங்கினேன். அது துள்ளி விளையாடியதுடன், சாந்தமும் அடக்கமும் வாய்ந்து, நான் கூப்பிட்ட போதெல்லாம் என்னிடம் ஓடிவரும். அதை எங்கேயும் காணவிட்டால், விரலைச் சொடக்குவேன்; அல்லது படபட வெனத் தட்டுவேன். உடனே அது வீட்டுக் கொல்லையி லிருந்தோ வாயில் முற்றத்து மரத்துச்சியி லிருந்தோ, தவறாது என்னிடம் ஓடிவரும். நான் அதைத் தட்டிக்கொடுத்துக் கொஞ்சிக் குலவுவதை, அது மிக விரும்பியது.

மத்தியான நேரத்தில், சில சமயம், நான் கண்ணயர்வேன். அப்பொழுது, அது என் முகத்தருகே வந்து படுத்து, நன்றாய்த் தூங்கும். ஒரு சமயம் இச்சிறு குஞ்சு உரக்கக் குறட்டைகூட விடுவதைக் கண்டு நான் அதிசயித்தேன். அது தங்கள் சமீபத்தில் ஓடி வந்தால், என் தந்தையும் பாட்டியும் சற்றே அஞ்சி யொதுங்குவார்கள். ஆனால், உண்மையில், மனிதக் குழந்தைக்கும் இவ்வணில் பிள்ளைக்கும் அதிக பேதம் ஒன்றுமில்லை. அதற்கு நான் ஏன் சொக்கலிங்கம் என்னும் பெயரைச் சூட்டினேனோ—எனக்கே புரியவில்லை; எனினும் அந்தப் பெயர் நிலைத்து விட்டது.

நாள் செல்லச் செல்ல, அது முன்னிலும் அதிகமாய் வெளியே ஓடிப்போகத் தொடங்கிற்று. அவ்வப்பொழுது வரும்போது படபடபாகவும் மனித சிநேகிதத்தைப் பற்றிச் சிறிது அவமான முற்றது போலுங் காணப்படும். பிரியத்தாலோ வெறுப்பாலோ, ஒரு சமயம் அது என்னைக் கடித்து விட்டது. நான் கூப்பிடும் போதெல்லாம் வந்துகொண்டிருந்த வழக்கத்தையும் அது நிறுத்திக் கொண்டது. தன்னினமல்லாத ஒரு விசித்திர மனிதப் பிறவியுடன் இவ்வாறு கட்டுப்பட் டிராமல், சுதந்தரமாகத் தனது வாழ்வை நடத்தவேண்டுமென, அது ஒருவேளை கருதியிருக்கலாம்.

அதன் மனத்தினுள்ளே என்ன போராட்டம் நிகழ்ந்ததோ, எனக்குத் தெரியவில்லை. ஆனால், பல யாத காலமாய்த் தனது பெற்றோரின் ஸ்தானத்தை வகித்துவந்த ஒருவனிடம், நன்றி மறப்பது அதற்கு அவ்வளவு எளிதாயில்லை. இவ்வாறு சில காலம் சென்றது. ஒரு நாள் சரேலென ஓடிப்போன இவ்வணில் பிள்ளை, மீண்டும் என்னிடம் திரும்பி வரவேயில்லை.

எங்கள் வீட்டுப் பின்புறத்திலுள்ள கோயில் நந்தவன மரங்களைச் சில சமயம் நான் பார்த்துக் கொண்டிருப்பேன். அவைகளின் மீது அணில்கள் ஓடியாடிச் சத்தமிடும். நமது 'பைய'னும் அக் கூட்டத்தில் இருக்குமென நான் எண்ணுவேன். அது பழங்களையும் பருப்புக்களையுங் கொறித்து, மரக் கிளைப் பரப்பின்மீது துள்ளி விளையாடி, ஆனந்த பரவசத்துடன் அசைவற விழித்து நிற்கும்போது, சொக்கலிங்கத்துக்கும் என் ஞாபகம் ஒரொரு சமயம் உண்டாகத்தான் செய்யுமென, எப்படியோ நான் உறுதியாக நம்புகிறேன்.

—

'ராமகிருஷ்ணன்'

நாடு தேடிய வீரர்கள்

கிணற்றுத் தவளைகளா யிராமல் உலகைச் சுற்றினார்கள் சில தீரர்கள்; அவர்களின் அடிச்சுவடு தான் பெரிய சாம்ராஜ்யப் பாதையாயிற்று.

நாடு தேடி ஆராயும் வேலையில், பிரிட்டிஷாரை மற்றவர்கள் முந்திக்கொண்டார்களென்றுதான் சொல்ல வேண்டும். கிறிஸ்து பிறப்பதற்குப் பல்லாயிரம் வருஷங்களுக்கு முன்பே, பாபிலோனியர்கள் வானளாவி யிருந்த தங்களது நகரச் சுவர்களின்மீது ஏறி, தங்கள் உலகத்துக்கப்பால் என்னதான் இருக்கிறது என்று ஆவலோடு பார்க்கலானார்கள்.

இந்த வேலைக்காக, பிரிட்டிஷ்காரன் தன் தீவை விட்டுப் புறப்படுவதற்கு வெகுகாலத்துக்கு முன்பே, மத்திய தரைக்கடல் பிரதேசத்தை மற்றவர்கள் தேடிக் கண்டுபிடித்து, ஆராய்ந்து, படங்கள்கூட எழுதி வைத்துவிட்டார்கள். ஆனால், பல நூற்றாண்டுகளுக்குப் பிறகு, பிரிட்டிஷார் இந்த வேலையில் ஈடுபடத் தலைப்பட்ட பின், அவர்களைப்போல் அவ்வளவு அதிகமாய், அவ்வளவு தீவிரமாய், உலகத்திலே வேறு எந்த மக்களுமே அந்த வேலையைச் செய்யவில்லை.

ஷேக்ஸ்பியர் பிறப்பதற்கு 300 வருஷத்துக்கு முன்புதான் பிரிட்டிஷார் இவ் வேலையில் இறங்கினார்கள். இந்த விஷயத்தில், சைனாக்காரர் கண்டுபிடித்த ஒரு விசித்திரமான கருவி அவர்களுக்கு உதவியாயிருந்தது. 'நாவாய்க் கல்' அல்லது 'பிடிவாதக் கல்' என்னும் கல்லைப்பற்றி ஆங்கில மகா ராணியின் வைத்தியரான டாக்டர் கில்பர்ட், தமது தினசரிக் குறிப்பிலே எழுதி வைத்திருக்கிறார். இந்தக் காந்தக் கல்லைத் தொங்கவிட்டு வைத்தால், அது எப்போதும் வடக்குத் திசையை நோக்கியே திரும்பி நிற்கும். இதைச் சைனாக்காரர்கள் பல நூற்றாண்டுகளாக அறிந்திருந்தார்கள். மேற்கண்ட காலத்தில்தான், இதை ஆங்கிலேயர்கள் அறிய வந்தார்கள். 'க்ரூஸேட்' என்னும் புனித யுத்தத்தை நடத்துவதற்காக, ஆங்கிலேய வீரர்கள் ஏறிச் சென்ற கப்பல்களை நடத்துவதற்கு இந்தக் கருவியே உதவியா யிருந்தது. அதன் பிறகு, முந்நூறு வருஷங் கழித்து, துணிவு மிகுந்த ஆங்கிலேயர் கோஷ்டி ஒன்று இந்தச் சீனக் கல்லை வைத்துக்கொண்டு, சீனாவையே கண்டுபிடிக்கப் புறப்பட்டுவிட்டது!

அந்தக் காலத்தில் மனிதன் தன்னைப் பற்றிப் பிரமாதமாக நினைத்துக்கொண்டிருந்தான். உலகமே அப்போது இளமையா யிருந்தது. மனிதன் சாதிக்கக்கூடிய காரியங்களுக்கு ஒரு எல்லையே இல்லையென்று ஜனங்களுக்குத் தோன்றிற்று. 'வீரனுக்குத்தான் வெற்றி; தைரியசாலிக்குத் தரணியே சொந்தம்' என்று பிரிட்டிஷார் எண்ணினார்கள்.

'ஜான் புல்லர்'

ஐரோப்பாவின் மேலக் கரையிலே, பனி மூடி இருக்குமிடம் தெரியாமல் அமைதியாய்க் கிடந்த அந்த ஆங்கிலத் தீவிலே, திடீரென்று ஒரு உத்வேகம் பிறந்தது. இங்கிலாந்தின் கடற்கரையிலுள்ள ஒவ்வொரு துறைமுகத்திலும், கதைகள் கிளைத்தன. "கடலைக் கடந்து செல்லத் தைரியம் மட்டுமிருந்தால், காணற்கரிய காட்சிகளைக் காணலாம்; பெறற்கரிய பேறெல்லாம் பெறலாம்" என்று ஜனங்கள் பேசலானார்கள். வாரா வாரம் சில கப்பல்கள் துறைமுகங்களுக் குள்ளே வந்து நிற்கும். அந்தச் சிறு கப்பல்களில் இருந்த மாலுமிகளில் பெரும்பாலும் பாதிப்பேர் மாண்டு மறைந் திருப்பார்கள்; பாய்மரங்கள் நைந்து கிழிந்து கிடக்கும்; மேல் தளமெல்லாம் உப்புப்பூத்துக் கிடக்கும்.



மேலே கா ஃபது காப்டன் ஸ்காட். கீழே யிருப்பது அவருடைய 'டேர்ரா நோவா' என்ற சிறு கப்பல்.

ஸர் பிரான்ஸிஸ் டிரேக் என்பவருக்கு எலிஜபெத் ராணி 'நைட்' பட்டம் அளிக்கிறாள்.

கரையோரத்தில் ஏதோ சிறிது தூரம் போய் வந்து கொண்டிருந்த இந்தக் கப்பல்கள், இப்போது ஓய்ந்து தளர்ந்து வந்து சேர்ந்து, இதற்குமுன் இங்கிலாந்து கண்டறியாத பட்டாடைகளையும் பொன்னையும் வாசனைத் திரவியங்களையும் ரேவுகளில் இறக்கலாயின.

எலிஜபெத் மகாராணியின் காலத்திலே இப்படிக் கடல்மேல் சென்ற வீரர்களுக்குள்ளே மிகவும் பிரசித்தி பெற்றவர் ஸர் பிரான்ஸிஸ் ட்ரேக் என்பவர்தான். ட்ரேக் தமது இருபத்தி யிரண்டாவது வதிலேயே 'ஜூடித்' என்னும் சிறு கப்பலொன்றுக்குத் தலைவராகி விட்டார். வயசில் இளைஞரா யிருந்தாலும், மெக்ஸிகோ வளைகுடாவில் நடந்த போரில் ஸர் ஜான் ஹாக்கின்ஸ் என்னும் தம் உறவினருக்குத் துணையாய் நின்று வீராவேசத்தோடு ட்ரேக் போர் புரிந்தார்.

உயிருக்குத் துணிந்து உற்சாகத்தோடு மனம் போனவாறு சென்றால், ஏதோ ஒரு நாடு எங்கேயாவது ஒரு வேளை தென்படலாம் என்றுதான், அந்தக் காலத்தில் சாதாரண மாலுமிகள் நினைத்தார்கள். ஆனால், ட்ரேக் அப்படி எண்ணவில்லை. பனமா ஜலசந்தியில் உயர்ந்தோங்கி நின்ற ஒரு மரத்தின் உச்சாணிக்கிளையில் ஏறி, பசிபிக் கடல் முழுவதையும் கண்ணுக் கெட்டிய மட்டும் அவர் கண்ணோட்டம் விட்டிருக்கிறார். ஆகவே, இந்தப் புதுக்கடலில் பிரயாணம்செய்து பார்க்க வேண்டுமென்னும் உறுதியோடேயே அவர் இங்கிலாந்துக்குத் திரும்பினார். ஏற்கனவே, எலிஜபெத் மகாராணியின் தயவை இவர் பெற்றிருந்தார். தாம் நாடு தேடிப் பிரயாணம் செய்தால், அதனால் இங்கிலாந்துக்கு அளவற்ற புகழ் ஏற்படும் என்று ராணியிடம் சொல்லி, எளிதிலே அவளது சம்மதத்தை ட்ரேக் பெற்றுவிட்டார்.

உடனே ஐந்து மரக்கலங்கள் தயாராயின. எல்லாம் சிறு சிறு கப்பல்கள்தான். ஆபத்தில் உதவுவதற்காக இன்று பெரிய கப்பல்களிலே, சில படகுகள் கொண்டு செல்லப்படுகின்றன அல்லவா; அந்தப் படகுகளைவிட, ட்ரேக் கோஷ்டியின் மரக்கலங்கள் எந்த விதத்திலும் பெரியவையல்ல. ஆனால், அந்தச் சிறு கப்பல்களிலேதான் 1577-ஆம் வருஷம் டிசம்பர் மாதம் 13உயன்று தாமுள்பட 66 பேர் அடங்கிய ஒரு கோஷ்டியை அழைத்துக் கொண்டு ட்ரேக் புறப்பட்டார். வெர்டி முனை வழியாகச் செல்வதென்று ஒரு மார்க்கமும் அவர் வகுத்துக்கொண்டார்.

குளிருக்குப் பேர்போன அட்லாண்டிக் கடலிலே நான்குமாத காலம் பிரயாணம் செய்த பின்னர், இந்த ஐந்து சிறு கப்பல்களும் ப்ரெஸீலிலுள்ள ரியோ டிலா ப்ளேட்டா என்னுமிடத்துக்குப் போய்ச் சேர்ந்தன. நடுவழியிலே, ஐந்தில் நாலு கப்பல்கள் நாசமாகி விட்டன. அக்டோபர் மாசத்தில், ட்ரேக்கின் கப்பலொன்றுதான் மிஞ்சி நின்றது. அவர் எங்கெங்கேயோ சுற்றி விட்டு, கடைசியாய், 2 வருஷம் 10 மாசத்துக்குப் பிறகு, முதலிலே தாங்கள் புறப்பட்ட இடமாகிய ப்ளிமத் ஜலசந்திக்கு வந்து சேர்ந்தார். எலிஜபெத் மகாராணி அவருக்கு 'நைட்' பட்டம் அளித்தாள்; அவருடைய கப்பலை ஒரு ஞாபகச் சின்னமாகக் காப்பாற்றி வைக்கும்படியும் செய்தாள்.

அப்போது பிரிட்டனில் பிறந்த இந்த நாடு தேடும் ஆர்வம், அதன் பிறகு மடியவே யில்லை. பின்னால் பல பேர் இப்படி நாடு தேடி அலைந்திருக்கிறார்கள். இவர்களிலே மிகவும் பிரசித்தி பெற்றவரான ஜேம்ஸ் குக், மூன்று தடவை நெடுந்தூரம் பிரயாணம் செய்து, உலக முழுவதையும் சுற்றிவந்து, பசிபிக் கடல் பூராவையும் பூரணமாய் ஆராய்ந்தார். ஆஸ்திரேலியாவிலும்,

டாக்டர் டேவிட் லிவிங்ஸ்டன் ஆப்பிரிக்கக் காட்டிலே காணமற் போனதாக, அவரது நண்பர்கள் ஒரு சமயம் பயந்து கொண்டிருந்தார்கள். அச்சமயம் மற்றோர் சுற்றுப் பிரயாணியாய் அங்கே சென்றார் 'நியூயார்க் ஹெரால்ட்' நிருபரான எச். எம். ஸ்டான்லீ என்பவர். அந்த இருவருக்கும் ஏற்பட்ட சந்திப்பு இந்தக் காட்சி.

நியூஜீலந்திலும், அவர்தான் பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்துக்கு விதை யூன்றினர்.

ஆனால், நாடு தேடிய பிரிட்டிஷ் வீரர்களுக் குள்ளேயே டாக்டர் டேவிட் லிவிங்ஸ்டனைத்தான், தலைசிறந்தவராகச் சொல்லவேண்டும். 1850-1870 இவ்விரு வருஷங்களுக்கும் இடையில், அவர் கண்டுபிடித்த பிரதேசங்கள் எவ்வளவோ முக்கியமானவையாகும். அவர் சென்ற விடமெல்லாம் பற்பலவிதமான மக்களைக் கண்டார். அவர்களோடு கலந்து வாழ்ந்தார். அவர்களது இன்ப துன்பங்களைப் பகிர்ந்துகொண்டார். மத்திய ஆப்பிரிக்காவிலே அவருடன் தொடர்பு பெற்ற மக்களின் சந்ததியார், இன்னமும் அவருடைய நாமத்தைப் போற்றுகிறார்கள்.

இந்த வழியில் ஆப்பிரிக்காவில் பிரசித்தி யடைந்த மற்றொரு வீரர், மங்கோ பார்க் என்பவர். அவர் நாகரிகமே தலைக்காட்டாத பிரதேசங்களிலெல்லாம் சென்று ஆராய்ந்தார். புறப்படும்போது, சாதாரண உடையுடனேயே புறப்பட்டார். திரும்பி வந்தபோதோ, இலையும் தழையும் உடுத்திக் கொண்டு வந்து சேர்ந்தார்!

துருவ ஆராய்ச்சியிலே இணையற்ற புகழ் பெற்றவர் காப்டன் ஸ்காட் என்பவர்தான். 1911-ஆம் வருஷம் மார்ச் மாதம் 29உ சிறு குடிசையொன்றில் தமது இரண்டு சகாக்களுடன், அவர் எமனுக்கிரையானார். தென் துருவத்திலிருந்து திரும்பித் தமது முகாமுக்குப் பதினொரு மைல் தூரத்தில் வந்துவிட்டார். அங்கேதான் எமன் வந்து அவரை எட்டிப் பிடித்தான்.

இந்த வீரர்களின் அடிச் சுவடுகள் சுடுகாட்டுக்குத்தான் வழி காட்டுகின்றன என்பதை யாவரும் அறிவர். ஆயினும், இந்த யுத்தம் ஆரம்பிக்கும் வரையில், இவர்களுடைய அடிச் சுவட்டைப் பின்பற்ற எத்தனையோ பேர் துணிந்து முன்வந்திருக்கிறார்கள். மூன்று வருஷங்களுக்கு முன்னே க்ராஹாம் கில ஆராய்ச்சிக் கோஷ்டி என்ற ஒரு கோஷ்டியார் தென் துருவப் பிரதேசத்தை ஆராயச் சென்றார்கள். அங்கே அவர்கள் சுமார் 2 வருஷகாலம் தங்கியிருந்து, 'ஆறும் ஜார்ஜ் மன்னர் ஜல சந்தி' என்ற பிரதேசத்தைச் சென்ற வருஷந்தான் கண்டு பிடித்தார்கள். சென்றவருஷம் அந்தக் கோஷ்டியார் லண்டனுக்குத் திரும்பியபோது, யுத்த முழக்கம் அவர்கள் காதில் ஒலித்தது. உடனே அவர்கள் பிரிட்டிஷ் கடற்படையில் சேர்ந்துவிட்டார்கள்.

குழந்தைகள் சம்பந்தமான பாடல்கள் இயற்றுவதில் வல்ல **யூஜீன் பீல்டு** பாடிய

கண்ணும் பொன்னும்

(மொழிபெயர்த்தவர்: பொ. திருகூடசுந்தரம்)

1. ஆமாம் : என் கண்ணும் பொன்னும்,
   அவர்கள் கணநேரம் சும்மா இருப்பதில்லை.
   வீடு முழுவதும் பாதச்சுவடுகள் தெரிகின்றன ;
   விளையாட்டுப் பொருள்கள் சிதறிக் கிடக்கின்றன ;
   சுவர் ஓரமெல்லாம் கை பட்டிருக்கின்றன.
   ஆஹா, என்ன விளையாட்டு! எவ்வளவு கூப்பாடு!

2. பத்துத்தரம் வந்து ரொட்டி கேட்பார்கள் ;
   அதில் வெண்ணெய் தடவச் சொல்வார்கள் ;
   வெண்ணெய்மேல் வெண்ணெய் அப்பச் சொல்வார்கள் ;
   அது போதாது, சர்க்கரையும் கேட்பார்கள்.
   ஆனால் என் கண்ணும் பொன்னும் அல்லரோ?
   அவர்களுக்கு இல்லை என்றுகூற என்னால் முடியாது.

3. சில சமயம் துக்கமாய் வருவார்கள் ; ஆறுதல் கூறுவேன்.
   சில சமயம் சண்டையிட்டுக் கொள்வார்கள் ; சமாதானம் கூறுவேன்.
   'ஐயோ' என் கண்ணும் பொன்னும் அப்படிச் சண்டையிடலாமா?
   அது வேண்டாம் ; விளையாடுங்கள்' என்று கூறுவேன்.

4. ஐயோ! அவர்களால் எத்தனை தொல்லைகள்!
   கை யெல்லாம் கரியாக்கிக் கொள்வார்கள் ;
   பின்னிவிட்ட தலையைப் பிரித்து விடுவார்கள் ;
   பொம்மைகளை எங்கேனும் வைத்துவிட்டுப்
   பொருமி அழுவார்கள் ;
   'அதைப் பார்', 'இதைப்பார்' என்று
   அடிக்கடி வந்து இழுப்பார்கள் ;
   ஆடி ஓடி இடித்துக் கொண்டு,
   'அங்கே நோவுது,' 'இங்கே நோவுது' என்பார்கள்.
   அவர்களுக்கு என்ன கவலை? அதெல்லாம்
   அவர்களுக்கு விளையாட்டுத்தான், விநோதம் தான்.

5. இன்றுகாலைதான் பாவாடை கட்டிவிட்டேன் ;
   இன்று காலைதான் சட்டைபோட்டு விட்டேன்.
   இப்பொழுது பார்த்தால்,
   எத்தனை கிழிசல் ; எத்தனை கீறல்!
   இன்றுகாலை புதிசாயிருந்த பூட்ஸில்
   இப்பொழுது எத்தனை துவாரங்கள்!
   ஆமாம், என் கண்ணே! பொன்னே!
   நீங்கள் தான் இத்தனை விஷமம் செய்வீர்கள்.

6. ஆயினும் 'அவர்கள் இல்லாவிட்டாலோ...?'
   என்று எண்ணுவேன் ;
   அவ்வளவுதான் ; அன்பு பொங்கி விடும்.
   அவர்கள் படுக்கையிடம் சென்று,
   அவர்களது தலையைத் தடவிக்
   கன்னங்களில் முத்தமிடுவேன்.
   ஐயோ! கண்ணும் பொன்னு மில்லாதவர் வாழ்வு
   என்ன வாழ்வு!

7. ஆமாம், தரையெங்கும் அழுக்குக் கால் பட்டதுதான் ;
   ஆமாம், சுவரெங்கும் அழுக்குக் கை பட்டதுதான் ;
   ஆமாம், எத்தனையோ தொல்லைதான்,
   எத்தனையோ விஷமங்கள்தான்.
   ஆனால், அதே அடையாளங்களை
   என் இதயத்திலும் காணலாம்.
   அவர்களால் அடையும் இன்பத்துக்கு
   இணை வேறுண்டோ?

சீகாழிப் பள்ளு

(மு. அருணாசலம், எம். ஏ.)

ஏழை மக்களின் காதலையும் கற்பனையையும் சித்தரிக்க, பழம் புலவர் கையாண்டது 'டள்ளு' என்ற பிரபந்த வகையாகும். சீகாழிப் பள்ளின் சில காட்சிகள் சென்ற மாதச் 'சக்தி'யில் வெளியிடப்பட்டன. அதன் தொடர்ச்சியாக, இன்னும் சில அரிய காட்சிகளை இங்கே காணலாம்.

அடுத்த காட்சி. பள்ளியரெல்லோரும் திரண்டுவந்து பல வயல்களில் நாற்றுக்களை நடத் தயாராய் நிற்கிறார்கள். பள்ளர் நாற்றைப் பறித்து முடிந்து தருவதும் பள்ளியர் வாங்கி நடுவதுமாகிய காட்சியை எங்கும் காண்கிறோம். அங்கங்கே பள்ளர் பள்ளியரிடையுள்ள சிற்சில காதல் நிகழ்ச்சிகளைக் கவிராயர் நமக்குக் காட்டுகிறார். சில வயல்களில் நடவு நட்டுக்கொண்டிருக்கும்போதே இத்தகைய நிகழ்ச்சிகளை அவர் காண்கிறார். வேறு சில இடங்களில், காலை வேலை முடிந்து, வரப்புக்களிலுள்ள நிழலில் பள்ளியர் கஞ்சி ஊற்றப் பள்ளர் குடிக்கிறார்கள்; அப்போது நடக்கும் நிகழ்ச்சிகளையும் அவர் பார்க்கிறார். பார்த்து, ஒரு பள்ளி இந்நிகழ்ச்சிகளை மற்றப் பள்ளியருக்குக் காட்டிச் சிரிப்பதாகக் காட்சிகளைச் சித்தரிக்கிறார்.

முதலிலே தங்கள் சுவாமியின் பெருமையைப் பள்ளி கூறுகிறாள். திருஞான சம்பந்தருக்குத் திருமுலைப் பால் கொடுத்த வரலாற்றை உரைக்கிறாள் :

"பழுதி லாச்சதுர் வேதமும்—படி
தொழுதி டுஞ்சைவ நீதமும்
பதிக்கப் புவியில் உதித்திடுஞ்-சிவ
பாதனார் அருள் போதனார்
கழுவில் அமணத் திரளை வாரி
ஏற்றி டுந்திரு நீற்றினார்
கமல வாவிக் கரையில் இருந்து
கதறி யழுத மதலைபால்
மழவி டையில்வந் துமைதி ருமுலைப்
பாலை யருளுஞ் சீலனார்
வல்லார் காழிப் பெரிய நாயகர்
உள்ளூர் வடக்கு வெளியிலே."

'வடக்கு வெளி' என்ற வயலில் நடந்ததைக் கவிராயர் கூறுகிறார். காத்தி முதலான பள்ளியர் நடுகிறார்கள். சின்ன ராக்கி என்பவள் கோபத்தோடு கடுநோக்கியாய் வயல் வரப்பிலே இருக்கிறாள் :

"மொழிவளத்துடைக் கோட்டத் துக்களை
உழுது சமைந்த நாட்டத்துள்
மூக்கி மகள்இ ராக்கியாஞ் சின்ன
ராக்கி யுங்கடு நோக்கியாய்த்
துழனிக்காரி காத்தியும் - அவள்
நாத்தி யும்ஒரு சேர்த்தியாய்ச்
சுறுக்கி நடுகு றுக்கிலே - படுத்
திருக்கும் ஓரிட வரப்பிலே—"

அப்போது குழந்தை அழுகிறது. அதைக் கேட்டு அவளது புருஷன் முத்தான் என்பவன் 'குழந்தைக்குப் பால் கொடு' என்று அவள் கையைப் பிடித்திழுக்கிறான். அவள் என்ன செய்தாள், அவர்களிடையில் என்ன சல்லாபம் நடந்தது என்பனவற்றைப் புலவரே சொல்லட்டும் :

"அழுத குழவி இருக்கச்சே - முலை
பொழியும் பாலும் பெருகச்சே
அத்தைக் கண்டு முத்தான் எடுத்துக்
குட்டி ராக்கி கிட்டக் கொடுத்துக்
கொழுவரப்பினில் குழந்தைக் கிதமாய்
அழுதி டுஞ்சிறு குழந்தைக்குக்
கொடுகொடென்றொரு கையைப் பிடித்தான்
விடுவி டென்றவள் கன்னத்தில் அடித்தாள்
நிழலில் வாவென் றிழுப்பதும் அவள்
அழகு முகத்தைப் பார்ப்பதும் இவள்
நெளிப்பதும் அவன் களிப்பதும் - பல்லை
இளிப்பதும் பாரும் பள்ளீரே."

இந்தக் காட்சியைப் பார்த்துவிட்டு அடுத்த வயலுக்குச் செல்வோம். இங்கே இராமி முதலான பள்ளியர் நடுகிறார்கள். பேச்சி மகனும் நாச்சி மகளும் விளையாடுவதைச் சிறிது பார்ப்போம் :

"வெள்ளைச் சடையர் துள்ளும் விடையர்
வெடிகொள் படையர் அடியர் பால்
மிகுந்த தூதர் சிவந்த பாதர்
வேத னார்அருள் போதனார்
வள்ளை வார்குழல் பெரிய நாயகி
இடத் தனார்மணி மிடற்றினார்
வளரும் காழிப் பெரிய நாயகர்
வள்ளைப் பண்ணை வயலுளே—
குள்ளன் மகள்இ ராமியும் - அவள்
மாமியும் முத்துச் சாமியும்
குலுக்கிச் சிறுக்கி சிலம்பி யுங்கலுக்
குள்ளக் குட்டியும் பாடியே
பிள்ளைக் கட்டளை நாற்றை வாங்கிப்
பிடுங்கி யேதனி நடுகையில்—
பேச்சி வீட்டுப் பையலுஞ் சின்ன
நாச்சி வீட்டுத் தையலும்—"

நாச்சி மகள் கள்ளைக்குடித்த மயக்கத்தில் தடுமாறி விழுகிறாள். மேலெல்லாம் சேறாகிறது. பேச்சி மகன் இதைப் பார்த்து வந்து சேற்றைத் துடைத்து விடுகிறான். அப்போது அவர்களிருவருக்குமிடையே நடந்த காதல் விளையாட்டுக்களைக் கவிராயர் சொல்லுகிறார் :

"கள்ளைக் குடித்து வேர்த்ததும் - அவள்
கடைக்கண்ணாலே பார்த்ததும்
கண்டு பிறகே தொடர்ந்ததும் - அவள்
அண்டை வயலில் நடந்ததும்
அள்ளல் நீரில் விழுந்ததும் - கலை
உள்ளும் புறமும் நனைந்ததும்
அங்க மெல்லாந் தெரிந்ததும் பயல்
அதைக்கண் டோடித் திரிந்ததுந்
துள்ளு சேறு படிந்ததும் - அதைத்
துடைத்து முத்தங் கொடுத்ததும்
'சொட்டால்' என்றவள் அடித்ததும் - பயல்
மட்டார் காலைப் பிடித்ததும்
புள்ளிப் புடவை கிழிந்து முகத்தில்
மெள்ளக் கையை நீட்டியே
புதைப்பதும் அவள் உதைப்பதும்- இவன்
பதைப்பதும் பாரும் பள்ளீரே."

இவ்விதமாகவே கவிராயர் வயல்தோறும் நடப்பவற்றைக் கண்டு களித்து நமக்குக் காட்டுகிறார். இப்படி எத்தனை வயல்கள்? சில வயல்களை அவர் குறிப்பிடுகிறார்:

" அம்ப ரத்தெழு வேணுவாய்-வரும்
உம்பருக் கொரு தாணுவாய்
அண்ட மளந்த மாயனார் - உகிர்
கொண்டு வகிர்ந்த தாயனார்
செம்பு கலிவெங் குருக மூமலம்
சண்பை காழி பூந்தராய்
சிரபுரம் தோணி புறவம் கொச்சை
சிறக்கும் வேணு புரத்துடன்
நம்பு பேர்கள் ஆறி ரண்டுதண்
பிரம புரிச நாதனார்
நல்லார் காழிப் பெரிய நாயகர்
உள்ளூர் வடக்கு வெளியிலே
சம்பை கோட்டகம் குமரக் கட்டளை
சாரடிப் பாதிரிக் கட்டளை
தருமறு பத்து மூவர் கட்டளை
சம்பந்தக் கட்டளை நடுதை
யில்—"

இப்படிப் பல வயல்களில் நடவு ஆகிறது. அங்கங்குள்ள பள்ளர் பள்ளியரின் செயல்களையும் கவிராயர் காட்டிக்கொண்டே போகிறார். அவருடைய பாடல்களில் இந்தக் காதல் காட்சிகளை நாம் காணும்போது, ஒரு சந்தேகம் தோன்றக் கூடும். இவை யெல்லாம் உண்மையில் நிகழ்வனவல்ல, புலவருடைய புனைந் துரைகளே என்றெண்ணலாம். ஓரளவுக்கு இவை கவிதா ரஸத்தோடு புலவரால் கற்பனை செய்து கூறப்பட்ட போதிலும், இந்நிகழ்ச்சிகள் உண்மையல்ல வென்று சொல்ல முடியாது. நாகரிகம்பெற்ற மக்களெனச் சொல்லிக்கொள்ளும் நாம் நம் உணர்ச்சிகளை அடக்கக் கற்றுக் கொண்டிருக்கிறோம். அன்பையோ வெறுப்பையோ பலர் சேர்ந்த கூட்டத்தில் நாம் வெளியிடுவதில்லை; வெளியே உணர்ச்சிகளைக் காட்டுவது அநாகரிகமென்று கருதுகிறோம். ஆனால் பயிர்த் தொழில் செய்யும் எளிய மக்கள் இந்த 'நாகரிகம்' படைத்தவர்களல்ல; உள்ளத்திலெழும் உணர்ச்சிகளை அடக்க அறியாதவர்கள்; நேர்முகமாகச் செயலிலும் சொல்லிலும் வெளியிடுவார்கள். இந்த மக்கள் தொகுதியிலே, கவிராயர் மேலே விவரித்துள்ளவை போன்ற காதல் நிகழ்ச்சிகள் இன்றும் சர்வ சாதாரணமாய் நடந்து வருகின்றன. இந்த உண்மையை மனதினிலிருத்தி நாம் பாடல்களைப் பார்ப்போமாயின், இவற்றை நன்றாய் அனுபவிக்க முடியும். இவை பாட்டுக்கும் கூத்துக்கும் ஏற்ற முறையில் செய்யப்பட்டுள்ளமையால், சொல் நயமும் தாளக்கட்டும் எளிமையும் வாய்ந்து, என்றும் பாடுவோர் மனதைக் கவருந் தன்மையுடையனவாயிருக்கின்றன. இத்தகைய பள்ளுப் பாடல்கள் பல இன்றும் பயிர்த் தொழில் செய்யும் மக்களிடையே கர்ண பரம்பரையாக வழங்கி வருகின்றன.

[குறிப்பு: சீகாழிப் பள்ளு என்ற ஒரு நூலை அருணாசலக் கவிராயர் செய்தார் என்று பழமையாக வழங்கி வருவதைத் தவிர, அந்நூலைக் குறித்து இதுவரை யாதும் அறியப்படவில்லை. சீகாழியைச் சேர்ந்த ஒரு பெண்மணி 'முக்கூடற் பள்ளு' என்ற நூலைப் பார்த்தபோது, தம் தந்தையார் வீட்டிலிருந்த ஏடுகள் கறையானுக்கிரையாகிக் கெட்டுப்போன காலத்து, சில துண்டு இதழ்களிலிருந்து அரைகுறைப் பாடல்களை எழுதி அவை கவிராயருடைய சீகாழிப் பள்ளு என்று கொடுத்ததாகக் கூறினார்கள். இந்த அரைகுறைப் பாடல்கள்தான் மேலே தரப்பட்டவை. இந்நூல் முழுவதும் இக்காலத்துக் கிடைப்பதாகத் தெரியவில்லை. நாட்டுப்புறப் பாடல்களை அறியவேண்டும் என்ற உணர்ச்சி ஏற்பட்டுவரும் இக் காலத்திலே இவை பயனுடையனவாகும் எனக் கருதியே இங்கு வெளியிடப்படுகின்றன.]

குழந்தைகளுக்கு 'ஸோயா'ப் பால்

தாய்ப்பாலுக்கு அடுத்தபடி, குழந்தைகளுக்குச் சிறந்த உணவு பசுவின் பால் என்று நாம் நினைக்கிறோம்; பல டாக்டர்களும் அப்படித்தான் சொல்லுகிறார்கள். ஆனால், 40 கோடி சீன மக்களும் குழந்தையா யிருந்தபோது 'ஸோயா' பீன்ஸ் பொடியினின்றும் தயாரிக்கப்பட்ட பாலைக் குடித்தே வளர்ந்தவர்கள். சீனக் குழந்தைகள், பசுவின் பாலுககுப் பதில், 'ஸோயா'ப் பாலைத்தான் ஆயிரக்கணக்கான வருஷங்களாகப் பருகி வருகின்றன.

பசுவின் பாலைவிட 'ஸோயா'ப் பால் மிக ஆரோக்கிய மானதாம். சீனாவில் முட்டிக்கால் வியாதி, குழந்தைகளுக்கு வருவதே யில்லை. 'ஸோயா'வின் பெருமைதான் அதற்குக் காரணம்.

பசுவின் பாலுக்கு மேல், 'ஸோயா'ப் பால் மூன்று விதங்களில் உயர்ந்தாகும்: (1) 'ஸோயா'ப் பாலில் வைட்டமின் 'டி' இருக்கிறது; பசுவின் பாலில் மாரி காலத்தில், அது அடியோடு இல்லாமற் போகிறது. (2) வியாதிக் கிருமிகளைக் கொல்லுவதற்காக, பசுவின் பாலை நன்றாகக் காய்ச்சியே குடிக்கவேண்டும்; அப்படிக் காய்ச்சுவதால், அதில் உள்ள 'கால்ஸியம்' என்ற சுண்ணம்பு சத்து ஜீர்ணிக்க முடியாதபடி இறுகிவிடுகிறது. ஸோயா பீன்ஸிலோ வியாதிக் கிருமியே கிடையாது; அதில் உள்ள சுண்ணம்பு சத்து, கெடாமல் உடம்புக்கு உதவுகிறது. (3) பசுவின் பாலிலுள்ள சுண்ணம்பு சத்து சீக்கிரம் கரைந்து பிரிவதில்லை; ஸோயாப் பாலிலுள்ள சுண்ணம்பு சத்தோ வெகு விரைவில் கரைந்து, தேகத்திலே ஒட்டி விடுகிறது.

* * *

கடவுள் ஓர் ஆங்கிலேயனா?

'அமெரிக்கர்களுக்குச் சில சமயம் பிரிட்டிஷாரிடம் அவநம்பிக்கை உண்டாகிறது. நிலைமையைப் பின் வருமாறு வர்ணிக்கலாம்: கடவுள் ஓர் ஆங்கிலேயனாகவே யிருக்க வேண்டும் என்று ஆங்கிலேயர்கள் நினைக்கிறார்கள். ஏனெனில், ருஷிய அல்லது ஜெர்மன் அல்லது ஜப்பானிய மனத்தைக் கடவுள் படைத்திருப்பாரானால், அந்த மனசில் என்னதான் இருக்கிறது என்று நம்மால் ஒரு நாளும் அறியவே முடியாது என்பது ஆங்கிலேயர் கருத்து. அமெரிக்கர்களோ கடவுள் ஓர் அமெரிக்கராய்த்தான் இருக்க வேண்டும் என்று நினைக்கிறார்கள். ஆனால், தாங்கள் சொர்க்கத்தில் பிரவேசிக்கும்போது கடவுள் ஓர் ஆங்கிலேயனா யிருப்பதாக அமெரிக்கர்கள் காண்பார்களானால், அவர்களுக்கு அதிகப் பீதி யேற்படவேண்டிய அவசியமே அநேகமாய் நேராது.'

—ஒரு லண்டன் பத்திரிகை.

குழந்தைகள் அறிவு :

பத்திரிகை விபரீதம்

(லியோ டால்ஸ்டாய்)

வலோத்யா : ஹைஸ்கூல் மாணவன், 14 வயது.

ஸோன்யா : 15 வயது.

மிஷா : 8 வயது.

ஒரு கூலியாள்.

வலோத்யா படித்துக் கொண்டும், வீட்டுக் கணக்கைச் செய்து கொண்டுமிருக்கிறான். **ஸோன்யா** எழுதிக் கொண்டிருக்கிறாள். கூலியாள் ஒரு பெரிய மூட்டையைத் தூக்கிக்கொண்டு வருகிறான்; அவனைப் பின்தொடர்ந்து, மிஷா வருகிறாள்.

கூலியாள் : எஜமான்! இந்த மூட்டையை நான் எங்கே வைக்க? அப்பா! என் புஜமெல்லாம் இதனால் இற்றுப்போய் விட்டது.

வலோத்யா : உன்னை எங்கே வைக்கச் சொன்னார்கள்?

கூலியாள் : 'எஜமான் வருகிற வரையில், இப்போது சத்தியாக, பாட அறையில் வைத்திரு' என்று வாஸிலி டிமோபீவிச் சொன்னார்.

வலோத்யா : அப்படியானால் சரி; அந்த மூலையிலே போடு. (தன் படிப்பைக் கவனிக்கிறான். கூலியாள், தனது மூட்டையை இறக்கி வைத்து, 'அப்பாடா!' என்று பெருமூச்சு விடுகிறான்.)

ஸோன்யா : அவன் என்ன கொண்டு வந்திருக்கிறான்?

வலோத்யா : 'உண்மை விளம்பி' என்று பெயர்கொண்ட ஒரு சமாசாரப் பத்திரிகையைக் கொண்டு வந்திருக்கிறான்.

ஸோன்யா : எதற்காக அதில் இவ்வளவு பெரிய கட்டு?

வலோத்யா : ஒரு வருஷத்து இதழ்கள் அத்தனையும் சேர்ந்திருக்கின்றன. (படிப்பில் ஈடுபடுகிறான்.)

ஸோன்யா : இத்தனையையுமா ஜனங்கள் எழுதியிருக்கிறார்கள்?

கூலியாள் : வாஸ்தவம்! இதையெல்லாம் எழுதியவர்கள் ரொம்பச் சிரமப் பட்டுத்தான் வேலை செய்திருக்கிறார்கள்.

வலோத்யா : என்ன சொன்னாய்?

கூலியாள் : இதை யெல்லாம் எழுதியவர்கள், தங்கள் வேலையை மழுப்பாமல் செய்திருக்கிறார்கள் என்றே சொன்னேன். சரி; நான் போகிறேன். பத்திரிகைகளைக் கொண்டு வந்து போட்டு விட்டேன் என்று, தயவு பண்ணி வீட்

டிலே சொல்லி விடு. (வெளியே போகிறான்.)

ஸோன்யா : (வலோத்யாவை நோக்கி) அப்பாவுக்கு எதற்காக இத்தனை பத்திரிகைகள்?

வலோத்யா : போல்ஷகாவ் எழுதியுள்ள வியாசங்களை யெல்லாம், அப்பா கத்தரித்து வைத்துக் கொள்ளப் போகிறார்.

ஸோன்யா : ஆனால், போல்ஷகாவின் கட்டுரைகளைக் கண்டால், தமக்குத் தலைவேதனை எடுக்கிறது என்று மாமா மிகேல் இவானோவிச் சொல்லுகிறாரே!

வலோத்யா : ஓஹோ! மாமா மிகேலுக்கு அப்படித் தோன்றுகிறதாக்கும். அவர் 'சர்வசத்யம்' என்ற பத்திரிகையைப் படிக்கிறார்.

மிஷா : மாமாவின் 'சத்யம்' இது அத்தனை பெரிசா யிருக்குமோ?

ஸோன்யா : இதைவிடப் பெரிசு! இது ஒரு வருஷமாகத்தான் வருகிறது; அதுவோ இருபது வருஷமாய் வந்துகொண் டிருக்கிறது.

மிஷா : என்ன! இது மாதிரி இருபது கட்டும், அதற்குமேலே இன்னுமோர் இருபதுமா?

ஸோன்யா : (தலைநிமிராமலே) ஆமாம்; அதனால் என்ன? இரண்டு பத்திரிகைகள் மாத்திரம் இவ்வளவு. இன்னும் வேறே முப்பது, நாற்பது பத்திரிகைகள் ருஷ்யாவில் மட்டிலும் வெளி வருகின்றன. வெளி நாடுகளில் வெளிவரும் பத்திரிகைகளையும் கணக்கிட்டால், ஆயிரம் பத்திரிகைகள் இருக்கும்.

மிஷா : அவைகளை யெல்லாம் சேர்த்தால், இந்த அறை அடங்காதோ?

வலோத்யா : இந்த அறை எந்த மூலை! நமது வீதி பூராவையும் அவை நிறைத்து விடுமே. ஆனால், தயவு பண்ணி என்னைத் தொல்லை செய்யாதே. எனக்கு நாளைக்கு ஒரு பரீட்சை. உன் பிதற்றலால், என் படிப்புக்கு இடையூறு செய்கிறாய். (மீண்டும் படிக்கிறான்.)

மிஷா : இருந்தாலும் அவர்கள் இவ்வளவு ஏராளமாய் எழுதக் கூடாது.

ஸோன்யா : ஏன் கூடாது?

மிஷா : ஏனென்றால், அவர்கள் எழுதுவது உண்மையா யிருந்தால், அது ஒரே ஒன்றாய்த்தான் இருக்கும். அதைத் திருப்பித் திருப்பி எப்போதும் சொல்லிக் கொண்டிருக்க வேண்டியதில்லை. அது உண்மையில்லாதிருந்தால், அவர்கள் அதை எழுதவே கூடாது.

ஸோன்யா: இது உன் அபிப்பிராயம்!

மிஷா: சகிக்க முடியாதபடி இவ்வளவு ஏராளமாய் ஏன் அவர்கள் எழுதிக் கொண்டிருக்கிறார்கள்?

வலோத்யா: (புஸ்தகத்தை விட்டுத் தலைநிமிர்ந்து) ஏனென்றால், பத்திரிகைச் சுதந்திரத்துக்காகத்தான். பத்திரிகைச் சுதந்திர மில்லாவிட்டால், நாம் உண்மையை அறிய முடியாது.

மிஷா: ஆனால், 'உண்மை விளம்பி'யில் உண்மை யிருப்பதாக அப்பா சொல்கிறார்; 'உண்மை விளம்பி'யைக் கண்டால் தமக்குத் தலைவேதனை எடுப்பதாக மாமா சொல்கிறாரே? உண்மை 'உண்மை விளம்பி'யில் இருக்கிறதா அல்லது 'சர்வ சத்திய'த்தில் இருக்கிறதா என்று நமக்கு எப்படித் தெரியும்?

ஸோன்யா: மிஷா சொல்வது ரொம்ப ஸரி! பத்திரிகைகளும், சஞ்சிகைகளும் புஸ்தகங்களும் மிகவும் ஜாஸ்தியாய்த்தான் இருக்கின்றன.

வலோத்யா: பெண் பிள்ளை என்பதைக் காட்டி விட்டாய்—சதா மாறுகிறாயே!

ஸோன்யா: இல்லை; அவை ரொம்ப ஏராளமாய் இருப்பதால், நம்மால் உண்மை எது என்று சொல்ல முடியவில்லை.

வலோத்யா: உண்மையைக் கண்டு பிடிப்பதற்குத்தான் ஒவ்வொருவருக்கும் விவேகம் அளிக்கப் பட்டிருக்கிறது.

மிஷா: சரிதான்; ஒவ்வொருவருக்கும் விவேகம் இருந்தால், அவனவன் தனக்குத் தானே உண்மையைத் தீர்மானம் செய்து கொள்கிறான்.

வலோத்யா: போதும்; உன் தீர்ப்பைச் சொல்லி விட்டாயல்லவா! தயவு பண்ணி எங்கேயாவது போ; என்னைத் தொந்தரை செய்யாதே.

—

சின்னஞ் சிறிய கிளி

'சுரபி'

சின்னஞ் சிறிய கிளி
சிங்கார மான கிளி
கன்னஞ் சிவந் திடவே
கட்டிமுத்தங் கொட்
[டுங் கிளி

பச்சைப் பசிய கிளி
பாகுமொழி சொல்லுங் கிளி
எச்சில்தனக் காக என்னை
ஏங்கவைக்குந் தங்கக் கிளி (2)

வண்ணஞ் சிறந்த கிளி
வாயமுத மீயுங் கிளி
மண்ணகத்தோர் யாவரையுந்
தான் மயக்கும் மாயக்கிளி (3)

கொச்சைமொழி பேசுங் கிளி
கொஞ்சிவிளை யாடுங் கிளி
கச்சையொலி கொஞ் சிடவே
கால்பழகுங் காதற் கிளி (4)

அக்கவென்று கூவுங் கிளி
அம்மவென்று தாவுங் கிளி
திக்குத் திகந்த மெலாம்
திரிந்துவரும் தீரக் கிளி (5)

தொட்டிலிலே ஏங்குங் கிளி
தோளினிலே தூங்குங் கிளி
வட்டிலிலும் மார்பினிலும்
வண்ணமுகம் சாய்க்குங் கிளி (6)

கூட்டில் வளராத கிளி
கொத்தியறியாத கிளி
காட்டுப் பூனை வந்திடினும்
கண்டு கலங் காதகிளி (7)

பங்கமிலாத் தங்கக் கிளி
பாரையெலாம் ஆளுங் கிளி
எங்குமிலாச் சொர்ணக் கிளி
யான்பயந்த செல்வக் கிளி (8)

சென்னை
பாரகனில்
விரைவில்
—
வெளி வருகிறது
இதுவரை வெள்ளித் திரையில் வந்துள்ள படங்களை விட சகல அம்சங்களிலும் சிறந்து விளங்குவது — மேலானது — சங்கீதம் நிறைந்தது—சமூக வாழ்க்கையை தத்ரூபம் சித்தரித்துக் காட்டுவது.
வாஹினியின்
தேவதா
நாகையா, குமாரி நடித்தது
DIRECTED · BY
B.N. REDDI
PRODUCED at NEWTONE
SEKAR

SHEAFFER'S
*Lifetime**



THE **GIFT** FOR
Lasting Sentiments

Express your endearing sentiments with a SHEAFFER LIFETIME*guaranteed forlife.Matched with the new *permanently sharp* FINELINE pencil. Yet, this ensemble costs no more than many a quickly-cast-aside gift. One-stroke vacuum or lever-filling models in five beautiful colours.

(Sheaffers)

ஆயுள் பர்யந்தம் உத்திரவாத முள்ளது

Golden Crest	Rs.	85-0-0
Lifetime Set (Pen & Pencil)	Rs.	52-8-0
Admiral Set	Rs.	32-8-0
Craftsman Set	Rs.	24-8-0
Wasp Clipper Set	Rs.	16-8-0

LARGEST STOCKISTS

கனி & சன்ஸ்

கடியார வியாபாரிகள்

ஹெட் ஆபீஸ்: **55-57, ராட்டன் பஜார்**

பிராஞ்சு: **190, மவுண்ட் ரோடு**

மதராஸ்

இன்ஷ்யூர் செய்யுங்கள்

ஜுபிடர் ஜெனரல்

இன்ஷ்யூரன்ஸ் கம்பெனி லிமிடெட்

கீழ்க்கண்ட இன்ஷ்யூரன்ஸ் அலுவல்களை கவனிக்கும்

ஆயுள், மோட்டார்கார், நெருப்பு, பஸ்கள், டாக்ஸிகள், கப்பல், தொழிலாளர் நஷ்ட ஈடு, சமுத்திரம், ரயில்வே, தபால்

பிரபல இந்திய இன்ஷ்யூரன்ஸ் கம்பெனி

வாக்களிக்கப்பட்ட மூலதனம்

ஒன்றரைக்கோடி ரூபாய்

லைப் டிபார்ட்மெண்டுக்கு ஸ்பெஷல் ஏஜெண்டுகள்
ராமநாதபுரம் ஜில்லாவுக்கு உடனே தேவை

பிராஞ்சு ஆபீஸ்:

99, அரமனைக்காரத் தெரு, மதராஸ்

பிராஞ்சு மானேஜர்: N. வெங்கடராம அய்யர்

சிறு கதை :

அவள் காதலை அவன் அறியவில்லை.
அறிய வந்தபோது, என்ன விபரீதம்!

கமலா

(ரா. நா.)

இது நிஜமாக நடந்தது; வெறும் கட்டுக்கதையல்ல. எனது நண்பன் ராஜத்தின் சொந்த அனுபவம். ராஜம் இதை வெகுநாள் வரையில் என்னிடம் சொன்னதில்லை. ஏதோ அன்று தினம், நமது கல்யாணச் சீர்கேட்டைப் பற்றிப் பேச்சு வந்தது.

"மனப் பொருத்தமில்லாமல் மணங்கள் நடப்பது எவ்வளவு பெரிய விபரீதம்!" என்று நான் சொன்னேன்.

அதுவரையில், சாவதானமாகக் கேட்டு வந்த ராஜத்தின் உடம்பு என்னவோ அவனையே அறியாமல் சிலிர்த்தது. மேலே எங்கேயோ முகட்டுவளையைப் பார்த்துக்கொண்டு, பெருமூச்சுடன், "உம்!...உம்!" என்று முனகினான்.

"என்ன ராஜம்? என்ன முழிக்கிறாய்? ஏதாவது பழைய ஞாபகமோ?" என்று, சிரித்துக்கொண்டே கேட்டேன்.

"ஆமாம்; பழைய ஞாபகந்தான்—பழையதென்ன? பழையது, புதியது எல்லாந்தான். அவள் உருவம் அடிக்கடி என் கண்முன் வந்து நிற்கிறது... கமலா! கமலா!" என்று மெல்லிய குரலில் சற்றுத் திணறலுடன் உச்சரித்துவிட்டு, "இந்தா! இத்தனை நாளும் உனக்கு அதை நான் சொல்லியதில்லை. இது என் வாழ்க்கையின் ரகஸ்யம். அவள் ஞாபகம் என்னுடைய புனித பொக்கிஷம்—இல்லை, இன்றென்னவோ, என் இதயம் வெடித்துவிடும்போலிருக்கிறது. அதை நான் உன்னிடம் சொல்லித்தான் ஆகவேண்டும். கேள்" என்று ராஜம் 'மள, மள' வெனப் பொரியத் தொடங்கினான்.

என்றுமில்லாதபடி அப்போது அவன் அடைந்த உணர்ச்சிப் பரபரப்பைக் கண்டு, எனக்கு ஆச்சர்யமாயிருந்தது. "சொல்" என்று கூறித் தலையை ஆட்டினேன்.

அவன் சொல்லலானான் :

"என் பெற்றோர், ஒரு கிராமத்திலிருந்தார்கள். என் படிப்பை உத்தேசித்து, என்னைக் கமலாவின் வீட்டில் இருக்க ஏற்பாடு செய்தார்கள். அச்சமயம் எனக்கு வயது பத்து; கமலாவின் வயது ஐந்திருக்கும். கமலாவின் தகப்பனார் எனக்கு ஏதோ எட்டிய உறவினர்தான். என்றாலும், என் தகப்பனாரும் அவரும் மிக அந்யோந்யமாய்ப் பழகியவர்கள். ஆகையால்தான் அவர் வீட்டுக்கு நான் போய்ச் சேர்ந்தேன்.

"அந்தச் சிறுவயதிலேயே கமலா மிக அழகாயிருப்பாள். அவளுடைய சௌந்தர்யமும் மழலைச் சொற்களும் அப்போதே என்னை வசீகரித்து விட்டன. அவளை நான் அடிக்கடி சீராட்டிக் கொஞ்சுவேன். அதிலே என்னவோ ஒரு இன்பம் இருந்தது. அவளும் என்னிடம் மிகுந்த பிரியம் வைத்தாள். 'குழந்தையும் தெய்வமும் கொண்டாடுமிடத்திலே' அல்லவா? அவள் ஒரு குழந்தை. நான்தான் என்ன, அப்படிப் பெரியவனா? இருந்தாலும், பெரியவர்களைவிட அதிகப் பிரேமை அவளிடம் எனக்கு உண்டாயிற்று.

"கமலா மிகுந்த பிடிவாதக்காரி. தான் விரும்பிய வஸ்து என்னவாயிருந்தாலும் வந்து தீரவேண்டும். வராவிட்டால், பிரமாதமாய் அழுவாள். என் ஒருவனால்தான் அவளைச் சமாதானப் படுத்த முடியும். கடைக்குத் தூக்கிக் கொண்டுபோய், பொம்மையோ, மிட்டாயோ ஏதாவது வாங்கிக்கொடுத்து, அவளுடைய அழுகையை நிறுத்திவிடுவேன். பள்ளிக்கூடம் செல்லும் சமயம் தவிர, மற்ற நேரமெல்லாம் அவளுக்கு விளையாட்டுக் காட்டிக் கொண்டிருப்பது ஒன்றே எனக்குப் பொழுதுபோக்கு. என்னொத்த பிற சிறுவர்களுடன் விளையாடச் செல்லும் ஆசையே எனக்கு ஏற்படுவதில்லை.

"ஐந்தாறு வருஷங்கள் கழிந்தன. அந்த ஊரிலுள்ள சிறிய கலாசாலையில் என் படிப்பு முடிந்தது. சமீபத்திலிருந்த நகரத்துக் கல்லூரியில் சேர்ந்து படிப்பதற்காக, நான் புறப்பட்டேன். இப்போது கமலா நினைவறிந்த பெண்ணல்லவா? குழந்தையிலே தளிரைப்போல் இருந்த அவள், இப்போது ஜாதி அரும்பைப்போல், புதிய எழில் பெற்றிருந்தாள். அவளைவிட்டுப் பிரிய எனக்கு மனமில்லை. அவளுக்கும் என்னவோ என்னைப் பிரிவது கஷ்டமாயிருந்தது. ஆனால், என் சிரமத்தை மனதைவிட்டு வெளிவிடாமல் நான் பொறுத்துக்கொண்டேன். அவளோ அழுதுவிட்டாள். சொன்னால் வேடிக்கையாயிருக்கும். சின்னக் குழந்தைகள் ஒன்றைவிட்டொன்று பிரியும்போது அழவாவது என்று நீ நினைப்பாய். அதென்னவோ அப்பா; அவள் கதறிவிட்டாள். அது என் மனசை ரொம்பச் சங்கடப்படுத்திவிட்டது.

"அவள் மட்டுமென்ன; அவளது தாயும் தந்தையுங்கூட, என்னைப் பிரிகையில், கண்கலங்கி விட்டார்கள். 'கமலா! நான் டில்லிக்கா போகிறேன்? அடிக்கடி வந்து உங்களையெல்லாம் பார்த்துச் செல்வேன். நீ என்ன இன்னும் சின்னக் குழந்தையா? நான் படிக்காமல் பாமரனாயிருக்க வேண்டுமென்று உன் விருப்பமானால், சொல்லிவிடு. இங்கேயேயிருக்கிறேன்' என்று சொன்னேன். அதற்குப் பிறகுதான் கமலாவின் துக்கம் சற்று அடங்கியது. நானும் நகரத்துக்குச் சென்றேன்.

"நான் சொன்னபடியே, என் கல்லூரிப் படிப்பு நாளில், அடிக்கடி கமலாவின் ஊருக்குச் சென்று, அவளையும் அவளது பெற்றோர்களையும் பார்த்துவிட்டு வருவேன். அச்சமயங்களில், அந்தக் குடும்பத்தார் அனைவரும் போட்டி போட்டுக்கொண்டு என்னை உபசரிப்பார்கள். நீண்டகால ரஜா வரும்போதெல்லாம், நான் என் சொந்தக் கிராமத்துக்குச் சென்று தங்குவது மிகச் சில நாட்கள்; கமலாவின் வீட்டிலேதான் பெரும்பாலும் போய் வசிப்பேன். குழந்தையில் எங்களுக்கிடையிலே உதித்த பாசம், எங்களையறியாமலே வளரமுற்றி வந்திருக்கிறது. அப்போது அதை நான் நன்றாய் அறியவில்லை. இன்றுதான் தெரிகிறது.

"கமலா மட்டில், என்னைக் கண்டால் ஆள்கண்ட சமுத்திரம்போல் உற்சாகம் பொங்கிவிடுவாள். ஒரு நல்ல தாவணி, ஒரு நல்ல புஷ்பம், புதிய நகை இவைகளைக் கமலா அணிந்துகொண்டால், அவள் ஓயாமல் என் முன்னே வந்து நின்று, 'ராஜம்! இந்தத் தாவணி எனக்கு எப்படியிருக்கிறது? இந்தப் பூ ரொம்ப வாசனையாயில்லை? இந்த

மாதிரி மெல்லிசு நகை போடுவதுதானே நாகரீகம்?—உனக்கு இதெல்லாம் பிடிக்காது; நீ படித்தவன்' என்று திரும்பத் திரும்பச் சொல்லி நகைப்பாள். 'ராஜம்! நாம் இப்பொழுது கொஞ்சம் பெரியவர்களாகிவிடவில்லை? சின்னக் குழந்தையாயிருந்தபோது அந்தக் கொய்யா மரத்தடியில் நீயும் நானும் விளையாடினோம். நான் கீழே விழுந்து காலிலே சின்னக் காயம் பட்டது; உடனே உன் கையைக் கோபத்தோடு கடித்தேன்; நீ சிரித்தாய்; அதன்மேல் நானும் சிரித்துவிட்டேனே. அது உனக்கு ஞாபகமிருக்கிறதா?' என்பது போன்ற பல கேள்விகளைக் கேட்பாள். ஐயோ! மோசம் போனேன் பாவி! இதற்கெல்லாம் அந்நாட்களில் எனக்கு அர்த்தம் தெரியவில்லை. வெண்ணெயை உருக்கி மணமுள்ள நெய் வருகிறது. என்னிடம் கமலா வைத்திருந்த வாஞ்சையும் உருகி, ஒரு புதிய உருவும் புதிய மணமும் பெற்றிருந்திருக்கிறது. அதை நான் அறியாமற் போனேன். ஆமாம்! அறிந்துதான் என்ன செய்திருக்கப் போகிறேன்? சமூகத்தின் ஊழல், தனி மனிதனின் பிரம்ம விபியாய் மாறுகிறது. பிரம்மா வந்து எழுதினால் என்ன? சமூகம் செய்தால் என்ன? உனக்கும் எனக்கும் அந்த இரண்டும் ஒன்றுதானே?

"என் கல்லூரிப் படிப்பின் இரண்டாவது வருஷம். பாடத்திலே மனம் செல்லாமல் ஏதோ ஒரு நாவலை வைத்துக்கொண்டு, என் அறையிலே உட்கார்ந்து படித்துக்கொண்டிருந்தேன். மஞ்சள் தடவிய காகிதம் ஒன்றைத் தபால்காரன் கொண்டுவந்து கொடுத்தான். பிரித்துப் பார்த்தேன். அது கமலாவின் கலியாணக் கடிதம்! கமலாவுக்குக் கலியாணம் என்று அறிந்ததும், என் உள்ளத்திலே ஒரு பரபரப்பு ஏற்பட்டது. மிகுந்த ஆனந்தம் ஒரு புறம்; அதன் நடுவே ஒரு குறுகுறுப்பு. எனக்கு ஒன்றும் புரியவில்லை; தலைகால் தெரியவில்லை, அவ்வளவு சந்தோஷம் கொண்டேன். சந்தோஷமாவது! ஏதோ ஒரு பரபரப்பு. கடைத்தெருவுக்கு ஓடினேன். கலியாண காலத்தில் நன்கொடையாய் அளிக்க, சிறந்த சில பரிசுகள் வாங்கினேன். கலியாணத்துக்குப் போய்ச் சேர்ந்தேன்.

"நான் போன சமயம் முகூர்த்தம் ஆகிவிட்டது; திருமங்கல்ய தாரணம் நடந்து, மணக்கோலத்துடன் ஊஞ்சலில், மயில்வாகன சுப்பிரமண்யரைப்போல் குனிந்து நெளிந்து உட்கார்ந்திருக்கிறாள் கமலா. பக்கத்திலே, மஞ்சள் உடையும் நெற்றியிலே சாந்துமாய், யௌவன மாப்பிள்ளை அமர்ந்திருக்கிறார். மாப்பிள்ளையின் முகத்திலே குதூகலம் நிறைந்திருந்தது. கமலாவை அரைக்கண்ணால் பார்த்து, அவள் அழகைப் பருகிப் பருகிப் பூரிப்பும் பெருமையும் அடைந்தவர்போல, அவர் காணப்பட்டார். ஆனால், கமலா...? அவளது முகத்தை உற்றுப் பார்க்க, எனக்கென்னவோ அப்போது ஒருவிதக் கூச்சமும் பயமுமாயிருந்தது. அதை மெள்ளச் சமாளித்து, கடைசியில் அவள் முகத்தைப் பார்த்தேன். கமலாவின் கண்களிலிருந்து முத்துப்போல் இரண்டு கண்ணீர்த் துளிகள் உதிர்ந்தன. என் முகத்தைக் காணவேண்டுமென்றே அந்நேரம் வரையில் அவள் காத்திருந்தது போல, எனக்குத் தோன்றியது. என் கண்களைத் தன் கண்கள் சந்தித்தவுடனே, அவள் சட்டென்று வேறுபுறம் திரும்பி, சேலைத் தலைப்பினால் கண்ணீரைத் துடைத்துக்கொண்டாள். கமலாவுக்கு என்ன வருத்தம்? ராஜாமாதிரி புருஷன் வாய்த்திருக்கிறான். ஆஜானுபாகு. நல்ல சிவப்பு. வசீகரமான தோற்றம். இப்படியிருக்க, கமலாவின் மனக்கலக்கத்துக்கு என்ன காரணம் என்று என்னால் அறியமுடியவில்லை. கலியாண காலத்தில் மாப்பிள்ளையழைப்பதும், நலுங்கிடுவதும், ஊஞ்சலாடுவதும், தலைவாரிப் பின்னிக்கொள்வதுமாயிருந்த கமலாவுக்கு ஓய்வு கிடையாது. எப்போதும் அன்னத்தைச் சூழ்ந்த மயில்கூட்டம் போல, பல பெண்கள் அவளைச் சுற்றிக்கொண்டேயிருந்தார்கள். எனக்கும் என்னவோ இனிக் கமலாவுடன் நெருங்கிப் பழகுவது உசிதமல்ல என்று தோன்றியது. ஆகையால், கமலாவின் அருகே சென்று பேசச் சந்தர்ப்பம் அப்போது ஏற்படவேயில்லை. எட்ட விருந்தபடியே ஒருவர் முகத்தை ஒருவர் பார்த்துக் கொள்ளலாமே; அதுகூடக் கிடையாது. கமலா ஏதோ புதிய மனுஷியாகிவிட்டாள். நானிருக்கும் திசையில் அவளுடைய முகம் திரும்பவேயில்லை. வேண்டுமென்றே அவள் வேறுபுறம் திரும்பிக் கொண்டதுபோல் எனக்குத் தோன்றியது.

"கமலாவுக்கு விவாகமாகி, ஒரு வருஷமிருக்கும். என் சொந்தக்காரர் ஒருவரது வீட்டிலே ஒரு கலியாணம். அதற்கு நான் செல்ல நேர்ந்தது. கமலாவின் ஊர் வழியாகவே போகவேண்டும். ஆகையால், அங்கே சென்றேன். கமலா இப்போது எப்படியிருக்கிறாள் என்று அறியவும் எனக்கு ஆவல்தான். அவள் பிரமாதமாய் மாறித்தான் இருந்தாள். அன்றலர்ந்த செந்தாமரைபோல், புதிய சோபைபெற்றுப் பொலிந்தாள். பருவமங்கையாய் இருந்தாள். அவளது குரலிலே ஒரு புதிய ரீங்காரம் திகழ்ந்தது. அவளது சொற்களிலே, பழைய இன்ப மழலையைக் காணவில்லையாயினும், புதியதொரு மதுரம் பெருக்கெடுத்தோடியது. அவளது பார்வையும், நடையும், சாயலுமெல்லாம், வார்த்தெடுத்த சொர்ண விக்ரகத்தை மெருகிட்டு இயக்கிவைத்ததுபோலிருந்தது. கமலா புதிய பெண்ணாய்த் தோன்றினாள். கலியாண காலத்தில் செய்தது போல், இப்போது அவள் நாணவில்லை. சலசலப்பாய் என்னுடன் பேசிப் பழகினாள். கமலாவின் பெற்றோரும் என்னிடம் முன்போல அன்பாகவே நடந்துகொண்டார்கள். நான் போகும் கலியாணத்துக்கு, அவர்களுக்குந்தான் அழைப்பு வந்திருந்தது. அவர்களில் யாரும் அதற்கு வரச் சௌகரியப்படவில்லை. ஆனால், கமலாவை மட்டில் அவசியமாய் அனுப்பவேண்டியிருந்தது. 'நல்லவேளையாய் நீ வந்தாய். கமலாவுக்கு யாரைத் துணையனுப்புவது என்று கவலைப் பட்டுக்கொண்டிருந்தோம். நீ அவளை அங்கே கொண்டுபோய் விட்டால் போதும். கொஞ்சகாலம் கழித்து, நாங்கள் போய்த் திருப்பி அழைத்து வந்துகொள்கிறோம்' என்றார் கமலாவின் தந்தை. நானும் சரியென்று தலையை ஆட்டினேன்.

"ஒரு ஜட்காவை அமர்த்திக்கொண்டோம். அதிலே கமலாவும் அவளுடைய சிறிய தங்கையும் நானும் ஏறி உட்கார்ந்து, பிரயாணம் புறப்பட்டோம். வண்டி கிளம்பும் வரையில் வாசாமகோசரமாய்ப் பேசிக் கொண்டிருந்த கமலா, அது கிளம்பிய பின் வெகுநேரமட்டும் வாய் திறக்கவேயில்லை. நானும் பொறுத்துப் பொறுத்துப் பார்த்தேன். கடைசியில், அவளது இந்த மௌனத்தை என்னால் சகிக்க முடியவில்லை; 'என் கமலா! என்னோடு பேசமாட்டேன் என்கிறாய்? என்னிடம் உனக்கு ஏதாவது வருத்தமா?' என்று கேட்டேன். அவள் பதில் சொல்லவில்லை. அதற்குப் பதிலாக, விம்மி விம்மி அழத் தொடங்கிவிட்டாள். 'ஏன் இப்படி அழுகிறாய்? என்ன சமாசாரம்?' என்று பலமுறை விசாரித்தேன். மீண்டும் மீண்டும் கண்ணீர் விட்டாளேயொழிய, பதிலே சொல்லவில்லை. நானும் விடாமல் அலட்டினேன். இறுதியில், பல கம்மல்களுக் கிடையில், 'அம்மா......என்னை ......உனக்குக் கொடுக்கணும்னு...... அப்பாதான்......இப்படி......' என்று தெற்றித் தெற்றிக் கூறிக்கொண்டே, மறுபடியும் தேம்பித் தேம்பி அழ ஆரம்பித்தாள்.

"கமலாவின் இந்த வார்த்தைகளைக் கேட்டதும், என்னைத் தூக்கி வாரிப் போட்டது. என்னை அறியாத ஒரு பரபரப்பு எனக்கு உண்டாயிற்று. அதே சமயத்தில், வண்டியில் அவள்

அருகே உட்கார்ந்திருப்பது ஏதோ முள்மேலிருப்பது போன்ற ஓர் உணர்ச்சியும் உண்டாயிற்று. குதித்தோடிவிட வேண்டும்போல் கூடத் தோன்றிற்று. கமலா என்னை வெறும் நேசனாய் மதித்து அன்பு சொரியவில்லை! காதலனாகவே பாவித்து, மறைவாகத் தன் பிரேமையைப் பொழிந்திருக்கிறாள்! அதை இந்நிலையில், இந்த ஏகாந்தத்தில், அறிய வந்தது எனக்குப் பரம சங்கடமாயிருந்தது. 'கமலா! என்னிடம் சொன்ன விஷயத்தை இனி யாரிடமும் சொல்லாதே. சொன்னால், வீண் அபவாதம் சூழும்; உன் வாழ்வு சூன்யமாகிவிடும். நடந்தது நடந்து விட்டது. இனி, நடந்ததே சரியென்று நாம் மதிக்கவேண்டும். இப்பொழுது உனக்கு ஒரு மார்க்கந்தான் உண்டு. உன் புருஷனிடம் அன்புகொள். அவரது பிரீதியைப் பெற வழி பார்' என்று, அவளுக்கு நான் புத்திமதி கூறினேன். மறுபடியும் அவள் 'பொல பொல' வென்று கண்ணீர் சொரிந்தாள்; பதிலே சொல்லவில்லை.

"அந்தப் பிரயாணத்துக்குப் பிறகு, கமலாவைச் சந்திப்பதற்கே, எனக்கு மிகவும் பயமாயிருந்தது. அவளுடைய ஊருக்குப் போவதைக்கூட நிறுத்திக்கொண்டேன். கோழை மனசை எப்படி நம்ப முடியும்? மறுபடியும் அவளை நேருக்கு நேரே அடிக்கடி கண்டால், மனதுக்கு என்ன சோதனை ஏற்படுமோ? அவளும் அவள் புருஷனும் ஒன்றுபட்டு வாழ்ந்து, அவள் அடையக்கூடிய இல்லற சுகத்துக்குத்தான் ஏதேனும் ஹானி நேர்ந்துவிட்டால்—? எப்படியாவது கமலா சௌக்கியமாயிருக்கவேண்டும்; ஆனந்தமாயிருக்கவேண்டும். என்னை அவள் அடியோடு மறந்தால்தான், அவள் அப்படிச் சுகமடைய முடியும். இப்படியெல்லாம் எண்ணியே, நான் ஒதுங்கியிருந்தேன்.

"நாம் ஒன்று நினைக்க, தெய்வம் ஒன்று நினைக்கிறது. ஒரு வருஷத்துக்கெல்லாம், திடுக்கிடத் தக்க ஒரு செய்தி கிடைத்தது. கமலாவின் கணவன் திடீரென்று இறந்துவிட்டான். மரணக் கிரியைகளுக்கு நானும் சென்றிருந்தேன். அப்போது எனக்கு அவளைப் பார்க்க மனம் சகிக்கவில்லை. கடைந்தெடுத்த பதுமைபோலிருந்த அவள், இந்த இளம் வயசிலே இவ்வளவு பெரும் கஷ்டத்தை எப்படித் தாங்குவாள்? 'கமலா! உனக்கு அளவுகடந்த துன்பம் நேர்ந்துவிட்டது. பகவானுக்குக் கண்ணில்லை; இப்படியா உன்னைச் சோதிக்க வேண்டும்' என்று அவளுக்கு என் துக்கத்தைத் தெரிவித்தேன். அவள் வாய் திறக்கவில்லை; கண்களிலே மட்டில் நீர் பெருக்கிக்கொண்டே யிருந்தாள்.

'ஐயோ! ராஜத்துக்குத்தான் அவளைக் கொடுத்தோமா? பணத்தையும் பவிஷையும் பார்க்கப்போய் இப்படி விபரீதம் வந்ததே!' என்று கமலாவின் தாய் பிரலாபித்தாள். 'அடி! என் புத்தி பிசகிப் போய்விட்டதடி' என்று அவளது தந்தை கதறினார். இதையெல்லாம் கேட்க, என்னால், சகிக்க முடியவில்லை. என்னுடைய பழைய பிரதிக்ஞை இன்னும் வலிமை பெற்றது. 'வைதவ்யமடைந்த கமலாவின் முன்பு இனி ஒரு பொழுதும் போவதேயில்லை' என்று கண்டிப்பான முடிவு கட்டினேன்.

"சில வருஷங்கள் சென்றன. நான் அரசியலில் தீவிரமாகக் கலந்து, பல விடங்களுக்கும் பிரசாரம் செய்யச் சென்றேன். ஒரு சமயம் கமலாவின் ஊருக்கும் செல்ல நேர்ந்தது. அவள் வீட்டுக்கெதிரேயுள்ள மைதானத்தில்தான் எந்தப் பொதுக்கூட்டமும் நடப்பது வழக்கம். நான் பிரசங்கித்த கூட்டமும் அங்கேதான் நடந்தது. அவ்வளவு கிட்டப் போய்விட்டு, அவள் வீட்டுக்குச் செல்லாமல் திரும்புவது முறையல்ல. ஆகையால், கூட்டம் முடிந்ததும் அங்கே சென்றேன். ஆனால், வீட்டுக்குள்ளே போகவில்லை. திண்ணையிலேயே உட்கார்ந்து, கமலாவின் தகப்பனாருடன் பேசிக்கொண்டிருந்தேன். சில நிமிஷங் கழித்து, உள்ளே யிருந்தும் அழைப்பு வந்துவிட்டது. அங்கே கமலாவைப் பார்த்தேன்.

"கமலா, பழைய கமலாவாக இல்லை. தன் சோகத்தை அடியோடு மறந்தவளாய்க் காணப்பட்டாள்; தேச காரியங்களில் மனதை ஈடுபடுத்தியவளாய்த் தோன்றினாள். எனது பிரசங்கத்தைப் பாராட்டி, 'ராஜம்! நீ இப்போது மிக நன்றாய்ப் பேசுகிறாயே. பூ, புஷ்பம் என்று தளுக்காய் வர்ணிக்கும் கதைகளும் கவிகளுந்தான் உனக்குத் தெரியுமென்று நான் நினைத்தேன். ஏழை மக்களின் துயரத்தையும் தேசத்தின் சீர்குலைவையும், கேட்போர் மனம் உருகும்படி சித்தரித்து விட்டாயே!' என்று குறிப்பிட்டாள். பிறகு, என்னைவிட மிக அழகாய் அரசியல் பிரச்னைகளைப் பற்றி என்னிடம் அவள் வாதித்தாள். அதைக் கண்டு நான் பிரமித்துப் போனேன். ஆமாம்; தன் சோகத்தை மாற்றிக்கொள்ள, தேசத்தின் சோகக் கடலிலே, மூழ்குவதும் ஒரு வழிதானே?

"இதற்குப் பிறகும், கமலாவின் ஊருக்குச் செல்ல, எனக்கு மனம் வருவதேயில்லை. அவள் தன் துயரத்தை மறந்த துறவியாகி யிருக்கலாம். ஆனால், அவளுடைய துர்ப்பாக்கியம் என் மனசை வாட்டிக்கொண்டே யிருந்தது. அவளை நான் எப்படிச் சந்திப்பேன்? நான் அங்கே போகவே யில்லை. திடீரென்று ஒருநாள் நெஞ்சையிடிக்கு மொரு சேதி எனக்கு வந்தது. 'கமலாவுக்கு மிக அபாயம். படுத்த



....மீண்டும் மீண்டும் கண்ணீர் விட்டாளே யொழிய, பதிலே சொல்லவில்லை....

படுக்கையா யிருக்கிருள். உன்னைப் பார்க்கவேண்டு மென்கிருள். உடனே வா' என்று, அவளுடைய தந்தை கடிதம் அனுப்பி யிருந்தார். நான் முன் பின் யோசிக்கவில்லை ; ஓட்டமாய் ஓடினேன். முகமுழி கிடைக்காமல் போய் விடுமோ என்று ஏங்கிக்கொண்டே விரைந்தேன்.

"வீட்டுக்குள்ளே ஓர் அறையில், அரை குறைப் பிரக்ஞையுடன், கமலா படுத்திருந்தாள். பக்கத்திலே தாயும் தந்தையும் நின்றுகொண் டிருந்தார்கள். 'கமலா! அம்மா! கண்ணைத் திற. ராஜம் வந்திருக்கிறனே' என்ருர் அவளது தந்தை. அதைக் கேட்டதும், வாரிச் சுருட்டிக்கொண்டு எழுந்து உட்கார முயன்ருள் கமலா. இல்லை, அவளால் அது முடியவில்லை. ஐயோ! என்ன கஷ்டம்! ஒரு தலையணையின்மேல் மற்ருென்றைச் சார்த்தி, அவள் தலையைச் சற்றுத் தூக்கி வைத்தார்கள். கமலா கண்ணைத் திறந்தாள். 'ராஜம்! ராஜம்!' என்று மெல்லிய குரலிலே அழைத்து, சோர்ந்து மெலிந்த தன் கையைத் தூக்க முயன்ருள். முடியவில்லை. மறுபடியும் சிறிது நேரம் கண்ணை மூடி ஏதோ தியானிப்பவள்போல் இருந்துவிட்டு, பிறகு விழித்தாள். அந்த மலர் விழிகளிலே, அன்பு நிறைந்திருந்தது! 'ராஜம்! நான் மறுபடியும் பிறப்பேன் ; அல்லவா?' என்ருள். 'இல்லை, கமலா! நீ இப்பொழுதே பிழைத்துவிடுவாய். மனசைத் தளரவிடாதே' என்று நான் சொன்னேன். 'பிழைப்பதா? இனி அது இல்லை; எனக்கு இஷ்டமுமில்லை......ராஜம்! ஆனல், நான் மறுபடி பிறப்பேன் ; நீயும் பிறப்பாய்......நாம் எல்லாருமே, பிறப்போம்.........' என்ருள். அப்போது அவள் முகத்திலிருந்த வேதனை போய் விட்டது. ஒரு அமைதி நிறைந்தது. ஆயினும், என்னல், அங்கே நிற்கச் சகிக்கவில்லை. திண்ணையில் வந்து உட்கார்ந்தேன். இரண்டு நிமிஷத்துக்கெல்லாம் எல்லாம் முடிந்தது. கமலா போய் விட்டாள். 'அவளை வாரிக் கொடுத்துட்டேண்டா' என்று கதறிக் கொண்டே, வெளியே வந்தார் அவளது தந்தை.

"என் மனம் எங்கெங்கோ அலைந்தது ; அன்று அவள் வண்டியிலே, கண்ணீரும் கம்பலையுமாய் என்னிடம் தனது தீராத துக்கத்தைச் சொல்லிய காட்சி என் மனக்கண் முன் வந்து நின்றது. ஐயோ கமலா!......"

ஆழ்ந்து தியானம் செய்வதனல், தியான மூர்த்தியின் உண்மை சுபாவம் வெளியாகும். அது பக்தனுடைய உள்ளத்தில் நன்ருய்ப் பதியும்.

—ஸ்ரீ பரமஹம்ஸர்.

காந்தி வாக்கு

என்னுடைய மதிப்புப்படி, அன்புக்கு இருக்கும் சக்தி அளவிட முடியாதது. பலாத்காரத்தைவிட, அன்பின் பலம் மிகுந்த வேகமும் வனப்பும் கொண்டதென்பதே என் கட்சி. அந்த அன்பு யாருக்கு இல்லையோ, யார் அதை நழுவ விட்டு விடுகிருனே, அவன் கோழை ; அவன் மனித வர்க்கத்தையே சேர்ந்தவனல்ல. அவன் தன்னைத் தானே காப்பாற்றிக் கொள்ளச் சக்தியில்லாதவன் என்பதை நன்ருகக் காட்டி விடுகிருன்.

பத்திரிகையை நம்பாதே!

ஹிந்து—முஸ்லீம் பிரச்னையை எவ்வளவுதான் ஒதுக்கிவிட்டு நிற்க நான் முயன்ருலும், அவை என்னை விடுவதாயில்லை. முஸ்லிம் நண்பர்கள் இந்த விஷயத்தில் நான் தலையிட்டு ஏதாவது செய்ய வேண்டுமென்று விரும்புகிருர்கள். ஹிந்து நண்பர்களும் அப்படித்தான் என்னை எப்பொழுதும் வேண்டிக் கொண்டே யிருக்கிருர்கள். நான் கல்கத்தாவி லிருந்தபோது, பீஹாரிலுள்ள ஒரு நண்பர், மிகுந்த ஏக்கத்தோடும் பரிதாபமாகவும் எனக்கொரு கடிதம் எழுதி யிருந்தார். ஹிந்துச் சிறுவர்களை, முக்கியமாகப் பெண்களை, தூக்கிச் செல்லும் கொடூரத்தைப் பற்றி, உள்ள முருகும்படி அவர் விவரித்திருந்தார். நான் அதை அப்படியே நம்ப முடியாதென்றும், தகுந்த ஆதாரங்களுடன் ருஜுப்பித்தாரானல், என்னல் வேருென்றும் செய்ய முடியாவிட்டாலும், நான் அக்கடுஞ் செயலைப் பகிரங்கப்படுத்திக் கண்டிப்பதாக எழுதி இருந்தேன். அட்டூழியங்களைப் பற்றி, ஏராளமாகப் பத்திரிகைகளில் வந்த செய்திகளை எனக்கு அவர் அனுப்பினர். பத்திரிகைச் செய்தி பூராவையும் நான் நம்ப முடியாதென அந்த நண்பருக்குத் தெரிவித்து விட்டேன். அநேக சந்தர்ப்பங்களில், பத்திரிகைச் செய்திகள் நம்மிடையே தப்பபிப்பிராயங்களை உண்டாக்கி நம்மைக் குழப்பி யிருக்கின்றன.

கர்மமும் துறவும்

எனக்குத் துறவிலே நம்பிக்கையுண்டு ; ஆனல், கர்மத்திலும் கர்மத்தின் மூலமுமே துறவைத் தேடவேண்டும். உடம்போடு கூடிய உயிருக்கு, கர்மம் இன்றியமையாததொரு நிபந்தனையாகும். ஏதோ ஒரு கர்மத்தை ஒரு விநாடியேனும் புரியாமல், ஜீவ சக்கரம் ஓடாது. ஆதலால், தேகம் கர்மத்தைப் புரிந்து கொண்டே யிருக்கும்போது, ஆத்மா அந்தக் கர்மத்தில் ஒட்டாமல் சுதந்திரமா யிருப்பதுதான் துறவாகும். துறவு மார்க்கத்தைப் பின்பற்றுபவன், சகல கர்மங்களையும் கைவிட்டு விடுவதில்லை ; கர்மத்திலே சிறிதும் பற்றில்லாமலும், தூய பரோபகார எண்ணத்தோடும் கர்மம் புரிவதாலேயே துறவு நிலையை அடைகிருன்.

ஹிம்சை அவசியமா?

ஏதோ ஒரு ஜீவனை ஏதோ ஒரு வகையில் அழித்துத்தான் தீரவேண்டி நேர்கிறது ; அதில் சந்தேகமில்லை. ஜீவனைத் தின்றே ஜீவன் பிழைக்கிறது. அதனல்தான், அழிவே தன் போஷணைக்குத் தேவைப் படாததொரு ஜீவிய நிலையை அடைபவனே உன்னதமான நித்யானந்தத்தைப் பெறுவான் என்று, ரிஷீச்வரர்கள் கூறியுள்ளார்கள். மாக்கறி உணவை உண்பவன், மிகக் குறைவாகவே ஜீவ ஹிம்சை புரிகிருன். இந்தத் தேகத்தோடு உள்ளவரையில் அவ்வாறு மிகச் சொற்ப ஜீவ ஹிம்சை மட்டிலுமே புரிந்து வாழ்பவன் அவ்வானந்தத்தை அடைய முடியும். பிற ஜீவனை அழிக்கும் அவசியத்தை ஒருவன் எவ்வளவுக்கெவ்வளவு குறைத்துக் கொள்கிருனே, அவ்வளவுக் கவ்வளவு கடவுள் அல்லது சத்யத்தை அவன் நெருங்குகிருன்.

உலகத்துக்கே விடுதலை

மேல்நாட்டுச் சுரண்டல் உருளையின் கீழே அகப்பட்டு, பலவீனமான பல நாட்டு மக்கள் நசுங்கிக்கொண் டிருக்கிருர்கள். அந்தச் சுரண்டல் வேலையிலே, மூத்த பங்காளியா யிருப்பது இங்கிலாந்தே. இந்தியாவை விடுவிப்பதன் மூலம், மேற்படி சுரண்டல் உருளையினின்றும் உலகின் சகல பலவீன நாடுகளையுமே விடுவித்துவிட, நான் முயல்கிறேன். ஆங்கிலேயனின் மனத்தை இந்தியா மாற்றிவிட முடியும். அப்படி மாற்றிவிட முடிந்தால், உலகப் பொதுநலக் கூட்டுறவு ராஜ்யமொன்றில், இந்தியா தலைமைப் பங்காளியா யிருக்கும். பிரிட்டனுக்கு இஷ்டமானல், அந்தக் கூட்டுறவு ராஜ்யத்தில் தானும் சேர்ந்து கொள்ளலாம்.

பாலி மக்களின் கலை வாழ்வு

—(சஞ்சாரி)

நான்கு நூற்றாண்டுகளுக்கு முன் வரையில், இந்துமதம் ஓங்கி யிருந்தது பாலித் தீவில். இப்போதும், அங்கே இதன் செல்வாக்கு காணப்பட்டுத்தான் வருகிறது. சுமார் 1900 வருஷங்களுக்கு முன்பு, இந்தியர் போய்க் குடியேறியது அந்தத் தீவு. இந்திய நாகரிகத்தின் - இந்தியக் கலாச்சாரத்தின் - ஒரு கிளை, எப்படி வேர் விட்டு, துளிர்த்து, தனித் தன்மையுடன் ஓங்கி வளர்ந்து வந்திருக்கிறது என்பதற்கு உதாரணம் அந்தத் தீவிலே காணக்கிடக்கிறது என்று சொல்லலாம்.

சமய விஷயத்தில் பாலி மக்கள் மிகவும் தாராள மனோபாவம் படைத்தவர்கள். வெளியிலிருந்து வரும் உயர்ந்த சமயதத்துவங்களை, அவர்கள் எதிர்த்து நிராகரிக்கமாட்டார்கள்; அங்கீகரித்து, தங்கள் மதத்தோடு சேர்த்துக் கொள்வதே அவர்களது வழக்கம். இந்துமதத்துக்குப் பிறகு, புத்தமதம் அந்நாட்டுக்குச் சென்றது. புத்தனைச் சிவபிரானது தம்பியாகப் பாவித்து, அவர்கள் உறவு கற்பித்து விட்டார்கள்! நாளைக்கு அங்கே ஏசுநாதரும் சிவபெருமானது மற்றொரு தம்பியாகி விடுவாரானால், நாம் ஆச்சர்யப் படுவதற்கில்லை. ஏனெனில் இப்போது கிறிஸ்தவப் பாதிரிகள் அந்நாட்டில் மிக மும்முரமாகப் பிரசாரம் செய்து வருகிறார்கள்.

இன்று ஜெர்மன் காலடியில் மிதிபட்டுக் கண்ணீர் விட்டுக் கொண்டிருக்கிறதே ஹாலந்து, அந்த ஹாலந்து நாட்டுக்குச் சொந்தமானது பாலித் தீவு. எனினும், பாலி மக்களின் வாழ்க்கை முறையும் கலாச்சாரமும் இதுவரையில் அதிகமாகப் பாதிக்கப்படவில்லை. அவர்களுடைய ஒவ்வொரு கிராமமும், ஒரு சிறிய குடியரசு போன்றது. கூட்டுறவு முறையில் அவர்கள் வாழ்க்கை நடத்துகிறார்கள். மிக உயர்ந்த கலாச்சாரங்கள் நிறைந்தது அவர்களுடைய வாழ்க்கை.

பாலி நாட்டில், சகலரும் கலைஞர்கள். கூலிகளும் ராஜகுமாரரும், புரோகிதரும் குடியானவரும், ஆண் பெண் அடங்கலும் நாட்டியமாடுவார்கள்; இசைக் கருவிகளை மீட்டுவார்கள்; சித்திரம் வரைவார்கள்; அல்லது மரத்திலே பதுமைகள் செதுக்குவார்கள். அங்கே ஒவ்வொரு தலை முறையும் புதிது புதிதாக, கலைச் செல்வத்தைச் சிருஷ்டித்து வருகிறது.

பாலி நடனம் சம்பந்தமான படங்களை 264, 265-ஆம் பக்கங்களில் பார்க்கவும்.

பின் சந்ததிக்கென்று சிற்பமோ, சித்திரமோ எதுவும் அந்நாட்டில் நிலைப்படுத்தப் படுவதில்லை. பாலியில் அகப்படும் பாறைக் கற்கள் சில வருஷங்களுக்குள்ளே பொடிப் பொடியாய்ச் சிதைந்து உதிர்ந்து விடும்; மரப் பதுமைகளையோ கறையான் அரித்து விடுகிறது; காகிதமும் துணியுமோ பெருங் குளிரின் ஈரத்திலே கசங்கிப்போகின்றன. ஆதலால், சாசுவதக் கலைப் பொருள் எதுவும் அங்கே கிடையாது. அவ்வப்போது அந்தந்தச் சந்ததியார், பழமையுடன் புதுமை கலந்து, தத்தம் மனோ தர்மத்துக்கிசைய, கோயிற் சிலைகளையும் சிற்பங்களையும் சித்திரங்களையும் பிறவற்றையும் படைத்துக் கொள்கிறார்கள். ஆகையால், கலைத்திறமை அந்நாட்டிலே ஜீவநதி போல எந்நாளும் பெருகிக் கொண்டே யிருக்கிறது.

பாலியிலே ஒவ்வொரு கிராமத்துக்கும் ஒரு சிறந்த வாத்தியக் கோஷ்டி உண்டு; நடனக் கோஷ்டியும் உண்டு. வாழ்வுக்கும் சாவுக்கும் உற்சவங்களுக்கும் அவர்களை அழையாமல் தீராது.

பாலித்தீவின் நடனங்கள் உலகப் பிரசித்தமாகும். அந்நாட்டின் கலை வளத்தை-முக்கியமாக அதன் நடன நட்பங்களை - காண்பதற்கென்றே மேனாட்டிலிருந்து ஏராளமான அந்நியர்கள் அங்கே பிரயாணம் செய்துவிட்டு வருகிறார்கள். அந்நாட்டின் நடனங்களிலே மிக முக்கியமானது லேகாங் என்பது தான். இது ஸ்திரீகளுக்கென்றே ஏற்பட்டது.

லேகாங் நாட்டியத்திலே மூன்று பெண்கள் வருவார்கள். கிராமத்து ஆலமரத்தடிதான் நடன அரங்கம். சோர்ந்து களைத்த மூன்று நடிகைகள் அங்கே உட்கார்ந்து கொண்டிருப்பார்கள். தங்கக் கிரீடமும் புஷ்பங்களும் ஆடம்பரமான ஆடைகளும் அவர்கள் அணிந்திருப்பார்கள். முகத்திலே பவுடர் ஏராளமாய்ப் பூசி யிருப்பார்கள். கூட்டம் கொஞ்சம் கொஞ்சமாய் வந்து கூடும். போதிய கூட்டம் வந்து சேர்ந்த உடனே, கீத வாத்தியங்கள் மெல்ல மெல்ல முழங்கத் தொடங்கும். நடனப் பெண்கள் மூவரிலும் தலைவி, மந்த முகத்தோடேயே எழுந்து, அரங்கத்தின் நடுவே பொம்மைபோல் நிற்பாள். திடீரென்று வாத்தியங்கள் அலறும். ஏதோ மின்சாரக் கதிர் வந்து தாக்கியதைப் போல, நடிகை துள்ளி நிமிர்வாள்; ஓர் அற்புத பாவத்தை அபிநயம் பிடித்து உற்சாக நிறைவுடன் ஆடிக் குதிப்பாள், உடல் முழுதும் சொகுசாய் வளையும். சிட்டுக் குருவிபோல், தத்தித் தத்திச் சுழலுவாள். ஒரு புஜம் தூக்கி நிற்கும். விரல் நரம்புகள் முறுக்கேறி விதிர்த்துக் கொண்டிருக்கும். கண்கள் விண் வெளியை எறிட்டுப் பார்க்கும். ஒவ்வொரு முறை வாத்தியங்கள் மாறிக் கொட்டும் பொழுதும், நடிகையின் பாவங்களும் கோலங்களும் மாறும். வரவரத் துரிதம், துரிதம், அதி துரிதமாய் நடனம் விறுவிறுப் படையும். காலைப் பொதீர் என எடுத்துக் குத்திடுவாள். வில் நாணைப்போல் அந்தக் கால் அதிரத்

கஸ்டி ஆலிட் ஓகா: கீதவாத்ய கோஷ்டித் தலைவர். பாலியில் இவர் ஒரு முக்கிய ராஜகுமாரர். இடது புற முள்ள பையன், மரமும் பித்தளையும் சேர்ந்ததும், ஆமை நுபமுள்ளதுமான ஒரு ஜாலரைக் கொட்டுகிறான்.

டிஜாக் என்ற நாட்டியத்தில் மூன்று முகமூடிகள். இடது கோடியிலிருப்பது ஒரு கனவான். நடுவிலிருப்பது ஒரு ராஜகுமாரன். வலது கோடியிலிருப்பது ஒரு முரட்டாத்மா.

தொடங்கும். அங்கே ஆரம்பித்த அந்த நடுக்கம் மெல்ல மெல்ல, இடை, மார்பு, புஜம், கழுத்து, கடைசியிலே தலைவரையில் பரவும்; முடியிலிருந்த புஷ்பங்கள் நாலா புறமும் சிதறிக் குதறிவிழும். சட்டென்று அந்த நடுக்கம் நிற்கும். பெண் ஒரு பந்தைப்போல் வலமும் இடமும் திரும்பிச் சுழன்று, நடனத்தை நிறுத்தாமலே கீழே கிடக்கும் இரு விசிறிகளை எடுப்பாள். அவற்றைத் தனது இரு தோழிகளிடம் கொடுப்பாள். பிறகு, மூவரும் ஆடுவார்கள். அதன்பின், மூவருமாய்ச் சேர்ந்து, ஒரு நீண்ட புராணக் கதையை அபிநயித்து நடிப்பார்கள்.

இந்த லேகாங் நடனத்தைச் சிறிது மாற்றிய டிஜோகிட் என்றொரு நாட்டியமுண்டு. இது கொஞ்சம் சிற்றின்ப ரீதியானது என்று பாலிமக்கள் கருதுகிறார்கள். ஆயினும், இதுவும் மிகப் பழக்கத்திலிருக்கிறது. இதில் ஒரு பெண் லேகாங் நாட்டியம்போல நடித்துக்கொண்டேயிருக்கையில், இடை நடுவில் சபையில் உள்ள எவனையாவது பார்த்து, காம சமிஞ்ஞைகள் செய்வாள். உடனே அவனும் எழுந்து, அவளோடு சேர்ந்து குதித்து ஆடத் தொடங்குவான். இந்த வெறியிலே சில சமயம் பல புருஷர்கள் சேர்ந்து, கூத்தாடுவதுமுண்டு. அபூர்வமாகச் சில அடிதடிகளும் இதிலே நடந்திருக்கின்றன.

பாரிஸ் என்ற மற்றொரு நடனம் யுத்த நர்த்தனமாகும். பாலி நாட்டு ராஜகுமாரன் ஒவ்வொருவனும் இதை ஆடத் தெரிந்திருக்க வேண்டும். குதிகால்மீது குந்தி உட்கார்ந்து, முழங்கால்களை உடலுக்கு நேராய் இருபுறமும் அகல விரிப்பது இதில் அவசியம். நல்ல தேகாப்பியாசமும், உணர்ச்சிகளைக் காட்டும் முகபாவமும், ஓங்கிய குரலும் உள்ளவனே இந்த நடனத்தைப் பயில முடியும்.

கேபியார் என்ற வேறொரு புதிய நடனம் இப்போது மிகப் பிரபலமாயிருக்கிறது. தரையை விட்டு எழுந்திராமலே நடிகன் பற்பல பாவங்களை இதிலே காட்டுகிறான். இதை மேரியோ என்ற மேதை சில வருஷங்களுக்கு முன் சிருஷ்டித்து அபிநயிக்கத் தொடங்கினான். அவனுக்குப் பல சிஷ்யர்களும் இன்று ஏற்பட்டிருக்கிறார்கள்.

மின்சார பாட்டரியைப் போல, தங்கள் உடம்பு ஒரு சக்திக் களஞ்சியமே என்று பாலி நாட்டான் ஒவ்வொருவனும் நம்புகிறான். மந்திர வித்தைகளைக் கற்றால், அந்தச் சக்தியைத் தங்கள் இஷ்டப்படி உபயோகிக்கலாம் என்பது பாலி மக்களின் நம்பிக்கை. இந்தச் சக்தியை மந்திர தேவதைகள் ஆட்டி வைப்பதாலேயே தங்களுடைய சுகதுக்கங்களெல்லாம் ஏற்படுகின்றன என்று அவர்கள் கருதுகிறார்கள். அந்த மந்திர தேவதைகளின் சித்தங்களைத் தம் இஷ்டப்படி திருப்புவதற்கு நாட்டியத்தையும் ஒரு முக்கிய சாதனமாக அவர்கள் மதிக்கிறார்கள்.

அவர்களின் மந்திர தேவதைகளுக்குள் எல்லாம் பெரிய தலைவி ரங்டா என்பவள்தான். அவளைப்பற்றிப் பல கதைகள் உண்டு. ரங்டாவை எதிர்த்து, மனிதருக்குப் பக்கத் துணை நின்ற அருள் மூர்த்தியாக பாராங் என்ற ஒரு சிங்கத்தை அவர்கள் போற்றுகிறார்கள். பாராங் என்ற வனராஜனுக்கும் ரங்டாவுக்கும் நடந்த போராட்ட நாடகம், நாட்டிய ரூபமாய் அடிக்கடி பாலியிலே நடைபெறும். ஆடுவோருக்கு ஆவேசங்களெல்லாம் கூட வந்துவிடும். பூசாரிகள் வந்து அவற்றைத் தணிப்பார்கள். ரங்டா பெரிய அசுரக்கோலம் தாங்குவாள். பாராங் என்ற சிங்க ரூபத்தை, தலைப்புறம் ஒருவனும் கால் பக்கம் ஒருவனுமாய் இருவர் நுழைந்துகொண்டு, ஆட்டி வைப்பார்கள்.

ஈட்டி நடனம் ஒன்றில், நடிகன் ஆவேசமுற்றித் தன் உடம்பிலே ஈட்டியால் குத்திக் கொள்வான். ஆயினும், அந்தப் பரவச நிலையிலே அவன் மகா ஆக்ரோஷமாய்த் தேகத்திலே குத்திக் கொண்டாலும், ஒரு காயங்கூடப் படுவதில்லை. அது நடனத்தின் லாகவமே என்று நமக்குத் தோன்றினாலும், பாலி மக்கள் சொல்லும் காரணம் வேறாகும். சுவாமியே அந்த ஈட்டிக் குத்துக்களைத் தாங்கிக் கொள்வதாக அவர்கள் நம்புகிறார்கள்.

ஈட்டி நாட்டியக்காரன் ஆவேசத்தோடு தன் மார்பில் குத்திக் கொண்டாலும் காயமேற்படுவ தில்லை!

இந்த மாதிரி இன்னும் பல நடனங்களும் நாடகங்களும் பாலி மக்கள் ஆடுகிறார்கள். இவற்றைப் பார்ப்பதிலும் இவற்றிலே கலந்து கொள்வதிலும் அந்த ஜனங்கள் ஒவ்வொருவருக்கும் பரம ஆர்வம். ஒவ்வொரு நாள் இரவும் அண்டை அயலில் ஏதாவதொரு நாடகமோ நாட்டியமோ சங்கீதமோ நடவாமல் இருப்பதேயில்லை. கிழவர் முதல் சிறுவர் வரையில் அநேகமாய் ஊரடங்கலும் திரண்டு அதைப் பார்க்கச் சென்று விடுகிறார்கள். அவர்களின் இந்த நாடகம், நடனம், இதர கலைகள் அனைத்தும், அவர்களது கூட்டுறவு வாழ்க்கை முறையை வளர்க்கும் ரீதியிலேயே பயிலப்பட்டும் நடத்தப்பட்டும் வருகின்றன.

மேல் நாட்டு நாகரிகம் இன்னும் அவர்களிடம் பரவவில்லை. ஸினிமாக் கொட்டகைகளையோ, பிற நாட்டு நாடக முறைகளையோ அவர்கள் ஆதரிக்கவில்லை. இயற்கைச் செல்வத்தில் அவர்கள் கொழித்துக் கொண்டு, அழகும் இன்பமும் நிறைந்த கலை வாழ்வு வாழ்ந்துகொண்டிருக்கிறார்கள். அவர்களுக்குக் காசைப்பற்றிக் கவலையில்லை; ஏனெனில், அவர்களது வாழ்க்கை கூட்டுறவு முறையில் நடப்பதால், காசின் தேவையே அவர்களுக்கு ஏற்படுவதில்லை.

இப்பேர்ப்பட்ட பாலித் தீவில் இப்போது மெல்ல மெல்ல மேல் நாட்டு நாகரிகம் தலையை நுழைக்க ஆரம்பித்திருக்கிறது. மோட்டார்க் கார்களும், அந்நியத் துணிகளும், மண்ணெண்ணெய்களும், பெட்ரோல் முதலியனவும் புகுந்து, கொள்ளை கொள்ளையாய்ப் பணத்தை வெளியேற்றிவரத் தொடங்கியிருக்கின்றன. வாலிபர்கள், தங்கள் மூதாதையரை விட்டுப் பிரிந்து, மேல் நாட்டு நாகரிக மாயையில் மூழ்க ஆரம்பித்திருக்கிறார்கள். இதனால் என்ன விபரீதம் நேரிடப் போகிறதோ? அந்நாட்டின் இயற்கைச் செல்வத்தையும், உலகம் வியக்கும் உன்னதமான கலாச்சாரங்களையும் சீர்குலையாமல் இனி யார் காப்பாற்ற முடியும்?

பாலியில் முதிர்ந்த கலைஞர் இளங் கலைஞருக்குக் கலை பயிற்றுவிப்பார். இளம் மாணக்கர்களும் சும்மா விருப்பதில்லை. தம்மிலும் இளைய சிறுவருக்கு, அதே சமயத்தில் அவரும் பயிற்சியளித்துக்கொண்டிருப்பர். இதனால் பாலிக் கலைகளிலே, தைலதாரையைப் போல் இடைவிடாததொரு தொடர்ச்சியிருந்துகொண்டேயிருக்கிறது. அதோடு பயிற்சியே, ஒரு சிறந்த கச்சேரிபோல் தான் இருக்கும். இங்கே ஓரிளம் லேகாங் நாட்டிய நட்டுவர், சிறுமியொருத்திக்குப் பயிற்சியளிக்கிறார்.

என்று மழியாப் பிரசித்தி பெற்ற சில சரித்திர புருஷர்கள், உயரமில்லாத குள்ளர்களாவர். இதோ பாருங்கள்:

	அடி	அங்குலம்
ஜூலியஸ் ஸீஸர்	5	2
நெப்போலியன் போனபார்ட்டி	5	1
மகா அலெக்ஜாந்தர்	5	3
லெனின்	4	11
ஸன்யட் ஸென்	5	0
தளபதி போதா	5	1

உலகச் சுழலிலே

சக்கரம்போல் எல்லாம் விடாமல் சுழன்று வருகின்றது. மேலே சென்றது கீழாகும்; கீழே போனது மேலாகும். ஒவ்வொரு சம்பவமும் பராசக்தியின் எண்ணப்படியே நடக்கும்; அல்லது அதன் எண்ணத்தில் உண்டான மூல நியமனத்தின் பயனாக ஒன்றன்பின் ஒன்று தொடர்ந்து வரும். உலக நிகழ்ச்சிகளில் தவறாத தொடர்பு இருக்கிறது. எதுவாயினும், தெய்வ நியமனமே. எல்லாம் நலமே யாகும். ஒரு வேளை 'கடவுள் பொய், எல்லாம் தற்செயல்' என்று கருதினாலும், அதனால் நீயும் நியமமற்று இருக்கவேண்டியது அவசியமில்லை.

—மார்க்கஸ் ஒளரேலியஸ்.

* * *

ஒரு தம்பிடி சம்பாத்யம்!

ஒரு மனிதன் பதினான்கு வருஷங்களாகத் தனிக் காட்டில் தவஞ்செய்து நீர்மேல் நடக்கும் சக்தியைப் பெற்றான். இதை யடைந்ததற்கு வெகு சந்தோஷப்பட்டு, அவன் தன் குருவிடம் சென்று, "ஸ்வாமி! ஸ்வாமி! நான் நீர்மேல் நடக்கக்கூடிய வித்தியைப் பெற்றிருக்கிறேன்," என்றான். அதைக் கேட்ட குருவானவர், "சே, பதினான்கு வருஷங்களாக நீ தவம் செய்ததன் பலன் இதுதானா? உண்மையில் நீ ஒரு தம்பிடிதான் சம்பாதித்திருக்கிறாய். பதினான்கு வருஷங்களாகச் செய்த பிரயத்தனத்தால் நீ நிறைவேற்றக்கூடிய ஒரு காரியத்தை, சாதாரண ஜனங்கள் ஓடக்காரனுக்கு ஒரு தம்பிடி கொடுத்துச் செய்துவிடுகின்றனர்" என்றார்.

—ஸ்ரீ பரமஹம்ஸர்.

கிழவிகள் கோயிலில் 'பெண்டேட்' என்ற நைவேத்ய நடனம் புரியும் சித்திரம்

'லெகாங்' என்ற நடனத்தில், நடிகை ஒரு தங்கக் கிரீடமும் பிராங்கிபாணி என்ற புஷ்பங்களும் அணிகிறுள். இது லளிதமான நாட்டியம் ; பெண்களுக் குரியது. இதைக் கிராமத்திலே ஆல்மரத்தினடியில் ஆடுவார்கள்.



தரையை விட்டு எழுந்திரா மல்டிக்கும் அரிய 'கேபி ர்' என்ற நடனம்

நிலவொளியில் நடிக்கும் 'அட்ஜா' என்ற மன்னனும் கோமாளி மந்திரியும்

'லெகாங்' என்ற நாட்டிய அபிநயங்களைக் கற்கும்

...ன்ற நடனத்துக்கு முன்னே, முக 'டிஜாக்' என்ற நாட்டியம் ...றும். அதில் ஒரு நடிகன்.

...ற கிராமவாசிகள். ராட்சஸ நட...



பரவசமாய் நடனமாடும் 'லெகாங்நாட்டியக்காரி

டிஜ் என்ற முகமூடி நாட்டியத்தில் பெண் பூதம்





வேதாந்த விசாரணை:

சகுணக் கடவுள் வணக்கம் நல்லதா?

(ஆல்பர்ட் ஐன்ஸ்டைன்)

[இன்று ஸயின்ஸ் உலகத்தின் மன்னன் என்று கீர்த்தி வாங்கியவர் ஆல்பர்ட் ஐன்ஸ்டைன். பிரபஞ்சத்தின் மர்மத்தை விளக்க பரஸ்பரக் கவர்ச்சி (ரெலடிவிடி) என்றோர் புதிய சித்தாந்தத்தைக் கூறியவர். உலகம் பழித்தும் அந்தச் சித்தாந்தத்திலே காலமும் வெளியும், வேதாந்தத்திலே போல, கூடி யிழைகின்றன. ஐன்ஸ்டைன் பிறப்பால் யூதர். நாஜி ஆட்சியால இன்று தாம் பிறந்த ஜெர்மனியை விட்டு அமெரிக்காவிலே அக்ஞாத வாசம் புரிந்து வருகிறார்.]

மனித வர்க்கத்தினுடைய ஆத்மீக பரிணமத்தின் வாலிப தசையிலே, மனிதனது சொந்த உருவையே அச்சாய்க் கொண்டு, கடவுள்களை மனிதனின் கற்பனை சிருஷ்டித்து விட்டது. இந்தக் கடவுள்களின் ஆக்ஞைப் பிரகாரமே, நாம் காணும் இவ்வுலகம் நடப்பதாகப் பாவிக்கப்பட்டது. இந்தக் கடவுள்களின் சித்தத்தைத் தனக்குச் சாதகமாய்த் திருப்புவதற்காக, மந்திரத்தையும் பிரார்த்தனையையும் மனிதன் கைக்கொண்டான்.

தற்போது போதிக்கப்படும் மதங்களிலே வர்ணிக்கப்பெறும் கடவுள், அந்தப் பழைய கடவுள்களைப்பற்றிய கற்பனையை உயர்த்திய தொரு கருத்தே யாகும். மனித உருவைக் கடவுளுக்கு இதிலுமே அளிக்கப்பட் டிருப்பதற்கு அடையாளம், மனிதன் பிரார்த்தனை புரிவதுதான். தங்கள் விருப்பங்கள் நிறைவேற வேண்டும் என்று, கடவுளை நோக்கி இப்போதும் மனிதர்கள் பிரார்த்தனை புரிகிறார்க ளல்லவா?

சர்வ சக்தியும் நீதியும் சர்வ தயாளமும் நிறைந்ததொரு சகுணக் கடவுள் இருப்பதாகப் பாவிப்பது, மனிதனுக்கு மன ஆறுதலும் உதவியும் தந்து வழி காட்டுகிறது என்பதை யாரும் மறுக்க மாட்டார்கள். மேலும், அந்தப் பாவனை மிகச் சுலபமா யிருப்பதால், மனவளர்ச்சி யற்ற மிகச் சாமானிய மனிதனும் அதைக் கடைப்பிடிக்கச் சாத்தியமா யிருக்கிறது.

ஆனால், மற்றொரு பக்கம் பார்த்தால், இந்தக் கடவுள் பாவனையிலே பல குறைகளும் இருக்கின்றன. சரித்திர கால ஆரம்ப முதலே, அந்தக் குறைகளால், பல இன்னல்களும் விளைந்திருக்கின்றன.

உதாரணமாக, கடவுள் சர்வ சக்திவந்தா யிருந்தால், ஒவ்வொரு சம்பவமும்—மனிதனுடைய ஒவ்வொரு செயலும் எண்ணமும் உணர்ச்சியும் ஆசையும் உள்படச் சகலமும்—கடவுளின் செயலே யாகும். அத்தகைய சர்வ வல்லமையுள்ள கடவுளிருக்கும்போது, மனிதரின் செயல்களுக்கும் கருத்துக்களுக்கும் அவர்களை எப்படிப் பொறுப்பாளிகளாய்க் கொள்ளுவது?

மனிதருக்குத் தண்டனையும் பரிசுகளும் அளிக்கும்போது, கடவுள் ஓரளவு தமக்குத்தாமே தீர்ப்பளித்துக் கொள்பவராகி விடுவார். அப்படியானால், அவர் நன்மையும் நீதியும் நிறைந்தவர் என்று கூறுவது எப்படிப் பொருந்தும்?

ஸயின்ஸுக்கும் சமயத்துக்கும் தற்காலம் நிகழும் முக்கியமான தகரார், சகுணக் கடவுள் பாவனை பற்றியதே யாகும். காலத்திலும் வெளியிலும், பொருள்களுக்கும் சம்பவங்களுக்கு முள்ள பரஸ்பர சம்பந்தத்தை நிர்ணயிக்கும் பொது விதிகளை ஸ்தாபிப்பதே, ஸயின்ஸின் நோக்கமாகும்.

இந்த விதிகள் அல்லது இயற்கையின் சட்டங்கள் நிரூபிக்கப் படவில்லை—பொதுவாய்ப் பல பொருள்களுக்கும் இவை பொருந்தி வருகின்றனவா என்றே பார்க்க முடிகிறது. அது ஒரு வேலைத் திட்டமே யாகும். அரைகுறை வெற்றிகள் அதிலே ஏற்பட்டிருக்கின்றன. அந்த வெற்றிகளை அஸ்திவாரமாய்க் கொண்டு, அவற்றின் தத்துவங்களை நிலைநாட்டி விடுவது சாத்தியந்தான் என்ற ஒரு நம்பிக்கை யளவிலேயே, அது இருந்து வருகிறது. ஆயினும், இந்த அரைகுறை வெற்றிகளை மறுப்பவர் யாருமில்லை; இவை மனிதனுடைய மன மயக்கம் என்று சொல்வோரும் எவருமில்லை.

பிரபஞ்ச சம்பவங்களிலே பற்பல அம்சங்கள் சேர்ந்ததொரு மிகப் பெரும் சிக்கல் ஏற்படும்போது, பெரும்பாலும் ஸயின்ஸ் ரீதியான வியாக்யானம் தோற்று விடுவது உண்மையே. கால நிலையை எடுத்துக்கொண்டால் போதும். சில நாளைக்குப் பிறகு அது எப்படி யிருக்கும் என்று சொல்வதுகூட, அசாத்தியமா யிருக்கிறது.

சகுணக் கடவுள் தத்துவமானது, இயற்கைச் சம்பவங்களிலே வந்து குறுக்கிட்டு விடுகிறது. அதை ஸயின்ஸினால் மறுத்துரைக்க முடியாமற் போகிறது. ஏனெனில், ஸயின்ஸ் இன்னும் காலடி எடுத்து வைக்காத உலகங்களி லெல்லாம், சகுணக் கடவுள் தத்துவமானது அடைக்கலம் புகுந்து விடுகிறது.

ஆனால், சமயவாதிகள் இம்மாதிரி நடந்துகொள்வது, அவர்களுக்குப் பெருமையல்ல; மிக ஆபத்துமாகும். ஏனெனில் பட்டப் பகலிலே நிலைத்து நிற்க முடியாமல் இருளைத் தேடியோடும் ஒரு தத்துவம், மனித குலத்தினிடம் வெற்றி பெறாது; ஆனால், மனித வர்க்கத்தின் முன்னேற்றத்துக்கு மட்டில் அளவிறந்த தீங்கு புரிந்துவிடும்.

சன்மார்க்க வளர்ச்சிக்காகப் போராடும் மத குருமார், தைரியமாய், சகுணக் கடவுள் உபதேசத்தைக் கைவிட வேண்டும். ஜனங்களுக்குப் பெரும் பயத்தையும் நம்பிக்கையையும் ஊட்டி

வரும் மூலாதாரம் சகுணக் கடவுள் பாவனையே. சென்ற காலத்தில் ஏராளமான செல்வாக்கைப் புரோகிதர்களுக்கு அளித்திருந்ததும் அதுவேதான்.

சன்மார்க்கத்தை வளர்ப்பதற்கு மனித சுபாவத்தையே அவர்கள் சாரவேண்டும்; மனித சுபாவத்திலே காணப்படும் நற்குணங்களையும் உண்மைகளையும் அழகுகளையும் வளர்க்கக்கூடிய சாதனங்களையே, அவர்கள் கையாளவேண்டும். இது மிகக் கடினமான காரியந்தான்; ஆனால், அதிகப் பெருமையான காரியமுமாகும். இந்தச் சீர்திருத்த வேலையை மத குருக்கள் சாதித்து முடித்தபின், அவர்களே மகிழ்ச்சியடைவார்கள்; ஸயின்ஸ் அறிவினால், உண்மையான மதம் மிக உயர்வடைந்து, மிக ஆழ்ந்த தன்மை பெற்று விடுகிறது என்று காண்பார்கள்.

மனித வர்க்கத்தின் ஆத்மீக பரிணாமமானது மேலும் எவ்வளவுக்கெவ்வளவு முன்னேற்றமடைகிறதோ அத்தனைக் கத்தனை, உண்மையான மதமும் மேன்மையடையும்; ஜீவிய பயத்தையும் மரணபயத்தையும் குருட்டு நம்பிக்கையையும் அது சார்ந்திருப்பதை விட்டு, அறிவாராய்ச்சிக் கொத்த ஞானத்தையே அடிப்படையாய்க் கொண்டுவிடும்.

சமயப் புரோகிதர்கள், தங்களுடைய உன்னதமான கல்விப் பிரசார லட்சியத்தை நிறைவேற்ற விரும்பினால், மேற்கண்ட பொருளிலே குருமாராய் அவர்கள் மாறுவது அவசியமாகும்.

எதிர்ப்பைக் கண்டு அஞ்சாதே. காற்றாடி காற்றுவாக்கில் உயர எழுவதில்லை; அதை எதிர்த்தே உயர எழுகிறது. இதை நினைவுகூர்.

—ஹாமில்டன்.

* * *

ஒவ்வொருவனும், தன் வாயைத் திறக்குமுன், புத்திசாலிதான்.

—அயோத்.

* * *

அற்பருக்கு ஆண்டவன் அளித்த வரமே அகம்பாவம்.

—புநஸ் பார்ட்டன்.

வெள்ளி உலக வேந்தர்கள்

(எம். நாகலிங்கம்)

லண்டன்மாநகரின் கிரேட் வின்சஸ்டர் வீதியில் உள்ள 19 நெ. கட்டிடத்தில் ஒரு சிறிய அறை யிருக்கிறது. அங்கே தினந்தோறும் பகல் இரண்டு மணிக்கு நான்கு பேர் கூடுகிறார்கள்; வெள்ளிக்கு ஒரு விலை நிர்ணயிக்கிறார்கள். அவர்கள் அன்றன்று விதிக்கும் அந்த விலையின் படிக்குத்தான், உலகெங்கும் லட்சக்கணக்கான மக்கள் அன்றாடம் வெள்ளி வாங்குகிறார்கள்.

பகல் இரண்டு மணிக்கு இவர்கள் கூடி நிர்ணயிக்கும் விலை, 2-45 மணிக்கெல்லாம் லண்டனிலுள்ள எல்லா 'பாங்கி'களுக்கும் 'புரோக்கர்'களுக்கும் அறிவிக்கப்படும். உடனே, அவர்கள் அதை உலகெங்கும் 'டெலிபோன்' மூலமாகவும் தந்தி மூலமாகவும் அறிவிப்பார்கள். இந்த விலைவாசி, சீனத் துறைமுகப் பட்டினங்களுக்குத் தந்தி மூலம் தெரிவிக்கப்பட்டதும், அங்கே அது சீன டாலரின் பரிவர்த்தனை விகிதத்துக்குத் தக்கபடி நிர்ணயிக்கப்பட்டு, சீனதேசம் பூராவும் அறிவிக்கப்படுகிறது. லண்டனில் நிர்ணயிக்கப்படும் வெள்ளி விலை, பம்பாய், கல்கத்தா முதலிய பட்டினங்களுக்கு அறிவிக்கப்பட்டதும், அவ்விடங்களிலிருந்து ஜில்லாக்களுக்கு அறிவிக்கப்படுகிறது. அதே போலவே, லண்டனின் விலை விவரம், நியூயார்க் நகருக்கும் சான்பிரான்ஸிஸ்கோ நகருக்கும் அறிவிக்கப்படவே, அங்கிருந்து அது தெற்கேயுள்ள மெக்ஸிகோவுக்கும் தென்னமெரிக்க நாடுகளுக்கும் செல்லுகிறது. மெக்ஸிகோவிலும் தென்னமெரிக்க நாடுகளிலுமுள்ள வெள்ளிச் சுரங்க முதலாளிகள், இந்த லண்டன் விலையைத் தினந்தோறும் எதிர்பார்த்துக்கொண்டிருக்கிறார்கள். இவ்விதமாக, லண்டனில் தினசரி நிர்ணயிக்கப்படும் வெள்ளி விலை, தினந்தோறும் உலகெங்கும் போய்ப் பரவி, வெள்ளி வர்த்தகத்தை இயக்குகிறது.

லண்டனில் தினந்தோறும் வெள்ளி விலையை நிர்ணயிக்கும் நால்வர் யார் தெரியுமா? லண்டனிலிருக்கும் நான்கு பெரிய பழமையான கம்பெனிகளின் பிரதம பங்காளிகள்தான். அவர்களின் பெயர்கள் பின்வருமாறு:—

(1) எட்கார் எல். டி பட்டோஸ் மோகட்டா: இவர் த்ராக் மார்ட்டன் அவன்யூ 7 நெ. கட்டிடத்திலுள்ள மோகட்டா அண்டு கோல்ட்ஸ்மித் கம்பெனியின் பிரதம பங்காளி. இந்தக் கம்பெனி 1684-ஆம் வருஷத்தில் நிறுவப்பட்டது. பாங்க் ஆப் இங்கிலாந்து ஸ்தாபிதமாவதற்கு 10 வருஷங்களுக்கு முன் இது அமைந்தது.

(2) ஏர்னஸ்ட் எல். பிராங்கிளின்: இவர் ஓல்ட் பிராட் வீதியில் 114 நெ. கட்டிடத்திலுள்ள சாமுவேல் மான்டேகு அண்டு கம்பெனியின் தலைவர்.

(3) எஸ். ஏ. பிக்ஸ்லி: இவர் ஓல்ட் பிராட் வீதியிலுள்ள பால் மார்ஸ்டன் மாளிகையிலிருக்கும் பிக்ஸ்லி அண்டு அபெல்ஸ் கம்பெனியின் பிரதம பங்காளி. இந்தக் கம்பெனி 1852-ஆம் ஆண்டு முதல், தங்க, வெள்ளிக் கட்டி வர்த்தகம் செய்துவருகிறது.

(4) பி. ஏ. வில்கின்ஸ்: இவர் கிரேட் வின்சஸ்டர் வீதியிலுள்ள 19 நெ. கட்டிடத்திலுள்ள ஷார்ப்ஸ் அண்டு வில்கின்ஸ் கம்பெனியின் பிரதம பங்காளி. இந்தக் கம்பெனியின் அறையில்தான், தினந்தோறும் இவர்கள் நால்வரும் கூடி, வெள்ளிக்கு விலை விதிக்கிறார்கள். இந்தக் கம்பெனி 140-வருஷ காலமாக ஒரே இடத்திலிருந்து வெள்ளி வர்த்தகம் புரிந்து வருகிறது.

இந்த நான்கு பேர்களின் கம்பெனிகளும், உலகில் உற்பத்தியாகும் வெள்ளி முழுவதையும் தங்கள் ஆதிக்கத்துக்கு உட்படுத்திக்கொண்டு, வெள்ளிக் கட்டி வர்த்தகம் செய்து வருகின்றன. இந்தியாவிலும் சீனத்திலும் பழக்கத்திலுள்ள வெள்ளி இவைகளுக்குப் போய்ச் சேருகிறது. இந்த நாடுகளிலுள்ள வர்த்தகர்கள், தங்கள் தங்கள் நாட்டு ஜனங்களிடமிருந்து வெள்ளியை வாங்கி, பாளங்களாக்கி, இந்த லண்டன் கம்பெனிகளுக்கு விற்று விடுகிறார்கள். வெள்ளிச் சுரங்கங்களிலிருந்து வரும் வெள்ளியைப் பாளங்களாகச் செய்யும் தொழிற் சாலைகளிடமிருந்தும், வெள்ளியைப் பிரஸ்தாப லண்டன் கம்பெனிகள் வாங்குகின்றன. செலாவணியிலிருந்து திரும்பும் தங்கள் வெள்ளி நாணயங்களை உருக்கிப் பாளங்களாக்கி, அவைகளைப் பற்பல அரசாங்கங்களும் இந்த லண்டன் கம்பெனிகளுக்கு விற்று விடுகின்றன.

இந்த வெள்ளிக்கட்டி ஒவ்வொன்றும் சாதாரணமாக $11\frac{1}{4}$ அங்குல நீளமும் 5 அங்குல அகலமும் $4\frac{1}{4}$ அங்குல உயரமும் உள்ளது; 1,100 ராத்தல் எடையுள்ளது. வெள்ளியைக் கட்டிகளாக்கும் அந்தந்தத் தொழிற்சாலையின் முத்

திரை, ஒவ்வொரு வெள்ளிக் கட்டிமீதும் இருக்கும். மெக்ஸிகோ நாட்டிலும் சிலி நாட்டிலுமுள்ள வெள்ளிச் சுரங்கங்களிலிருந்து லண்டனுக்கு வெள்ளிக் கட்டிகள் செல்லுகின்றன. அங்கேயிருந்து சீனத்துக்குப் போகும். சீனத்திலிருந்து பம்பாய்க்கு வரும். பம்பாயிலிருந்து மீண்டும் லண்டனுக்கோ அல்லது நியூயார்க் நகருக்கோ திரும்பிவிடும்! இடையிலே, அரசாங்கங்களின் நாணயமாகவோ அல்லது ஜனங்களின் அணிகலன்களாகவோ, பாத்திரங்களாகவோ உருவடைந்து ஓரளவு வெள்ளி அங்கங்கே தங்குகிறது. லண்டனிலிருந்து டன் கணக்கில் பல அரசாங்கங்கள் வெள்ளியை விலைக்கு வாங்குகின்றன. பிலிம்களுக்கு வெள்ளி தேவைப்படுகிறது. அநேகமாக, உலகில் உற்பத்தியாகும் வெள்ளியில் பெரும்பகுதியும், இந்தியாவிலும் சீனத்திலும் தான் போய்த் தங்கிவிடுகிறது.

தினந்தோறும் காலையிலிருந்து மத்தியானம் வரையில், உலகெங்குமிருந்து வெள்ளி வாங்குவதற்கும் விற்பதற்கும், லண்டனிலுள்ள மேற்குறித்த நான்கு கம்பெனிகளுக்கும் 'ஆர்டர்'கள் வந்து குவிந்துகொண்டேயிருக்கும். தினந்தினம் கிடைக்கும் 'ஆர்டர்களை'க் கவனித்து, அந்தக் கிராக்கியை அனுசரித்து, வெள்ளி விலையை அந்தக் கம்பெனிகள் நிர்ணயிக்கின்றன.

இந்த நான்கு கம்பெனி முதலாளிகளும் உலகெங்கும் கவனத்தைச் செலுத்திக் கொண்டே இருப்பார்கள். அவர்களுக்கு இரவும் பகலும் கணக்கிலடங்காத தந்திகள் வந்து குவிந்துகொண்டே இருக்கும். இந்தியாவில் நல்ல மழை பெய்து விளைவு அதிகமாக இருந்தால், விவசாயிகளிடையே அதிகமான பணப் புழக்கம் ஏற்படும். அவர்களுக்கு விற்பதற்காகப் பம்பாயிலுள்ள வர்த்தகர்கள் வெள்ளிக் கட்டிகளை உடனே வாங்க ஆரம்பிப்பார்கள். இந்திய சர்க்கார் அந்தச் சமயம் வெள்ளியை விற்க ஆரம்பிப்பார்கள். சித்திரை, வைகாசி மாதங்களில் ஹிந்துக்களின் கலியாணங்கள் அதிகமாக நடைபெறுமாதலால், அப்போது வெள்ளி வர்த்தகர்களுக்கு மிகவும் கொண்டாட்டமாகும். அதே போலவே, சீனத்தில் வருஷப் பிறப்புக் கொண்டாட்டத்தின் போதும், வாஷிங்டன் நகரில் பிரஸிடெண்டு ரூஸ்வெல்ட் புதிய நாணயக் கொள்கைகளை அனுஷ்டிக்கும் போதும், சீனத்தில் உள்நாட்டுக் கலகங்கள் ஏற்படும் போதும், வெள்ளி வர்த்தகம் மும்முரமாக நடைபெறும்.

வெள்ளி வர்த்தகத்தைப் பற்றிக் கூறும்போது, இந்தியாவில் நிகழ்ந்த ஒரு சம்பவத்தையும் குறிப்பிடத்தான் வேண்டும். 1913-ஆம் ஆண்டில் பம்பாயில் பிரபலமான ஒரு வெள்ளி வர்த்தகர் இருந்தார். அவர் பெயர் சுனிலால் சராயா. இந்தியன் ஸ்பீஷி பாங்கி என்ற ஒரு பாங்கியை, அவர் பம்பாயில் நடத்திவந்தார். மார்க்கெட்டில் அகப்படும் வெள்ளியை யெல்லாம் விலைக்கு வாங்கி ஒதுக்க, ஸ்ரீ சராயா முயற்சித்தார். புதிய நாணயங்களை அச்சடிக்க ஏராளமான வெள்ளியை இந்திய சர்க்கார் விலைக்கு வாங்குவார்கள் என்பதை அறிந்து, குறைவான விலைக்கு வெள்ளியை வாங்கி இந்திய சர்க்காருக்கு அதிகமான விலைக்கு விற்க வேண்டுமென்று எண்ணியே, கிடைக்கும் வெள்ளியை யெல்லாம் வாங்கிச் சேகரிக்க, அவர் ஆரம்பித்தார். வெள்ளி விலை அவுன்ஸுக்கு 24 பென்ஸாக இருக்கும் போது, 1910-ஆம் வருஷம் முதலே வெள்ளியை விலைக்கு வாங்கினயிடம், லண்டனிலுள்ள ஷார்ப்ஸ் அன்டு வில்கின்ஸ் கம்பெனியில் கட்ட, ஸ்ரீ சராயா தொடங்கினர். பின்பு அந்த விலை மெதுவாக ஏறி, அவுன்ஸுக்கு 28 பென்ஸாக உயர்ந்தது.

பம்பாயில் அப்பொழுது, ஸ்ரீசராயா ஒருவரிடத்தில்தான் வெள்ளி இருந்தது. இந்திய சர்க்காருக்கு நாலரைக் கோடி ரூபாய்க்கு வெள்ளியை விற்றார். இதற்கிடையே, தங்களிடம் வெள்ளியிருப்பு இல்லாமலே பல வியாபாரிகள், ஸ்ரீ சராயாவிடம் பணம் வாங்கிக்கொண்டு, அவர் வேண்டும்போது வெள்ளி கொடுப்பதாக அவரிடம் ஒப்பந்தம் செய்துகொண்டிருந்தார்கள். அந்த வெள்ளியை யெல்லாம் உடனே தம்மிடம் பட்டுவாடா செய்ய வேண்டுமென்று, அவர்கள் அனைவரையும், ஸ்ரீ சராயா இந்தச் சமயத்தில் நிர்ப்பந்தம் செய்தார். இதனால், அந்த வியாபாரிகள் எல்லாரும் இன்ஸால்வெண்ட் ஆகவேண்டிய நிலைமை ஏற்பட்டது. உடனே இந்திய சர்க்காரிடம் அவர்கள் முறையிட்டுக் கொள்ளலானார்கள்; சுனிலாலிடமிருந்து வெள்ளியைச் சர்க்கார் விலைக்கு வாங்கலாகாது என்று கூச்சலிட்டார்கள். வெள்ளி வாங்குவதை இந்திய சர்க்காரும் நிறுத்தினர்கள். விலை இறங்க ஆரம்பித்தது. இந்தியன் ஸ்பீஷி பாங்கிக்காக லண்டனிலுள்ள ஷார்ப்ஸ் அன்டு வில்கின்ஸ் கம்பெனியார் வைத்திருந்த 90 லட்சம் அவுன்ஸ் வெள்ளிக்கும் விலையிறக்கத்தால் ஏற்பட்ட வித்தியாசத்தை ஈடு செய்வதற்காக, ஸ்ரீ சராயாவை அந்தக் கம்பெனியார் பணம் கேட்டார்கள். ஆனால், ஸ்ரீ சராயா தமது பணம் முழுவதற்கும், கிடைத்த லாபத்துக்கும், வெள்ளிக் கட்டிகளையே வாங்கி வாங்கி அடுக்கி வைத்திருந்தார்; ஆகையால் அவரிடம் பணமில்லை. ஸ்ரீ சராயாவின் பாங்கி மூடப்பட்டது. அவர் தம்மைத் தாமே ரிவால்வரால் சுட்டுக் கொண்டு மாண்டார். ஸ்ரீ சராயா இவ்வாறு இறந்த அரை மணி நேரத்துக்கெல்லாம் லண்டனில் அந்த 90 லட்சம் அவுன்ஸ் வெள்ளியையும் ஒரு 'சிண்டிகேட்'டார் விலைக்கு வாங்கி, மார்க்கெட்டிலிருந்து வெளியேற்றினர்கள். இந்திய வெள்ளிச் சரிதையில்-ஏன், உலக வெள்ளிச்சரிதையிலேயே-சுனிலால் சராயாவின் பரிதாபக் கதையும் நிரந்தரமாய் இடம் பெற்று விட்டது.

இறந்தவன் பிழைப்பானு?

அமெரிக்காவில், பிரேஸிலுக்குப் பக்கத்திலுள்ள வெனிஸுலாவில் உள்ள அநாகரிக மக்கள் மிகவும் எளிய சுபாவமுடையவர்கள். அங்கேயுள்ள ஒரு ஸினிமாக் கொட்டகைக்காரரிடம் ஒரு சினிமாப் பிரதிநிதி சென்றார். "கிளார்க் கேபிள் நடித்த புதிய படம் ஒன்று கொண்டுவந்திருக்கிறேன். வாடகைக்கு வாங்கிக் கொள்ளுங்கள்" என்று, பிரதிநிதி கூறினர்.

கொட்டகை மானேஜர்: கிளார்க் கேபிளின் படமா? அவர்தான் இறந்து போய் விட்டாரே!

பிரதிநிதி: எப்பொழுது?

மானேஜர்: 'பார்னெல்' என்ற அருமையான படம் உங்களுக்கு ஞாபகமிருக்கிறதா? அது என்ன கொள்ளைப் பணம் தந்தது தெரியுமா?

பிரதிநிதி: ஆமாம். இதுவும் அதேமாதிரி பணம் தரும்.

மானேஜர்: அட போமையா! அந்தப் 'பார்னல்' படத்தில்தான் கேபிள் இறந்து விடுகிருனே! அந்தப் படத்துக்குப் பிறகு, கேபிளின் மற்றொரு படத்தைப் போட்டேன். ஜனங்கள் நம்பவேயில்லை. 'கேபிள்தான் அப்போதே இறந்துவிட்டானே. இது வெறும் புளுகு. வேறு யாரோ ஆசாமியை, கேபிள் என்று சொல்லி ஏமாற்றுகிறுன்' என்று ஜனங்கள் பேசிக்கொண்டார்கள். படம் பார்க்க யாரும் வரவில்லை. எனக்கு ரொம்ப நஷ்டமாகிவிட்டது.

தறிகாரன் ஜீவனம்

(ஆர். ஷண்முகசுந்தரம்)

> ‘இந்த வாழ்க்கை வசதிகள் எல்லாம் யாருக்கு? மனிதனுக்கா? மிருகத்துககா?’ என்று முதலியார் ஏங்குகிறார். இவர் தனி முதலியார் அல்ல; ஆயிரக்கணக்கானவரின் பிரதிநிதி.

சென்னியப்ப முதலியார் போன வாரம் நெய்த சேலைகளை வழக்கமாகப் போடும் கடைக்காரனிடம் போட்டுவிட்டு, இந்த வாரத்துக்கு வேண்டிய ‘பாவு’ நூலுடனும் இரண்டொரு முடிச் சுக்களுடனும் கீரனூரை நோக்கி வந்துகொண் டிருந்தார்.

அநேகமாக வந்து விட்டார் என்றே சொல்லவேண்டும். அதோ, கோவிலும், கிணறும், புளிய மரமும், அருகில் உள்ள ஐயர் வீடும், அதற்கப்பாலுள்ள பாவடியும், இன்னும் இடிந்தும் இடியாமலும் இடிந்து போய்க்கொண்டுமிருக்கிற எல்லா வீடுகளுமே தெரிகின்றனவே!

முதலியார் இப்போது அடி எடுத்து வைக்கும் பாறை ரொம்ப மேட்டிலுள்ளது. வண்டிச் சக்கரம் பாறையின் இரு பக்கங்களிலும் பதிந்து பதிந்து குடைந்திருந்தது. அதன் ஓரமாக, கல் இடுக்கில், கால் சலிக்காமல் நடப்பதற்கு, கொஞ்சம் பழக்கமும் வேண்டித்தா னிருந்தது. அங்கேயிருந்து பார்த்தால், கூப்பிடு தூரத்தில் உள்ள கிராமக் காட்சிகளெல்லாம் தெரியும்; என்றாலும், இந்த உச்சி நேரத்தில் ‘அன்ன நடை’ போட்டுக்கொண்டு, தலையைத் தூக்கி, எந்தக் காட்சியையும் காண வேணுமென்று ஆவல் எழாது.

சூடேறிய இரும்புத் தகடுபோலுள்ள அந்தப் பாறையிலிருந்து, முதலியார் துரிதமாகக் கீழே மணலுக்கு வந்ததும், “அடடா! கால் வெந்துதான் போகும்; இப்படிப் பத்திக்குதே!” என்று சொல்லிக் கொண்டே, மூட்டையைக் கை மாற்றிக்கொண்டார்.

காலையில் புறப்படும்போது, மத்தியானச் சாப்பாட்டுக்கு வந்து விடவேணும் என்றுதான் முதலியார் நினைத்திருந்தார். ஆனாலும், வழக்கம்போல் கடைக்காரன் தாமதம் பண்ணிவிட்டான். ஒவ்வொரு புடவையாக எடுத்து “இதிலே என் பட்டுக்குறி நன்றாயில்லை? அங்கே என் ‘பொறசல்’ விழுந்தது? இங்கே இழை படர்ந்து வந்தது தெரியலையா? இது அப்படி; அது இப்படி. இதிலே அது சொத்தை; அதிலே இது சோடை” என்று அவன் தன் புராணத்தைப் படிக்க ஆரம்பித்து விட்டால், நேரம் ஆகுமா, ஆகாதா?

“அடுத்த வாரத்துக்கு ஆகட்டும், விடிஞ்சதும் விடியாமே போயிடறேன். அப்படி அதிகாலையிலே போனால், இளமத்தியானத்துக்குள்ளே வந்திடலாம்” என்று முதலியார் நினைத்துக் கொண்டார். இப்படி நினைப்பது இன்றைக்குப் புதிதல்ல. கடந்த இருபது வருஷங்களாக, அவர் தறிக்குழியில் உட்கார்ந்து, ‘நாடா’வை இந்தப் புறமும் அந்தப் புறமும் ஓட்ட ஆரம்பித்ததிலிருந்து, இப்படியேதான் நித்த நித்தம் நினைத்து வந்திருக்கிறார். ஆனால், அந்த நினைவெல்லாம் கருத்தளவிலேயே அணைந்து விடுகிறதே ஒழிய, கிரியாம்சையில் இன்று வரை பிரகாசிக்கவில்லை.

“என்ன, கூப்பிட்டது காதில் விழலியா?” என்ற குரல் கேட்கவும், முதலியார் திரும்பிப் பார்த்தார்.

புளிய மரத்தடியில் புட்டுக் கூடையுடன் உட்கார்ந்திருந்த கிழவன் சிரித்துக்கொண்டே, “ஏனப்பா, நிலா வெளிச்சமாட்ட நடக்கிறையே; செருப்பு வாங்கிப் போட்டுக்கப் படாதா?” என்று அவன் கேட்டான்.

இரண்டு மாத காலமாகவே செருப்பு வாங்க வேண்டுமென்று தாம் தீர்மானித்திருந்த விஷயம், அப்போதுதான் முதலியாருக்கு ஞாபகம் வந்தது. அது வந்து என்ன செய்கிறது? அன்றாடம் சம்பாத்தியத்தால் ஏதோ வயிற்றைக் கழுவலாம் என்ற நிலையைத் தாண்டி மேலுக்குப் போக முடியவில்லையே! என்ன கரணம் போட்டாலும் வரவுக்கும் செலவுக்குமே சரிக்கட்ட வில்லை. சில சமயம் கடனும் வந்து விடுகிறது. அந்தப் பற்றுத் தராசுதான் கீழ் நோக்கிப் போகிறதே தவிர, தாராளத்துக்கு அங்கே இடமே இல்லை. முதலியார் அடிக்கடி சொல்லுகிற மாதிரி, ‘ஆடு கறக்கவும் பூனை குடிக்கவும்’ சரியா யிருந்தது.

ஏதையோ சொல்ல எண்ணிய முதலியார் அதைவிட்டு, “இந்தப் புளியமரம் இருக்கிறவரை நீங்களும் இங்கேதான்” என்றார்.

“என்னப்பா அப்படிச் சொல்றே?” என்று கேட்ட கிழவன், மறுபடியும் சிரித்து விட்டு, “உம், யாரப்பா கண்டது? நான் இண்ணைக்குச் செத்தா நாளைக்கு இரண்டு நாள். இந்த மரமும் என் கூடவா வந்திடப் போவுது?” என்றான் ஒருவிதச் சலிப்போடு.

உண்மை; அந்த விருத்தனோடு அம்மரமும் உடன்கட்டை ஏறிவிடப் போவதில்லை. ஆனால், அது இருப்பதாலும், ஒன்றும் பிரயோஜனமில்லை. பூ பூக்கிறது, காய் காய்க்கிறது என்ற பேச்சே அதனிடம் எந்தக் காலத்திலும் கிடையாது. ஏதோ மொட்டையாக இல்லாமல், கொம்பில் கொஞ்சம் தழைகள் ஒட்டிக்கொண் டிருக்கின்றன; அவ்வளவுதான். கிழவனுடைய வியாபாரத்துக்கு ஏற்ற இடமாக விளங்கும் பெருமை ஒன்றுதான் அது பெற்ற பாக்கியம். முதியவன் சொன்னதொன்றையும் முதலியார் கவனிக்கவில்லை. அவருக்கு எத்தனையோ ஜோலிகள், கவலைகள். “சரி; சாவகாசமாய்ப் பேசிக்கலாம். நான் வாரேன்” என்று சொல்லிக் கிளம்பினார்.

பாவடியை அவர் தாண்டும்போது, அங்கே கற்களின் அடியே கஞ்சிப் பசை வறண்டு ஏடாக நிற்குமிடங்களில், கழிநூல் ஏராளமாகக் குவிந் திருப்பதைக் கண்டு, “எதுக்கும் கொஞ்சம்

பாக்கு, பணிக்கு வேண்டாமா? இப்படிக் கண்டபடி சேதம் செய்திருக்காங்களே, பசங்கள்!" என்றும் இன்னும் பலவிதமாகவும் யோசனை செய்துகொண்டே தம் வீடு வந்து சேர்ந்து, தமது மூட்டை முடிச்சுக்களை இறக்கி வைத்தார்.

இத்தனை நேரமும் வைத்த கண் வாங்காமல் தடம் பார்த்துக் கொண்டு நின்ற முதலியாரின் மனைவி தங்கம்மாள், அவரது மூட்டை முடிச்சுக்களை எடுத்துப் போய், அதனதன் இடத்தில் சேர்த்துவிட்டு, ஒரு செம்பு தண்ணீர் கொண்டுவந்து திண்ணையிலே வைத்துக்கொண்டே, "இலை போடட்டுமா?" என்று கேட்டாள்.

"என்ன அவசரம்? சற்றுப் போகட்டும். முதலிலே பாயை விரி" என்று முதலியார் சொன்னார்.

அந்த அம்மாள் பாயை எடுத்து வந்து போட்ட பின்பு, "தலையணையும் வேணுமோ?" என்று கேட்டு நகைத்தாள். இன்னும் சிறிது நேரத்தில் அவர் சாப்பிட எழுந்துவிடுவார். இந்தச் 'சயனம்' சிறிது சிரம பரிகாரம் செய்யத்தான் என்பதாலேயே, அவள் அவ்விதம் கேட்டாள். "கொஞ்சம் விசிறி எடுத்து வந்தாலே போதும்" என்று சொல்லிக்கொண்டே, அவர் படுத்தார்.

மடியில் சுற்றி வைத்திருந்த சில்லறை, அவர் கீழே படுக்கவும், சலசலத்தது.

"இந்தா..........." என்று மனைவியைக் கூப்பிட்டார்.

"என்? விசிறி வாண்டாமா?" என்று உள்ளிருந்து குரல் வந்தது.

முதலியார் பேசவில்லை. அதற்குள்ளாக, "இருக்கிறது இரண்டே முக்கால் ரூபாய்தானே? அரிசிக்காரனுக்கு ஒண்ணரை; எண்ணெய் புளி வாங்கினது அஞ்சணா,.......அப்புறம் தெக்கால வீட்டானுக்கு ஒரு மூணணா......." என்ற கணக்கில் மூழ்கிவிட்டார்.

"என்னமோ சொன்னீங்களே?" என்று கேட்டுக்கொண்டே வெளியே வந்தாள் மனைவி.

"அட ஆமாம். நீ ஏனோ மறந்திட்டயேண்ணு பார்த்தேன்" என்று சொல்லிய முதலியார், தம் கையில் உள்ள பணத்தை மூடிக்கொண்டே காட்டினார்.

"மறக்கிறாப் போலவா இருக்குது! அந்த மிளகாய்க்காரி இந்நேரம் 'சில்லு சில்லுன்னு' நின்னாளே. மூணரைத் துட்டுக்குப் பெரிய போடாப் போடறா. அவகிட்டே வாங்கப் படாதுன்னு இருந்தாலும், வாங்க வேண்டி வந்திடுது" என்று ஆரம்பித்தாள் மனைவி.

முதலியார் தடுத்து, "அதெல்லாம் என் கிட்டச் சொல்லாட்டி என்ன? இவ்வளவுதான் இருக்குது. எல்லாம் எப்படியோ சமாளிச்சுக்கோ" என்று கூறி, ஒரு அணாவைத் தம் சொந்தச் செலவுக்கு வைத்துக்கொண்டு, மீதியைத் தமது மனைவியிடம் கொடுத்தார். அதைக் கொடுக்கையில், கை தவறி நாலைந்து அணா வாசற்படிக் கல்மீது விழுந்தது.

"எதண்ணா! துட்டுச் சத்தமாய்க் கேட்குது?" என்று விசாரித்துக்கொண்டே பக்கத்து வீட்டு அப்பாவு வந்தான்.

"ஆமாமப்பா! நெசவுகாரன், நோட்டுப் பவுனைக் கனவில்தான் பாக்க முடியும். துட்டு........செப்புத் துட்டுத்தான் நாம் கண்டது. அதுக்குங்கூடப் பஞ்சம் வரச் சொல்லறையா?" என்றார் முதலியார்.

"நானேன் சொல்றேன்? கடைக்காரன் கொடுக்கிற கூலியிலே எல்லாம் இருக்குது" என்றான் அப்பாவு.

"அது நெசந்தானப்பா; அவன் கொடுக்கிற கூலிக்கு அவனுக்கு ஆண்டவன்தான் கூலி கொடுக்க வேணும்."

அப்பாவு சொன்னான்: "மனம் நொந்தவன் திட்ட வேண்டியதில்லை; வயிறு நிறைஞ்சவன் வாழ்த்த வேண்டியதில்லை. அண்ணா! அது கெடக்குது. நாளைக்கு எங்க பாவு துவையாரும். ஆள் ஒருத்தரையும் காணோம். நாளைக்கு உன்னைத்தான் நம்பி யிருக்கிறேன். வாரயாண்ணா?"

"நீ பாவுக்குச் சொல்லத்தான் வந்திருப்பாயிண்ணு நான் அப்பவே நெனச்சேன்" என்றாள் தங்கம்மாள்.

கண்ணை மூடிக்கொண்டிருந்த முதலியார், மௌனமாகவே இருந்தார்.

"அண்ணா! மறந்திடாதே" என்று சொல்லிக்கொண்டே, அப்பாவு எழுந்தான். அவன் புறப்படுகையில் "ஒரு இலை இருந்தாக் குடு" என்று தங்கம்மாள் கேட்டாள்.

அப்பாவு திரும்பி, 'இல்லை' யென்பதற்கு அடையாளமாக உதட்டாலும் தலையாலும் சைகை செய்துகொண்டே போய் விட்டான்.

முதலியாருக்கு அதிகப் பசிதான். ஆனால், 'குளு குளு' என்று வரும் காற்றில் அப்படியே படுத்திருப்பது ரொம்பச் சுகமாயிருந்தது. எதிரில் வாசலில் உள்ள தங்கரளி மரம் சற்று நேரத்துக்கொருதரம் அசையும். அது அசையும்போது, "இது இப்படியே எக்காலமும் அசைந்து கொண்டிருந்தால், எவ்வளவு ஆனந்தமாக இருக்கும்!" என்று எண்ணுவார். ஆனால், ஜடப்பொருளாக இருந்தாலும், எந்நேரமும் இயங்கிக் கொண்டேயிருக்க முடியுமா?

"அப்பாடி!" என்று கையில் நெட்டை எடுத்துக்கொண்டே, முதலியார் திரும்பிப் படுத்தார். தலை மாட்டிலிருந்த தறியின் விளிம்பில் அவர் கை சுருக்கெனப் பட்டுவிட்டது. ஓரத்தில் சாய்ந்திருந்த நாடா 'லொடக்' கென விழுந்தது. அந்த நாடாவிலுள்ள பட்டுத் தாரைப் பார்த்ததும், "இதை எடுத்துவைக்கப் படாதா? பிரிந்து போச்சுன்னா இது என்னத்துக்காகும்?" என்று மனைவி காதில் விழச் சொன்னார்.

உள்ளே பூவரசம் தழைகளில் இலை தைத்துக் கொண்டிருந்த மனைவி "ஆச்சு ஆச்சு, இதோ ஆயிட்டது" என்று பதில் குரல் கொடுத்தாள்.

"நான் ஒண்ணு கேட்டா, இவளொண்ணு சொல்றது இண்ணைக்குத்தான் புதுசா?'' என்று, முதலியார் தமக்குத் தாமே சொல்லிக் கொண்டார். அப்படியே எதை எதையோ பற்றி எண்ணியவர், தம்மைப்பற்றி நினைக்கவும் கிலேசமடைந்தார். அந்த ஏக்கத்தால், அவருக்கிருந்த பசியும் பறந்து போய் விட்டது.

"நித்தமும் ஓயாமல் இந்த ஒரே வேலைதானா? சாப்பிடும் நேரத்தைத் தவிர, மற்ற வேலைகளில் எல்லாம் தறிக்குழியிலேயே அழுந்திச் சாகவேண்டியதுதானா? இவ்வளவும் சோற்றுக்கு.......அட ஊரிலுள்ள எத்தனையோ பேர், நாடகம் பார்க்கப் போகிறார்கள்; சினிமாப் பார்க்கப் போகிறார்கள். என்ன என்னவோ கண்டு வந்ததாகச் சொல்லுகிறார்களே! ஆனால், நமக்கு வெளியே போக வழியுண்டா? அப்படிப் போனாலும், ஒரு ராத்திரி தூக்கம் முழித்தால், இரண்டு மூன்று நாளைக்குச் சேர்ந்தாற்போல் தூங்கியாக வேண்டுமே!........என் ஜன்மம் இப்படி! யாரைச் சலித்து என்ன பயன்?........'' என்று ஏதோ எண்ணி ஏங்கினார்.

தங்கம்மாள் சாதம் பரிமாறிக் கொண்டே, "எழுந்திருச்சு வாங்கோ" என்று குரல் கொடுத்தாள்.

முதலியார் தொடர்ந்து யோசித்தார்: "இந்த வாழ்க்கை வசதிகள் எல்லாம் யாருக்கு? மனிதனுக்கா, மிருகத்துக்கா? அப்படியானால் நான் மனிதனல்லவா? சீமான் வீட்டில் நான் பிறக்கவில்லையே என்பதற்காக வருத்தப்படவில்லை. இந்தக் கூரை வீட்டில் இருந்தாலும், இருக்கிற வரையிலுமாவது சுகமாக இருந்துவிட்டுப் போக வேண்டாமா?''

இப்படி நினைத்துக்கொண்டே, முதலியார் மெதுவாகக் கண்ணயர்ந்தார். அந்த நித்திரை நிலையிலே அவரை வாட்டும் எந்த வேதனையும் இல்லை.

'மனிதனுடைய வாழ்நாளிலே பாதிக்காலம் தூக்கத்தில் வீணாகி விடுகிறது' என்கிறார்கள். ஆனால் அந்தத் தூக்கமும் இல்லாதிருந்தால்..........?

★ கல்யாணச் சீர்

(கே. ஸ்ரீநிவாசன்)

வேலங்குடி வேம்பு சாமி ஐயரின் அரட்டல் உருட்டல் எல்லாம் வெளியில்தான். வீட்டுக்குள் நுழைந்து விட்டாலோ, பெட்டிப்பாம்பாகிவிடுவார்; ஸஹதர்மிணியின் கோட்டைத் தாண்ட மாட்டார். இந்தத் தம்பதிகளுக்கு ஒரு புத்ர சிகாமணியும் உண்டு. அவனுக்குக் கலியாண வயது. இண்டர்மீடியட் படித்துக் கொண்டிருக்கிறான்.

ஒரு நாள் காமாட்சி அம்மாள் தன் கணவருக்குச் சாதம் பரிமாறிக் கொண்டிருக்கும்போது, வாசல் கதவை யாரோ இடிக்கிற சத்தம் கேட்டது. காமாட்சி அம்மாள் போய்க் கதவைத் திறந்து, வந்தவரைத் திண்ணையிலே உட்காரச் சொல்லிவிட்டு, உள்ளே வந்து கணவனைத் தரிசப்படுத்தினாள். வேம்பு ஐயரும் பறந்து கொண்டு வெளியே சென்றார்.

வேம்பு :—வாணும்.

வந்தவர் :—வேலங்குடி வேம்பு...

வேம்பு :—ஆமாம்; நான்தான் வேம்பு சாமி.

வந்தவர் :—எனக்கு மணலூர்.

வேம்பு :—ஓஹோ... கோடியாத்துக் கிச்சுகூட,.....

வந்தவர் :—ஆமாம். கிச்சு கிட்ட உங்க பையன் ஜாதகத்தை வாங்கிண்டு போனேன். என் பெண் ஜாதகமும், உங்க பையன் ஜாதகமும் ரொம்பப் பொருத்தம். உங்க அபிப்பிராயத்தைத் தெரிஞ்சுண்டு போகலாம்னு வந்தேன். ....

வேம்பு :—அடீ, அடீ! இங்கே வா.

காமாட்சி அம்மாள் :—(கதவு இடுக்கிலிருந்து) என்?

வேம்பு :—ஐயர்வாள் மணலூர். அவர் பொண்ணுக்கு......

காமாட்சி :—எல்லாம் தெரிஞ்சுது.

வேம்பு :—அவாளுக்கு இலையைப் போடேன். சாப்பிட்டுட்டு......

காமாட்சி :—அழகா இருக்கு, ஒங்களுக்குத் தெரிஞ்ச லட்சணம்! வரன் பார்க்க வந்த இடத்திலே நிச்சயம் ஆகிறத்துக்கு முன்னாடி, சாப்பிடுவாளோ? உளறுகிறேளே!

வேம்பு :—ஆஹோ!

வந்தவர் :—அப்புறம் [illegible] பையனை என்ன பண்ணறான்? [illegible] வரதட்சணை வேணும்? எனக்கு இந்த ஸம்பந்தம் கிடைக்க, நான் என்ன பாக்யம் பண்ணியிருக்கேனோ...?

வேம்பு :—அவளைத்தான் கேட்கணும்.

காமாட்சி :—என்ன 'அவளைத் தான் கேக்கணுங்'கறது? சொல்லுங்கோளேன் நீங்கதான். பையன் பி. ஏ. வாசிக்கப் போறான். மேலே வாசிக்காட்டாலும், அவனோட மாமா 100 ரூபாயிலே இன்னிக்கு வேணாலும் வேலை பண்ணி வைக்கறேங்கறான். கையிலே ரொக்கமா ஆயிரத்து ஐந்நூறு ரூபாய் கொடுத்துடணும். பையனுக்கு வைர மோதிரம், கடியாரம், நிஜார், கோட்டு, குல்லாய் எல்லாம் வாங்கணும். வெள்ளிப் பாத்திரம் 300 ரூபாய்; பித்தளைப் பாத்திரம் 100 ரூபாய். பெண்ணுக்கு வைரத் தோடு, மூக்குத்தி, ரெட்டவடத்திலே கடியாரச் சங்கிலி, ஒட்டியாணம் இதெல்லாம் அவாளே போடணும். இதுக்கு ஒத்துண்டா, பொண்ணை வந்து பாக்கறம். இத்தனையும், பொண் மூக்கும் முழியுமா நன்னாயிருந்தால் தான் பேச்சு...இல்லாட்டா நாங்க வந்து அலையறத்திலே பிரயோஜன மில்லே...

வந்தவர் :—அதைப்பத்தி ஒங்களுக்குச் சந்தேகமே வேண்டாம். பொண், லட்டு மாதிரி இருக்கும்......கல்யாணம்?

காமாட்சி :—எங்காத்துலே ஏதோ கடுகத்தனை குழந்தைக்குக் கலியாணம் பண்ணப் போறம். செலவைப் பார்க்காமல், நாலு நாள் கலியாணந்தான் செய்யணும்

வந்திருந்த ஐயர்வாளும் 'நாங்களும் மிளகத்தனை பொண்ணுக்குத்தான் கலியாணம் செய்யப் போகிறோம்' என்று நினைத்துக்கொண்டார். சொற்ப பேரம் கூடப் பலிக்காமல் போகவே, காமாட்சி அம்மாளுடைய நிபந்தனைகள் அனைத்துக்கும் ஒப்புக்கொண்டார். பிறகு ஒரு நல்ல நாளில் பிள்ளை வீட்டார் பெண்ணையும், பெண் வீட்டார் பிள்ளையையும் பார்த்துத் தங்கள் பரஸ்பர சம்மதத்தைத் தெரிவித்தவுடன், நிச்சயதார்த்தம் ஆகி முகூர்த்தமும் குறிப்பிடப்பட்டது.

கலியாண நாள் வந்தது. கொட்டு மேளச் சத்தமும் சமையலறைப்

பாத்திரங்களின் 'கடபுடா'ச் சந்தடியும் ஒன்றுடன் ஒன்று போட்டிப் போட்டுக் கொண்டு, ஊராருக்குக் கல்யாணத்தை விளம்பரப் படுத்தின. காசி யாத்திரைக்குக் கிளம்பிய மாப்பிள்ளை, கோபம் தணிந்து, மையிட்ட கண்களை மூடி மூடித் திறந்து கொண்டு, வேட்டகத்துக்கு வந்து விட்டார். ஊஞ்சலாடித் திருமங்கல்யதாரணம் செய்யும் நேரமும் சமீபித்தது.

"இந்த மாதிரி இந்தப் பிராமணன் எமாத்துவான்னு தெரிஞ்சா இந்தக் கல்யாணத்துக்குச் சம்மதிச்சிருக்கவே மாட்டேனே!" என்று திடீரென்று உரக்கக் கத்தினள் காமாட்சி அம்மாள்.

"என்ன! எமாத்திப் பிட்டானு? அயோக்யத்தனம்......" என்று கர்ஜித்துக்கொண்டு எழும்பிக் குதித்தார் வேம்பு ஐயர்.

கல்யாண வீடு அமக்களப்பட்டது. மலையைப் புரட்டி எலியைப் பிடித்தது போல், பெண்ணுக்கு மாமா, காமாட்சி அம்மாளிடம் வந்து, "எதுக்குச் சத்தம் போடறிய? என்ன தவறு நடந்தது சொல்லுங்கோ. இதோ சரி பண்ணிப் பிடறேன்" என்று சொன்னர்.

காமாட்சி அம்மாள்:—எங்கே, பாத்திரம் வாங்கின பில் எல்லாத்தையும் கொண்டாங்கோ. 300 ரூபாய்க்குச் செய்யறேன்னு சொல்லிப்பிட்டு, வெள்ளிப் பாத்திரங்கள் 290 ரூபாய்க்குத் தானே வாங்கியிருக்காளாம்? என்னை எமாத்திப் புடணம்னுட்டுத்தானே அந்தப் பிராமணன்...

பெண்ணுக்கு மாமா கொஞ்சம் சாமர்த்தியசாலி. "எம்மா, வெள்ளிப் பாத்திரத்திலே பத்து ரூபாய் குறைஞ்சு போச்சன்னு சொல்லிக் கோவிச்சுக்கிறியளே! தங்கத்திலே 15 ரூபாய் அதிகப் பட்டிருக்கே, அதைக் கணக்கிலே சேர்த்துச் சரிப்படுத்திக் கோங்கோளேன்" என்று சமாதானம் சொன்னர்.

காமாட்சி அம்மாள் கோபம் அடங்கி, "தங்கத்திலே என்ன அப்படி ஜாஸ்தியாய்ச் செஞ்சுட்டக? சொல்லுங்கோளேன். நான் ஒண்ணும் அப்படிப் பேராசைக்காரியில்லே. உங்காத்துக் குழந்தைக்குத்தானே செய்யச் சொல்றது? கடைசியிலே நான் கோவிச்சுக்கறதுதான் எல்லாருக்குந் தெரியறது!"

பெண்ணுக்கு மாமா சொன்னர்: "கலியாணத்துக்குப் பாத்திரம் பண்டம், பழம் எல்லாம் வாங்கிப் பிட்டுக் கணக்குப் பார்த்தோம். வெள்ளிப் பாத்திரத்திலே 10 ரூபாய் குறைச்சல்னு எங்களுக்கும் தெரிஞ்சுது. என்ன பண்றதுன்னு யோசிச்சிண்டு இருக்கச்சே, உங்கள் மாட்டுப்பொண் வெகுவேகமாக ஏதோ காரியமாய்ப் போய்க் கொண்டிருந்தவள், வாழைப்பழத்தோல் சறுக்கிக் கீழே விழுந்து விட்டாள். முன் வாய்ப் பற்கள் இரண்டும் விழுந்து விட்டன. நம்ம பொண்ணுக்கு நாமள் செய்யாட்டா வேறே யார் செய்யப் போறான்னு, உடனே அவளை அழைச்சிண்டு போய், தங்கத்துலே ரெண்டு பல் கட்டிண்டு வந்துட்டோம். அது 15 ரூபாய் ஆச்சு."

இந்த விபரீதத்தைப்பற்றிக் காமாட்சி அம்மாள் யோசித்து ஒரு முடிவுக்கு வருவதற்குள், முகூர்த்தம் தப்பிவிடப் போகிறதே என்று கவலை கொண்ட சாஸ்திரிகள் தமது வேலையை ரொம்பத் துரிதமாய் நடத்தினர்: "நாயனத்தைச் சேர்த்து வாசிடா" என்று சொல்லி, பிள்ளையின் கையில் திருமங்கல்யத்தைக் கொடுத்தார்.

பெண் ஒரு புன்முறுவல் பூத்தாள். அந்தப் புன்முறுவலிலே, முத்துப் பற்களோடு பொன் பற்களும் மின்னுவதைப் பார்த்து, மயங்கி விட்டான் மாப்பிள்ளை. தாலியையும் சட்டிவிட்டான்.

மிக அபாயமானவர்கள்

சென்ற மகா யுத்தத்தின்போது, ஜெர்மன் சேனாதிபதி விடுத்த ஒரு சுற்றறிக்கையின் நகல், பிரிட்டிவ்ஷ் சர்க்கார் மாளிகையான வொயிட் ஹாலில் சுற்றி வழங்கிவருகிறது. அதன் வாசகமாவது:

'நான் என் ராணுவ உத்தியோகஸ்தர்களைப் பின்வருமாறு நான்கு வகையாகப் பிரிக்கிறேன்: (1) கெட்டிக்காரன் (2) உழைப்பாளி (3) சோம்பேறி (4) முட்டாள். ஒவ்வொரு உத்தியோகஸ்தனுக்கும் இதிலே இரண்டு குணங்கள் கண்டிப்பாய் இருக்கும்.

'கெட்டிக்காரத்தனமும் உழைப்பும் உள்ளவர்களை எனது காரியாலயத்தில் அமர்த்திக் கொள்ளுகிறேன்.

'முட்டாள்தனமும் சோம்பேறித்தனமும் உள்ளவர்களைச் சில சமயம் உபயோகித்துக் கொள்வேன்.

'கெட்டிக்காரத்தனமும் சோம்பேறித்தனமும் உள்ளவர்களை மிக உயர்ந்த தலைமைப் பதவிகளில் நியமிப்பேன். அவர்களுக்கு நெஞ்சுரமும், கடும் பிரச்னைகளுக்கு முடிவுகாணும் மனத்தெளிவுமுண்டு.

'மூடத்தனமும், உழைப்பும் உள்ளவர்கள்தான் மிக்க அபாயமானவர்கள். அவர்களை விரட்டி விடுவேன்.'

* * *

நாக லோகம்!

இந்து மகா சமுத்திரத்தில், ஆஸ்திரேலியாவுக்கும் ஆப்பிரிக்காவுக்கும் இடையிலே வட்டத்தீவு என்று ஒரு தீவு இருக்கிறது. உலகத்திலே மனிதன் போய் வசிக்கமுடியாத தீவு இதுதான். இங்கே மிகப் பயங்கரமான பாம்புகளும் தேள்களும் ஏராளமாயிருக்கின்றன. இங்கேயுள்ள அத்தனை தினிசுப் பாம்புகள் உலகில் வேறெங்குமே கிடையாது. அவை ஆறு அடி முதல் எட்டடி வரையில் நீண்டிருக்கின்றன. சிவப்பு, வெளுப்பு, கறுப்புப் பட்டைகள் அவற்றின் உடலில் படர்ந்திருக்கின்றன. அவற்றின் விஷம் மகா கொடியது. மனிதனைக் கண்டால், இதர பாம்புகளைப்போல, இந்தப் பாம்புகள் பயப்பட்டு ஓடுவதில்லை. சீறி ஓடிவந்து, மனிதனை இவை தாக்குகின்றன.

பதினெட்டாம் நூற்றுண்டில், ஸ்பெயின் தேசத்துக் கப்பல் ஒன்று ஏராளமான பொக்கிஷத்தைச் சுமந்துகொண்டு இந்தத் தீவின் பக்கமாக வந்ததாம். புயலால் அந்தக் கப்பல் இந்தத் தீவில் மோதி மூழ்கியது. கப்பலிலிருந்தவர்கள் எப்படியோ பொக்கிஷத்தைக் கரைசேர்த்து, தாங்களும் இந்தத் தீவில் இறங்கினர்கள். அவர்களில் ஒருவர்கூட மீளவில்லை; அத்தனை பேரும் பாம்பு கடித்து மாண்டார்கள்.

அதற்குப் பின்னல், இந்தப் பொக்கிஷத்தைத் தேடியெடுப்பதற்காகப் பல யாத்திரைக் கோஷ்டியார்கள் இத்தீவுக்குச் சென்றார்கள். ஆனல், பாம்புகளின் உபத்திரவம் தாங்காததால், எவரும் அங்கே தங்க முடியாமல் திரும்பி விட்டார்கள். இப்போது இன்னுமொரு யாத்திரைக் கோஷ்டி இங்கே செல்லப்போவதாக, ஒரு செய்தி வருகிறது.

ஒரிஜனல் தியாகராஜா மெடல் ஜுவல்லரி ஒர்க்ஸ்

183, சைனு பஜார் ரோட் (மைசூர் கேப் Meals Section பில்டிங் பக்கத்தில்)

சவரன் பொன்னுக்கு சமானமானதும் 3 வருஷம் நீடித்து உழைக்கக்கூடியதுமான

எமது கம்பெனியின் நகைகள் நிறத்திலும் உழைப்பிலும் கொஞ்சமேனும் மாறாது. 10 வருஷ காலமாக பிரக்யாதி பெற்று விளங்கும் எமது ஒரிஜனல் தியாகராஜா மெடல் நகைகளை வாங்கி அணியுங்கள். எப்போதும் ஷி போர்ட்டை கவனித்தோ அல்லது ஆர்டர் மூலமோ தருவித்துக் கொள்ளுங்கள். இப் பத்திரிகையைக் குறிப்பிட்டு எழுதுபவருக்கு ரூபாய்க்கு ஒரு அணா வீதம் கமிஷன் கழித்து அனுப்பப்படும். (கேட்லாக்கு இனாம்).

உயர்ந்த வைரங்கள்

புதுமாதிரி வைர நகைகளுக்கு
நம்பிக்கையான இடம்

உ. அ. அரு. அருணாசலம்
செட்டியார்

வைர வியாபாரம்

கல்லுக்கட்டி, காரைக்குடி

JAMES POMADE &
VISHNU BRILLIANTINE
THE BEST HAIR TOILETS

நல்ல

பழங்களுக்கு

FANCY FRUIT STALL

Corporation Fruit Market

Madras.

குணத்தில் மேலானது

எல். ஜி.

மிஸ்கி பெருங்காயம்

மார்க்கை கவனித்து
வாங்கவும்

சேலைகளுக்கு

— சிறந்த இடம் —

N. C. B.

—கார்னர் ஷாப்—

N. C. பாலுசாமி ஐயர் & சன்
86, நயினியப்ப நாய்க்கன் தெரு,
மதராஸ்.

அமிர்தாஞ்சனம்

எல்லா வலிகளுக்கும் துன்பங்களுக்கும் கை கண்ட இந்திய மருந்து இதுவே. ஆயிரக் கணக்கானவர்கள் விற்கிறார்கள்.

அமிர்தாஞ்சனம் லிமிடெட்

மதராஸ் பம்பாய் கல்கத்தா

கவனியுங்கள் ! தக்க லாபம் !!

No. 1914



Elisa
No. 101

எங்களிடம் பலவிதமான கெடியாரங்கள்
குறைந்த விலைக்கு உத்திரவாதத்துடன் கிடைக்கும்

கெடியார ரிப்பேர்கள் தேர்ச்சி பெற்ற பேர்களைக்கொண்டு குறித்த காலத்தில் உத்திரவாதத்துடன் செய்து அனுப்பப்படும்.

No. 1914. சுபீரியர் ஸ்டேபிரைட் (Staybright Steel back) 15 ஜுவல்கள் உள்ளது. நீண்டகாலம் யாதொரு ரிப்பேர் அன்றி சரியான காலம் காட்டக்கூடியது. 2 வருஷம் உத்திரவாதம். லீவர் வாட்சு சதுர சையிஸ் உள்ளது. ரூ. **21-0-0.**

No. 101. 10 வருஷம் உத்திரவாதமுள்ள ரோல்டு கோல்டு இலிசா (Elisa Lever) லீவர் ரெக்டாங்குலர் ரிஸ்டு 15 ஜுவல்கள் உள்ளதும் $7\frac{3}{4}$ சையிஸ் 5 வருஷம் உத்திரவாதமுள்ளது. ரூ. **31-0-0.**

No. 102. ஷை மாதிரி எவர் பிரைட் ஸ்டீல் ரூ. **29-0-0.**
No. 103. ரோல்டுகோல்டு காப்டன் (Captain Lever)
$7\frac{3}{4}$ சையிஸ் ரெக்டாங்குலர் 16 ஜுவல்கள் உள்ளது.
(West End Pattern) 5 வருஷம் உத்திரவாதமுள்ளது ரூ. **41-0-0.**

வரவழைத்து திருப்தி யில்லாவிடில் ஒரு வாரத்தில் பணம் வாபஸ் செய்யப்படும். ஆர்டர் செய்வோர்களுக்கு அழகிய கிருஷ்ணன் போட்டோ கியாலண்டர் இனாமாக அனுப்பப்படும்.

மானேஜர் : **நியூ அமெரிக்கன் வாட்சு கம்பெனி,**
201, பெரிய கடைவீதி, திருச்சிருப்பள்ளி.

அழகிய, நவீன முறையிலுள்ள தங்க வெள்ளி
சாமான்கள் உங்களுக்கு வேண்டுமா ?

வாருங்கள் ! வந்து பாருங்கள்

ராதா ஜ்வல்லரி ஷோ ரூம்





குறிப்பிடத் தக்கவை, உத்திரவாத முள்ளவை,
உயர்ந்த ரகத்தைச் சேர்ந்தவை, நீண்டகாலம் உழைப்பவை

ஆண்களுக்கு :—தங்க மோதிரங்கள், கல்யாண மோதிரங்கள், இனுமல் மோதிரங்கள், நவின கழுத்துச் சங்கிலிகள், பித்தான் கற்கள் முதலியன.

பெண்களுக்கு :—நவீன நெக்லஸ்கள், புதுமாதிரி தங்கச் சங்கிலிகள், ஒட்டியாணங்கள், வங்கி, வகைவகையான எனுமல் காப்புகள் முதலியன.

வெள்ளிச் சாமான்கள் :—டம்ளர்கள், டீ செட்டுகள், விளையாட்டுச் சாமான்கள், ஜாடிகள், அழகிய பட்டைக் கொலுசுகள், எனுமல் கொடுத்த பலவகை சாமான்கள்.

இன்னும் எது வேண்டும் ? தயாராயிருக்கின்றன. ஆர்டர்களுக்கும் செய்து தரப்படும்.

G. ராதாகிருஷ்ண செட்டி
ஜ்வல்லர்,
பெரிய கடைத்தெரு, திருச்சி

டெலி { போன் **37.**
கிராம் 'ராதா'

ஆர்டர் அனுப்பும்பொழுது "சக்தி" யில் கண்டது என்று குறிப்பிடவும்.

காலத்தேர் தொடர்ச்சி

காலத்தேர்

[சுவாமி சுத்தானந்த பாரதியார்]

ஐந்தாம் அங்கம்

மூன்றாங் காட்சி

[பள்ளியறை, மங்கலாக விளக்கெரிகிறது. படுக்கை, நிலைக்கண்ணாடி, தாம்பூலம், சோடா, சாராயம் முதலியன காண்கின்றன.]

சுந்தரி

ஆடிய பம்பரம் அயர்ந்து வீழும்.
பாடு பாடு; அன்னப் பாட்டு!
கலையின் கள்ளே கொலைசெய்யும் உன்னை.
உனக்கும் எனக்கும் ஒட்டுற வில்லை.
ஒடிந்த மனத்தை ஒட்ட முடியுமா?
காம வெறியால் கணவனை யிழந்தேன்.
பொன்னைப் பறிக்கப் பொன்னு வந்தான்.
அவன்மதி பறித்தாள் அடங்கா வேசை.
அவள் உதைத்தாலும் அதுவே இன்பமாம்.
அவள்வை தாலும் ஆசிர் வாதமாம்.
அவளது நாற்றமே அல்லி மணமாம்;
அவள்பொய் நடையே அழகின் விளக்கமாம்!
கெட்டான் பாவி; கெடுத்தான் என்னை!
எத்தனைப் பாபம் இவனாற் செய்தேன்!
போனதை நினைத்தால் புதுத்துயர் ஓங்குதே!
இன்னொரு பாபம் இயற்றி விட்டேன்.
இறுதிப் பாவம்! இத்துடன் செல்கிறேன்.
சாயம் பூசிய சாக்கடை வாழ்வே,
மலத்திற் குவிந்த மலர்முகச் சிரிப்பே,
கண்ணி வைக்கும் கடுவிடக் கண்ணே,
மினுக்கும் பொய்யே, மெல்லிய கோரமே,
இல்லறந் தவறிய கொல்லறப் பெண்ணே,
பவள வாயிற் பதுங்கிய நஞ்சே,
பித்தக் கழுகுகள் கொத்தும் பிணமே;
இனிநீ வாழாய்! இன்றுன் பொல்லாப்
பாபச் சுமையைப் பட்டென உதறு!
ஆசை புளித்தது! ஆளும் புளித்தது!
திதிப்பும் புளித்தது; கசப்பும் புளித்தது!
விடைகொடு வாழ்வே... விரைந்து செல்கிறேன்.

[ஓடிப் போகிறாள். பின்னால் நாட்டியம் முடிந்ததும் ஒரு நிமிஷம் பயங்கரமான மௌனம்... அப்துல்லாவும் ஒற்றரும் செல்வதுபோல ஒரு மூலையில் பதுங்குதல். வெளியே போலீஸ்காரர் உலாவுதல். வருதல், பொன்னு, முல்லை.]

பொன்னு

[படுக்கையில் சாய்ந்து]
களைத்துப் போனேன்...

முல்லை

கனமான ஆட்டம்.
படத்தொகை தா, தா!

பொன்னு

பணமே பெரிதா?

முல்லை

ஆம், ஆம், கொடு, கொடு!

பொன்னு

அதுவா, நானா?

முல்லை

அதுதான் முதலில்; அப்புறம் உலகம்.

பொன்னு

பணந்தர மாட்டேன்...

முல்லை

பறித்துக் கொள்வேன்.

[அன்று பட முதலாளி தந்த குத்தகைப் பணத்தைப் பொன்னுவின் சட்டைப் பையிலிருந்து சாகசமாக எடுத்து உடனே தன் பெட்டியில் வைத்துப் பூட்டுகிறாள்.]

பொன்னு

இனிமேலாவது நேசமா யிருப்பையா?

முல்லை

இன்னொரு காரியம்...

பொன்னு

என்னது?

முல்லை

[வாளைக்காட்டி]
இதுதான்.
கொழுத்த பட்டியைக் கொல்வதே வேலை.

பொன்னு

அடிமைபோல் உழைக்கும் அவளையா கொல்வாய்?

முல்லை

பொன்னுவே போதும்... இன்னும் இவளேன்?
வாயை நெஞ்சில் மறைத்து வைகிறாள்,
நான்விலை மகளாம்; அவள்குல மகளாம்.
பணத்திற் கேநான் பல்லிளிப் பேனும்
உன்னை வஞ்சமாய் உருக்குலைத் தேனும்.
அவள்பண மெல்லாம் அபகரித் தேனும்.
குடிக்கின் றேனும்... தடிக்கின் றேனும்.

கண்டபேர் கடித்துமிழ் கரும்பாம், துரும்பாம்.
கலையால் ஆளைக் கொலைசெய் தேனும்,
கெட்ட சிறுக்கி கெடுத்தேன் என்றாள் ;
வம்பர் சிலரை வலையில் பிடித்தாள்.
அவளிருந்தால் அமைதியாய் வாழேன்.
கொல்லையில் பெரிய குழியும் உண்டு ;
புதைத்து விடுவோம்; புகார் வராது.
ஊரை மேய்க்க ஓடினாள் என்போம்...!

பொன்னு

உனக்கும் எனக்கும் ஒத்தது தானே ?
என்னை நம்பினாள் ; எப்படிக் கொல்வேன் ?

முல்லை

நானும் உன்னை நம்ப வில்லையா ?
உன்மேல் உயிராய் உள்ளது பொய்யா ?
கண்ணு காதலா, கட்டி முத்தம்...!

பொன்னு

முத்து முல்லை...முருக்கிதழ் முல்லை.

முல்லை

பாண்டிய னுக்குப் பட்ச முண்டா ?

பொன்னு

உண்டு கண்ணே ; உலகம் நீயே !

முல்லை

அப்படி யானால் சொற்படி கேளும் !
' ஆம் ' எனக் கேட்டலே ஆணுக் கழகு.

பொன்னு

பேசா திருத்தலே......பெண்ணுக் கழகு...
களைப்பாறி வருகிறேன் ..காரியம் நடக்கும்.

முல்லை

இதோ களைப்பாறும் இனிய சஞ்சீவி !

பொன்னு

அல்லிக் கரத்தால் அமுதம் அளிப்பாய் !

முல்லை

(மனதுள்)

விசன மின்றி வெறிவாள் வெட்டும்.

[கோப்பையில் சாராயம் ஊற்றித் தருகிறாள்.]

பொன்னு

(குடித்து)

அமுதின் கையால் அமுதம் உண்டேன்.

[அதுவே சுந்தரி நஞ்சு கலந்த சாராயம்; நஞ்சு வேலை செய்கிறது.]

ஆ! ஆ! இதென்ன ! அமுதா, நஞ்சா ?
ஐயோ செத்தேன்...

முல்லை

ஐயோ என்ன ?
அந்த முண்டை யாதோ செய்தாள்...

பொன்னு

கொடிய நஞ்சு குடித்துப் பாரடீ !

முல்லை

நஞ்சை நானேன் குடித்துச் சாவேன் ?

பொன்னு

பாதகி, என்னைப் படுகொலை செய்தாய் !

முல்லை

பழிசுமத் தாதே...இழிமனக் கொடியா
நீயே நஞ்சு...

பொன்னு

நீயே நஞ்சு...!
விலைக்கே உடலை விற்ற வேசையே !
பிணியே பெருக்கும் அழுகுப் பிணமே !
எவனை விரும்பி என்னைக் கொன்றாய் ?
கொன்ற வுன்னைக் கொன்றே இறப்பேன் !
வஞ்சம் வளரும் நெஞ்சைப் பிளப்பேன் !

[வாளை ஓங்கி அவள் மார்பில் பலமாகப் பாய்ச்சுகிறான்.]

முல்லை

படுகொலை ! படுகொலை !...பாதகா ! பாதகா !

[இச்சமயம் போலீஸ் உடையில் **அப்துல்லா, போலீஸ்வீரர்** எல்லாரும் உள்ளே வருதல்.]

அப்துல்

மாட்டு விலங்கு...பூட்டு சிறையில்...
வாளை எடுஎடு— ஆளைக் கட்டு...!

[ஒருவர் இரத்த வாளை எடுத்து வைத்தல்; இருவர் **பொன்னு**வுக்கு விலங்கு மாட்டுதல்; **முல்லை**யைக் கட்டுதல்.]

முல்லை

(திகைத்து)

ஒன்று சொல்லி உயிர்விடு கின்றேன்.
வாழ்வை நினைந்து வருந்து கின்றேன் ;
காமக் கொலைகள் கணக்கில செய்தேன் ;
மதுரைக் கொலையின் மர்மமும் யானே...
துப்பாக்கி யெனதே, சுட்டவன் இவனே !
அயா கோவினும் ஆயிரம் அயோக்கியன்.
காமத் தாலே கண்ணை யிழந்து,
கெட்டசுந் தரியைக் கெடுத்தவன் இவனே.
என்னை இவனே சென்னை கொணர்ந்தான் ;
கொடிய பாபப் படுகுழி வீழ்ந்தோம்
ஒருவரை ஒருவர் வெருவுறக் கெடுத்தோம் ,
கெட்டோம் பலரைக் கெடுத்தோம் முடிவில்,
ஒருத்தியைக் கொல்ல உருவிய வாளே
என்னுயிர் குடித்தது...பொன்னுயிர் தன்னை
மெள்ளச் சுந்தரி கள்ளிற் கலந்த
பொருமை நெஞ்சே பொட்டெனக் கொன்றது.
அறமே கொடியாய் ! அறமே வலியாய் !
பழிதீர்த்துக் கொள் ! பழிபா தகிநான்...!
எனது வினையே என்னைக் கொன்றது...

[இறக்கிறாள். அவளுடலைச் சிலர் தூக்கிச் செல்லல்; பொன்னுவைச் சிலர் தூக்குதல்.]

பொன்னு

வேதனை சொல்லி விடைபெறு கின்றேன் !
பாவ வினைக்கே பாவி வாழ்ந்தேன்.
சுந்தரி சொத்தைச் சுரண்டிச் சுரண்டி
முல்லை மடியில் முழுதும் கொட்டினேன்,
தங்க மான மங்களத் திருவை
நாயினுங் கேடாய் நடத்தினேன் ; அன்று
கைத்துப் பாக்கியால் கண்ணன் வள்ளியைச்
சுட்டேன் ; அப்புவைச் சுட்டு வீழ்த்தினேன் ;
என்னைக் கெடுத்தான் ; அண்ணாவி ; அவனையும்

எனது குண்டே இறுதியாய்ச் சுட்டது !
சென்னை வந்து தீமைகள் செய்தேன்.
சுந்தரி யன்று, சொந்த வினையே
வஞ்ச நஞ்சால் வாங்கிய தென்னுயிர்.
மன்னித் திடுவாய் மங்களம், மங்களம் !
சிவனே மன்னி! தீய னேனைப்
பாபமே கெடுத்தது ; பழியே நலித்தது ;
காமமே வதைத்தது ; கள்ளே கொன்றது !
வருந்திச் சாகிறேன்...சாவே வாழி...!

[இறக்கிறான்]

அப்துல்

இறுதி மொழிகளை எழுதிக் கொள்வீர்.
இருவரும் இறந்தனர் ; இனி வழக்கில்லை ;
சுந்தரி யெங்கே...துரத்து துரத்து...!

[வீரர் வீட்டைத் துருவுதல்,
சாமான்களை யெல்லாம் காலி
செய்தல்.]

வீரர்

காணோம் சுந்தரி ..!

அப்துல்

காண்போம் விரைவில் ;
சென்ட்ரல் ஸ்டேஷனிற் சென்று பாரீர் !
சிவனார் இருப்பது திருக்கா ளத்தி...
அதற்கொரு தந்தி யனுப்புவீர் உடனே !
மதுரை சென்று மற்ற தெல்லாம்...
தீதே செய்து திரிந்த கொடியரை
நீதி கொல்லுமுன் நெஞ்சே கொன்றது !
வினைப்பயன் யாரை விட்டதிவ் வுலகில் ?

[எல்லாரும் செல்லல்]

நான்காங் காட்சி

[மில்லர் தம்பதிகள் மங்களத்தை அரசிபோல் நடத்துகின்றனர். அவள் உள்ளம் ஜோதியிடமே லயித்திருக்கிறது. மில்லர் மாளிகை மணி முற்றம். சுற்றிலும் அழகிய மலர்த்தொட்டிகள். ஒரு மரக்கிளையிலிருந்து கிளிக்கூண்டு தொங்குகிறது. மாம்பூப் பூத்திருக்கிறது. மாமரத்தை முல்லைக்கொடி சுற்றிக்கொண்டிருக்கிறது. அதனருகில் ஒரு சாய்வுநாற்காலியில் அமர்ந்து, மங்களம் கிளியுடன் கொஞ்சித் தனது மனக்குறையைப் பாடுகிறாள்]

மங்களம்

முத்தங் கொடுக்கின்றேன்—கிளியே
முக்கனி யூட்டுகின்றேன்—என்
சித்தத்தைக் கொள்ளைகொண்டான்—இருக்கும்
திசையைச் சொல்லடியோ !

வையமெல்லாம் பறந்தே—முனிவர்
வாசமெல்லாம் இருந்தே—என்
ஐயனைக் காணுயோ, கிளியே—யேன்
ஆசையைச் சொல்லாயோ !

வீதி யிருக்குமிடம்—கிளியே
விளக்கிருக்குமடீ—என்
ஜோதி யிருக்குமிடம்—கிளியே
சுத்தம் இருக்குமடீ !

பால சூரியனில்—கிளியே
பார்த்தேன் அவன் முகத்தை.
கோல முழுமதியில்—அவனே
குளிர்நகை புரிந்தான்.

கார்மழை வானத்திலே—அவனே
கருணை காட்டிவந்தான்....
ஆர்வ மணாளனடீ கிளியே—என்
அன்புக் கடவுளடீ....!

காலைப் பதுமத்திலே—கிளியே
கண்களைக் காட்டுகின்றான்.
மாலை மலர்களிலே—எனக்கவன்
மாலையைச் சூட்டுகின்றான்....

கொஞ்சுங் குழந்தையிலே—அவனே
கொஞ்சிக் குலாவுகின்றான்.
வஞ்சமில்லாக் கடவுள்—எனது
வாழ்க்கை முதல்வனடீ !

மாவணை முல்லையைப்போல்—கிளியே,
மார்பினில் ஆருயிர்போல்
பூவனம் ஒன்றினிலே—கிளியே,
புல்லியேன் னுட்புகுந்தான் !

எங்கவன் போனானே—கிளியே
என்னை மறந்தானே ?
செங்கனி வாய்திறந்தே—கிளியே நல்ல
செய்தி சொல்லாயோ ?

[வருதல் மில்லர் தம்பதி
கள், அப்துல்லாகான்.]

திருமதி மில்லர்

நல்ல செய்தி...நல்ல செய்தி...
அன்பு மலரே...ஆசை ஜோதி......!

மங்களம்

எங்கே யம்மா ? எங்கே ? எங்கே...?
இருக்கி றாரா ? என்னையும் மனதில்
நினைக்கிறாரா ?...நிசத்தைச்சொல்லாய்... !

மில்லர்

நிம்மதி யாயிரு !
செல்வக் கிளியே, சேமம் வந்தது !

திருமதி மில்லர்

மகிழ்வாய், மகிழ்வாய் மங்களக் கிளியே !
உனது ஜோதி உலக ஜோதியாய்
யோக நிலய ஒளியாய், உள்ளான்...
அன்புத் தொண்டுகள் அநேகம் செய்தான்.
அவனைச் சுற்றி அடியார் கணக்கிலர்.
பூரண யோகமும் பொதுநலப் பணியும்
புரிவார் ; அவர்க்கெலாம் உரிய தந்தை
ஜோதியே ; அவனொரு தூய தாயை
எதிர்பார்க் கின்றான்...இதோ பார் கடிதம்...!

மங்களம்

[ஆவலாய்ப் படித்தல்]

" குருமணி மில்லர் திருவடி வணக்கம்...
யோக நிலயம் ஒன்று கண்டு

இகபர சாதனம் எல்லாம் செய்கிறோம்...
உள்ள பொருளை உள்ளே யுணர்ந்து,
உலகெலாம் அதுவே உள்ளதென் றறிந்து
தியானமும் தொண்டும் செய்யும் அன்பர்,
இங்கே கூடி இனிதுவாழ் கின்றார்...
தயவு செய்து தாங்கள் ஒருமுறை
இங்கே வந்து தங்கிட வேண்டும்.
மாதருக் கிங்கே மங்கள விலாசம்
அமைந்து நடப்பதை அப்துல் அறிவார்.
அதனை நடத்தவோர் அன்னை வேண்டும்.
கல்வி கேள்வியும் கற்பொ ழுக்கமும்,
யோகப் பற்றும், உள்ள சக்தியைத்
தாங்கள் வளர்ப்பதாய்ச் சாற்றினார் அப்துல்.
அத்திரு வுடனே அவசியம் வருக!

தங்கள் அன்புத் தனயன்,
ஜோதி.

மில்லர்

கடிதம் எப்படி?

மங்களம்

கடித மாயிது?
இதுவே என்னுயிர்...இதுவே ரக்ஷகன்!
இருளை நீக்கிய ஜோதி யிரவி!

சூழிருள் கெட வுதித்த
சுடர்மணி போலும்! என்னை
ஆழியைக் கண்ட தேவி
யாக்கிய தூது போலும்!
பாழிடர் துடைக்க வந்த
பகவனின் கருணை போலும்!
வாழிய ஜோதி யன்பு
வாழிய உலக மெல்லாம்!
கலங்கிய மனத்தி னுக்குக்
கருணையைப் பொழிந்த ஜோதி,
நலஞ்சோலி எனது வாழ்வை
நல்கிய தெய்வ ஜோதி,
இலங்குயிர் உலகத் தாய்போல்
என்னையே கருதும் ஜோதி,
துலங்குக சுத்த யோக
ஜோதியிவ் வுலக மெல்லாம்!

[கடிதத்தை மார்பில் ஒற்றி வணங்குகிறாள்.]

மில்லர்

கடவுள் உன்னைக் காத்தார்... மகளே!

மங்களம்

எல்லை யில்லாத் தொல்லைக் காட்டில்,
ஏங்கித் தவித்தேன்...என்னையே முடிவில்...
ஆற்றிற் கரைத்தேன்... அன்பர் கொணர்ந்தார்;
அன்னையும் அப்பனும், அன்புள சுற்றமும்
அருமை பெருமையும் யாவுமாய் நின்ற
திருமிகு மில்லர், திருமதி மில்லர்
இருவரால் உலகம் இன்பவீ டானது..
தாயே தந்தையே, தங்கள் கருணையால்
சேயேன் பிழைத்தேன், சிந்தனை யெல்லாம்
ஜோதியி னிடமே சொக்கி யிருந்தேன்,
வானும், கதிரும்; மதியும் மழையும்,
கானும் மலையுங் கடலும், உலகும்
உயிரும் ஜோதியின் உண்மையே பேசின,
அன்பே உருவாய் அமைந்த பெரியீர்;
ஆருயி ருக்குத் தாரக மான
ஜோதிக் குங்கள் கருணையைச் சொல்லும்
அந்நாள் வருமா?

மில்லர்

வந்தது, மங்களம்!
இவரே அப்துல்; இவராலே தான்
இத்தனை இன்பமும் எய்திய துனக்கு.

மங்களம்

வணக்கம் வணக்கம், வாழிய அப்துல்.
இன்பம் இனிமேல் இடர்சுமக் காதே?

அப்துல்

இடர்கள் விலகின...படர்கள் பட்டன.
மானே, உன்னை வருத்திய புல்லர்
தரங்கெட் டழிந்து தற்கொலை யானார்.
சுந்தரி பேய்போற் சுற்றித் திரிகிறாள்...
பிச்சை யெடுத்துப் பிழைக்கிறாள் பேதை.
ஒற்றர் அவளையும் ஒருநாள் பிடித்துக்
கடுஞ் சிறையிடுவர்; காதகி அவள்மேல்
கொலைக் குற்றங்கள் குவிந்தன...வினையால்.

மங்களம்

எந்தை எங்கே?...எனது ஜோதித்
தந்தை எங்கே...தயைமிகுந் தோழி
வள்ளியும் கண்ணனும் வருவரோ மீண்டும்?...

அப்துல்

திருக்கா ளத்தியில் சிவனார் இருந்தார்;
பரமன் அருளால் பைத்தியம் தெளிந்தது.
முருக னாரும் முத்தமிழ் போற்றி
அங்கே யிருக்கிறார்...அவர்கள் இருவரும்
உயர்தவப் பெரியராம் யோக முனிவரைக்
கண்டு குருவாய்க் கொண்டு சாதனம்
செய்து நல்ல சித்தியும் பெற்றார்!

மங்களம்

அறிவே பேசும் அருமைப் பாட்டி...?

அப்துல்

பாட்டி மகனுடன் பக்தி செய்கிறாள்,
கவலை யற்றுக் காலம் கழிக்கிறாள்.

மங்களம்

அவர்களைக் காண்பமோ?

அப்துல்

காண்போம் அவசியம்...

மங்களம்

எங்கே காண்போம்? எப்போது காண்போம்...?

அப்துல்

இதோ புறப்படுவோம்...இன்ப ஜோதி
நிலவும் யோக நிலயம் செல்வோம்.
அங்கே அனைவரும் மங்கள மாகச்
சேர்ந்து வாழ்வோம்...சிறந்து வாழ்வோம்.

மங்களம்

அப்பா அம்மா அன்பு மலருமை
எப்படிப் பிரியும்? என்னுடன் வருவீர்!

மில்லர்கள்

வருகிறோம் கண்ணே; வருத்தப் படாதே!

மில்லர்

கண்ணன் வள்ளி காயம் ஆறினர்.
அவர்க ளுடனே அன்பரெல் லாரும்
வருவீர்! அங்கே மணவினை காண்போம்...

[மணியோசை]

திருமதி மில்லர்

ஆண்டவன் சுபமணி அடித்தான் வாரீர்!
நன்றி செலுத்தி நடப்போம் வடக்கே...

மங்களம்

[கிளியைக் கொஞ்சி]

உள்ளங் குளிர்ந்ததடீ—கிளியே
ஊக்கம் பிறந்ததடீ—இன்ப
வெள்ளம் வளர்ந்ததடீ—ஜோதி
விளக்க மானதடீ!

[எல்லாரும் செல்லல்]

ஷேக்ஸ்பியர் எப்படித் தலைதூக்கினர்? அவருக்கு வழிகாட்டியது யார்? அந்த ரகசியம் இவரிடம் தான் இருக்கிறது:

ஆங்கில நாடகத் தந்தை — மார்லோ

'ஆங்கில நாடகம்' என்றால் நம் முன் நிற்பவர் ஷேக்ஸ்பியர்! அவருக்கும் முன்னல் ஒரு பெரும் புலவர் நிற்கிருர் — மார்லோ! மார்லோவே ஆங்கில நாடகத் தந்தை, இருவரும் ஒரே காலத்தவர். மார்லோ பிறந்தது 1564-ஆம் ஆண்டு பிப்ரவரி 26உ; ஷேக்ஸ்பியர் பிறந்தது 1564-ஆம் ஆண்டு ஏப்ரல் 26உ. மார்லோ விடமிருந்து ஷேக்ஸ்பியர் ஏராளமாகக் கடன் வாங்கி யிருக்கிருர்.

மார்லோ காண்டர்பரியில் பிறந்தார். தந்தை சக்கிலித் தொழில் செய்தார்; பரம ஏழை. ஷேக்ஸ்பியர் படிப்பு அதிகம் இல்லாதவர்; இயற்கைப் புலவர். ஆனல் மார்லோ கேம்பிரிட்ஜில் படித்துப் பட்டம் பெற்றவர்; கல்வியில் ஆர்வங் கொண்டவர். அவருக்கு ஒரு செல்வர் பள்ளிக்கூடச் சம்பளம் தந்தார். மார்லோ 1587-ஆம் ஆண்டு எம். ஏ. பட்டம் பெற்ருர். மாணவஞ யிருக்கும்போதே, அவருக்கு நாடகப் பைத்தியம் அதிகம். அப்போதே சிறு சிறு நாடகங்கள் எழுதித் தமது சகாக்களுடன் நடித்து வந்தார். கல்லூரி வகுப்பில் படிக்கையில், அவர் அரிய நாடகங்கள் எழுதினர். அவற்றுள் '**மஹா தாமூர்லேன்**' என்பது முதன்மையானது. அதை அவர் மோனையில்லாக் கவிதையில் எழுதினர்; ஷேக்ஸ்பியரின் கவிதைகளுக்கு அது வழி காட்டியா யிருந்தது. அவர் எம். ஏ. படிக்கும்போதே, அந்நாடகம் புகழ் பெற்றது; லண்டன் கலைவாணர் அதை நடித்து மகிழ்ந்தனர். இந் நாடகத்தை அழகான கிரேக்க நாடகங்களுக்குச் சமானமாகப் புலவர் போற்றினர். அதற்குப் பிறகு, மார்லோ '**பாஸ்டஸின் சோக சரித்திரம்**' என்ருெரு அரிய நாடகம் எழுதினர். அதே விஷயத்தையே ஜெர்மன் கவியரசர் கெத்தேயும் '**பாஸ்ட்**' என்ற பெரிய நாடகமாக எழுதி உலகப் புகழ் பெற்ருர். மார்லோவின் இந்த நாடகத்தை 'மஹா நாடகம்' என்று கெத்தேயே வியந்து போற்றினர்.

அடுத்த படியாக மார்லோ '**மால்டா யூதன்**' என்ற அற்புத நாடகத்தை எழுதினர். இந்த நாடகத்தில் வரும் பாரபாஸ் என்ற யூதக் கருமியே ஷேக்ஸ்பியரின் ஷைலக்காக உருவெடுத்தான் என்னலாம். மார்லோ இந்த நாடகத்தில் கருமியின் பேராசையை நகை ததும்பச் சித்தரித்திருக்கிருர். வட்டிக்கு வட்டி வாங்கும் கருமி தனது பணக் குவியலைப் பார்த்து "தூ-தூச்சம் — இதென்ன பணம் — தூசி" என்கிருன். அப்படி

'ஆனந்தன்'

யானல், அவன் பணத்தை வெறுத்த துறவியாகி விட்டான் என்று எண்ணுதீர்கள். அடுத்தபடி அவன் செய்யும் பிரார்த்தனையைப் பாருங்கள்:

"கடவுளே! இது போதவே போதாது; இந்தியா பொன்னும் மணியும் குலுங்கும் நாடு; அந்த நாட்டின் சுரங்க வியாபாரிகளை யெல்லாம் எனக்குத் தா. கடவுளே அருள்புரி" என்று பிரார்த்திக்கிருன்! இந்த நாடகம் பாமர ரஞ்சகமாக உள்ளது.

1590-ஆம் ஆண்டில் மார்லோ '**இரண்டாம் எட்வர்டு**' என்ருெரு அரிய நாடகம் எழுதினர். அதைப் புலவர் பலர் மெச்சினர்; அதிலிருந்தே ஷேக்ஸ்பியர் '**இரண்டாம் ரிச்சர்டு**' என்ற தமது நாடகத்தைச் சிருஷ்டித்தார். ஷேக்ஸ்பியர் நாடகத்துக்கு அடுத்த படியாக இந்த நாடகத்தை அறிஞர் போற்றுவர். சரித்திர நாடகங்களுக்கு இதுவே வழி காட்டியாக விளங்குகிறது.

மார்லோ எழுதிய '**வீரனும் லியான்டரும்**' என்னும் கவிதை ஷேக்ஸ்பியரின் காதற் கவிதைகள் போலச் சுவையுள்ளது.

மேற் சொன்ன ஐந்து அரிய நூல்களுமே மார்லோவுக்கு இலக்கிய வுலகில் சிறப்பான இடமளித்தன.

மார்லோ, ஷேக்ஸ்பியர், பென் ஜான்ஸன் மூவரும் எலிஜபெத் காலத்தில் விளங்கிய மூன்று கவி மணிகள் ஆவர். இவர்களுள் மார்லோ சிறந்த படிப்பாளி. பிற துறையில் புகுந்திருந்தால், அவர் எவ்வளவோ செல்வச் சிறப்புடன் விளங்கியிருப்பார். கவிதைக் கடலிலேயே மார்லோ மூழ்கித் திளைத்தார். அக்கடல் அவரது பசி தாகத்துக்கு உதவவில்லை; அதில் கவலைப் புயலே வீசியது. அந்தக் கவலையை எப்படித் தீர்ப்பது? மார்லோ சிந்தனை யுலகிலேயே வாழ்ந்தார்; உடலைப் பற்றியோ ஒழுக்கத்தைப் பற்றியோ கவனிக்கவில்லை; வறுமையால் வாடினர். மார்லோவுக்குக் கடவுள் நம்பிக்கை கிடையாது; அவர் நாத்திகப் புரட்சிக்காரர். காதல் பித்தர்; கலை வெறியர். அவருக்கும் மத போதகர்களுக்கும் ஒத்து வரவில்லை. அவர் நன்ருகக் குடிப்பார், நண்பருடன் கூடிக் குலாவுவார், கவி எழுதுவார். ஒரு நாள் அவர் சாராயக் கடையில் நிரம்பக் குடித்து ஒரு துஷ்டனுடன் சண்டை போட்டார். அவனும் குடிகாரன். சண்டை முதிர்ந்தது. குடிகாரன் மார்லோவை வெட்டிக் கொன்ருன்....இருபத்தொன்பது வயதில் மார்லோ அற்பாயுளாக இறந்தார். அவர் இறந்த பிறகுதான், ஷேக்ஸ்பியர் தலை தூக்கினர். மார்லோவுக்கு ஆயுளும் ஆதரவும் இருந்திருந்தால், அவர் உலகம் வியந்து போற்றும் அரிய பெரிய நாடகக் கவியாகி இருப்பார் — ஆனல் விதி....

குமாரி சுசீலா ஸிந்தே
மகாராஷ்டிரத்தில் எழுதிய

ரோஜா மொட்டு

(மொழிபெயர்த்தவர்: வெ. ராம ராவ்.)

ஆசிரியர் நந்தன் நிந்தூர்க்கருக்கு நீலா நிம்கர் என்ற யாரோ ஒரு அன்னியப் பெண்ணிடமிருந்து ஒரு கடிதம் வந்தது. இவரது 'தூமகேது' என்ற நாவலை அவள் பாராட்டினாள்; இவரைச் சந்தித்து நட்புக்கொள்ள விரும்புவதாகவும் தெரிவித்தாள். யார் அவள்? எப்படிப்பட்டவள்? இவருக்குப் பெரிய சந்தேகமும் குழப்பமும் உண்டாயின. அவளை வரவழைத்துத்தான் பார்ப்போமே என்று எண்ணினார். வரும்படி அப்படியே அவளுக்கு ஒரு கடிதம் எழுதினார். அவளும் வந்து சேர்ந்தாள். 'தூமகேது'வைப்பற்றி, தான் எழுதியிருந்த, பிரசுரமாகாத ஒரு விமர்சனத்தையும் கையிலே அவள் கொண்டுவந்தாள். விமர்சனம் மிக நன்றாயிருந்தது. அன்று ஏதோ பொதுப்படையாகச் சம்பாஷணை நடந்தது. பின்னால், இரண்டு மூன்று முறை அவளே இவர் வீட்டுக்கு வந்தாள்! கடைசியாய், இவரைத் தன் வீட்டுக்கு அழைத்தாள். நந்தன் அவ்வாறே சென்றார். "உங்கள் வீட்டுக்காரரிடம் என்னை அறிமுகப்படுத்தி வையுங்களேன்" என்றார். "வீட்டுக்காரரா? அவர் இங்கிலாந்திலிருக்கிறார்" என்று பதிலளித்த நீலாவின் குரலிலே சோகம் நிறைந்திருந்தது. இவ்வளவும் சென்றமாதச் '**சக்தி**'யில், நந்தன் நிந்தூர்க்கர் தாமே சொல்லிய கதை. மேலும் அவர் தொடர்ந்து கூறுவது பின்வருமாறு:

மற்ற விஷயங்களைப் பற்றிப் பேசும்பொழுது மடை திறந்த வெள்ளம்போல் பேசிய நீலா, இந்த விஷயத்தில் மாத்திரம் இப்படிப் பிடித்தமின்றி ஏன் பேச வேண்டும்? இதன் காரணம் எனக்குப் புலப்படவில்லை. 'தூமகேது' சம்பந்தமாக அவள் எழுதியிருந்த விமர்சனத்தை, நான் என் வீட்டுக்கு வந்த பின், இரண்டு மூன்று முறை திரும்பத் திரும்பப் படித்தேன். அவளுடைய செவிக்கினிய, உறுதிமிக்க, சரளமான பேச்சு, அடிக்கடி என் நினைவுக்கு வந்துகொண்டிருந்தது. அவளது ஒய்யாரமான ஒற்றை நாடி உடம்பும், குறுகுறுப்பு மிக்க இரு விசால நேத்திரங்களும், விவேக நிறைவுடன் பொலிவுற்ற முகமும் ஒருங்கே குவிந்து என் மனக் கண்முன் சினிமாக் காட்சிகள் போல் வந்து நின்றன. எனக்கேற்பட்ட ஆவல், என்னை அரித்துக்கொண்டிருந்தது—அவளுடைய உண்மையான நிலவரங்கள்தான் என்ன?

ஏழெட்டு நாள் இந்த மாதிரி எண்ணங்களிலேயே கழிந்தது. ஒருநாள் அவளிடமிருந்து கனத்த கடிதம் ஒன்று எனக்குக் கிடைத்தது. பதற்றத்துடன் அதைப் பிரித்து வாசிக்கத் தொடங்கினேன். படிக்கையில் நான் பேராச்சர்யமடைந்தேன். 'கற்பனையைவிட உண்மை நிகழ்ச்சிகள் சில சமயம் அதிக விசித்திரமாய் இருக்கின்றன' என்கிறார்களே, அது வெகு உண்மை. நீலாவின் கடிதம் இந்த ஸித்தாந்தத்தை வலுப்படுத்தக்கூடியதாக இருந்தது. அவள் பின்வருமாறு எழுதியிருந்தாள்:—

"நீல்குஞ்சு,

"சாதர், 10-8-'40

"நந்தன்!

"இன்றைக்குச் சரியாக ஐந்து வருஷங்கள் ஆயின. இங்குள்ள 'மஹிளா' ஸமாஜத்தில் நீங்கள் முதன் முதலாகச் செய்த பிரசங்கம், உங்களுக்கு மறந்திருக்கக்கூடும். அன்று நீங்கள் அதிகப் பயமும் கலவரமும் குழப்பமும் அடைந்திருந்தீர்கள். பெண்களின் கூட்டத்தில் பேசியதில் அதுதான் உங்களுக்கு முதல் அனுபவம் என்று எனக்குத் தெரிய வந்தது. உங்கள் பேச்சு மடை திறந்த வெள்ளம் போல் ஓடுவதற்குப் பதிலாக, தடைப்பட்டுத் தடைப்பட்டுக் கசிந்து வந்தது; உங்கள் உடம்பு முழுதும் வியர்வை பெருக்கெடுத்தது. உங்களை அந்தப் பரிதாப நிலையில் கண்ட எனக்கு முதல் முதலில் சிரிப்புத்தான் வந்தது. ஆனால் மறுகணம் என்னையறியாமலே என் மனத்தில் ஏதோ ஒருவிதமான வருத்தங் கலந்த ஆவல் உதித்தது; எனக்கு உங்களிடம் மிகுந்த அனுதாபம் உண்டாயிற்று; உங்கள் முகத்தையே கண்கொட்டாமல் பார்த்து, உங்களுடைய பிரசங்கமாரியைப் பருக ஆரம்பித்தேன். அப்போது இடையிலே ஒரு விநாடி நீங்களும் என்னை நோக்கினீர்கள்; ஒரு கணம் நம்மிருவர் நோக்கும் ஒன்று கலந்தது. ஆனால், அந்த இமைப்போதிலேயே உங்கள் கண்களின் மூலம் என் உள்ளத்தை அப்படியே கொள்ளைகொண்டு விட்டீர்கள். நந்தன்! உங்களுக்கு இதைப் பற்றிய கற்பனை எள்ளளவும் இருக்கக் காரணமில்லை. இது ஒரு புறம் இருக்கட்டும். இப்போது என் கதைக்கு வருகிறேன்.

"எனக்கு விவாகமாகி, இப்பொழுது சரியாகப் பத்து வருஷங்கள் ஆகின்றன. என் கலியாணத்தின்போது, பதினைந்து அல்லது பதினாறு பிராயத்தினளாகத்தான் நான் இருந்திருப்பேன். விவாகம் முடிந்தவுடனேயே, என் கணவர் மேற்படிப்புப் படிப்பதற்காக, சீமைக்குச் சென்றுவிட்டார். ஆதலால், எங்களுக்குள் பரஸ்பரம் காதல் ஏற்பட வழியேயில்லாமல் போயிற்று. வெறுங்கடமை என்பதற்காக, நான் வரிந்துவரிந்து அவருக்குக் கடிதங்கள் எழுதி வந்தேன். ஆனால், அவருடைய பதில்களோ நான்கைந்து வரிகள்தான் இருக்கும். இப்படி மூன்று வருஷங்கள் கடந்தன. தன் செல்ல மகன் உயர் படிப்புப் படிப்பதற்குப் பதிலாக, மேனாட்டு லீலா விலாசங்களில் ஈடுபட்டிருப்பதாக அறியலானார் என் மாமனார். அதன்மேல், தமது மகனுக்குப் பணம் அனுப்புவதை அவர் அறவே நிறுத்திவிட்டார். இந்த நீல்குஞ்சு பங்களாவையும் என் பெயரில் எழுதி வைத்தார். பின்னால், இரண்டு வருஷங்களில் என் மாமனார் காலமாகிவிட்டார். லண்டனிலிருந்த அவருக்கு இந்த விஷயத்தைப் பற்றி நான் தெரிவித்தபோது, அவரிடமிருந்து வந்த பதில் கடிதத்தின் சாராம்சம் இதுதான்:—'என் தகப்பனார் இறக்கும்போது விட்டுச் சென்ற சொத்துக்கள் அனைத்துக்கும் நீயே வார்ஸாக இருக்கிறாய். என்னைப் பொறுத்த மட்டில், மறுபடியும் இந்தியாவுக்குத் திரும்ப

வேண்டும் என்ற எண்ணமே எனக்குத் துளியும் இல்லை. என் மனதுக்கு உகந்தவாறு, இங்கே எல்லாம் எனக்கு அமைந்திருக்கின்றன. அப்படியே ஒரு வேளை வேறு காரணங்களை முன்னிட்டு நான் அங்கே வர நேர்ந்தாலும், உன்னை என் மனைவி என்ற உறவுடன் நடத்தப் போவதில்லை. என்னைச் சரியாகக் கலந்து ஆலோசிக்காமல், தம்மிஷ்டம்போல் என் பிதா முடித்துவைத்த நமது விவாகம், உண்மையில் விவாகமாகவே எனக்குத் தோன்றவில்லை. உன் மனதுக்கு எது உசிதம் என்று தோன்றுகிறதோ அதைச் செய்வதற்கு நீ பூரண சுதந்திரமுடையவள் என்பதை இதனால் உனக்குத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.'

"இந்தக் கடிதத்தை வாசித்ததும், எனக்கு எத்தகைய மனோ நிலை ஏற்பட்டிருக்கும் என்பதை நீங்களே ஊகித்துக் கொள்ளுங்கள். அதன்பின்னர், அவருக்குக் கடிதம் எழுதுவதையே, நான் அடியோடு நிறுத்தி விட்டேன். பின்னல், அவரிடமிருந்து எனக்கும் எவ்விதக் கடிதமும் வரவில்லை. இனிமேல் எந்த ஆசை மீது, எத்தகைய சமாதானத்தை ஊன்றுகோலாகக் கொண்டு, நான் இவ்வுலகில் உயிர்வாழ்வது என்பதை நீங்களே சொல்லுங்கள்?

"தூமகேது என்ற தங்கள் நாவலில் தாங்கள் இவ்வாறு சொல்லியிருக்கிறீர்கள்: 'நவயுகத்து நாரீமணிகள் இனித் தொட்டாற் சிணுங்கியைப்போலும் நாணமிக்க மல்லிகை மலரைப் போலும் இருந்து பயனில்லை; எண்ணிறந்த முட்களுக்குமேல் தன் சிரசைச் செருக்குடன் தூக்கி நிற்கும் ரோஜா மலராகத் திகழவேண்டும்.'

"காற்றின் கடுவேகத்தைத் தாங்க முடியாமல் நலிந்து, லேசான வெயில் பட்டால்கூட வாடி, இலைகளின் இடுக்கில் ஒளிந்து தன் வாழ்க்கையைக் கழிக்கும் மல்லிகை அல்லது முல்லை மலராக இருக்க, எனக்கும் விருப்பமில்லை; முரட்டு முள்ளுக்கும் சுரசுரப்பான இலைக்கும் தலை வணங்காமல், அவற்றையும் மீறி மமதையுடன் மலர்ந்து, தனது மணத்தால் பிறரைப் பரவசப்படுத்தி, தன் ஜன்மம் சாபல்யமானது என்ற உணர்ச்சியுடன் மகிழ்ந்து விளங்குமொரு மணமிக்க ரோஜாவாகத்தான் இருக்கவேண்டும் என்கிற ஆவல் மிகுந்திருக்கிறது. இவ்வேட்கை தணியும் பொருட்டு எத்தகைய காரியம் செய்ய வேண்டிவரினும் அதைச் செய்வதற்கு, நான் முற்றும் துணிந்திருக்கிறேன். ஆனல், ஒரு மலரை மலர்விக்க, சூரிய கிரணம் அவசியம் அல்லவா? அந்த மாதிரியே, ஒரு பெண்ணின் இருதயம் பூரண மலர்ச்சியுடன் பொலிவுற்றுத் திகழவேண்டுமானல், அதற்கும் வலிமை மிக்க ஒரு புருஷனது கைகளின் ஆதரவு வேண்டாமா? தங்கள் தூமகேதுவின் கதைப்போக்குத்தான் என்ன? தனக்கு எவ்விதத்திலும் பொருத்தமற்ற ஒரு புருஷனுக்கு, உங்கள் கதாநாயகி வாழ்க்கைப்படுகிருள்; அவனல் மிகக் கொடுமையாக நடத்தப்பட்டு, ஹிம்சை பொறுக்க முடியாமல், முடிவில் வீட்டை விட்டே வெளியேறுகிருள்; அதன் பின், தன் மனதுக்கு உகந்த வேறொரு புருஷனுடன் நேசமாகி, கணவனும் மனைவியும்போல அவனுடன் வசித்து வருகிருள். இவ்விதமாகக் கதையை முடித்துவிட்டு, பின்னுரை எழுதுகையில், அவள் அப்படிச் செய்தது முற்றிலும் நியாயமே என்று நிலைநாட்ட, தாங்கள் மிகுந்த சிரமம் எடுத்துக்கொண்டிருக்கிறீர்கள். தங்களுடைய இந்த மிக உயர்ந்த, மிகப் பரந்த கொள்கையைத் தாங்கள் பிரத்யட்சமாகத் தங்கள் வாழ்க்கையிலேயே நடத்திக் காட்டக்கூடிய ஒரு சந்தர்ப்பத்தைத் தங்களுக்கு நான் அளிக்கிறேன். என் புருஷர்தான் எனக்கு அருகதையற்றவராக ஆகிவிட்டார். கேவலம் அவரருகிலே வசிக்கக் கூடிய சகவாச தோஷங்கூட எனக்கு ஏற்படவில்லை. நான் தங்களுக்கு ஏற்றவளாகத் தோன்றவில்லையா?

"மணப்பீர்களா என்னை மனமுவந்து? சட்ட ரீதியாக நம்மிருவருக்கும் மணம் நிகழ்வது முடியாத காரியந்தான். ஆனல், நம் இருவரது உள்ளமும் ஒன்றானபின் நிகழும் மானஸீக மணத்துக்குக்கூடவா சட்டத்தின் தளைகள்? நந்தன்! உங்களைப் பற்றிய சிந்தனையிலேயே சென்ற ஐந்து வருஷங்களை நான் கடத்தி யிருக்கிறேன். உங்களுடன் அறிமுகம் ஏற்பட வேண்டும், உங்களுடன் மனமாரப் பேசி மகிழும் சந்தர்ப்பங்களை உண்டாக்கிக் கொள்ளவேண்டும் என்று பல முறை எனக்குத் தோன்றிற்று. ஆயினும், அத்தகைய ஆவலை மிகுந்த பிரயாசையின்மேல் வெகுநாள் வரையிலும் நான் அடக்கிவந்து விட்டேன். ஆனல், எப்பொழுது என்னுடைய மானஸீகப் போரில் காதலுக்கு—இயற்கைக்கு என்று வேண்டுமென்றாலும் வைத்துக் கொள்ளுங்கள்—தோற்று நின்றேனே அப்பொழுதுமுதலே, எப்படியோ நம்மிடையே கடிதப் போக்குவரத்து ஏற்படுத்திக்கொண்டு, அதன் மூலம் ஓரளவு சுகம் அனுபவித்து வருகிறேன். நந்தன்! நந்தன்! ஆர்ப்பரிக்கும் பேய்ப் புயலில்—அனைத்தையும் ஆட்டி அசைத்து வேருடன் பறித்துச் சுழற்றி மோதிக் களிக்கும் பெருத்ததொரு சூறாவளியில்—உடைந்த மரக்கலத்துப் பிரயாணி ஒருவன், தன் கைக்கு அகப்பட்ட ஏதாவது ஒரு மிதப்பை உடும்புப் பிடியாகப் பிடித்தவண்ணம், கொந்தளித்துச் சீறும் அலைகளிடையில் போராடி நிற்பதில்லையா? நானும் இவ்விதமாகவே உங்களை அடையும் ஆசை என்ற பலகையைக் கெட்டியாகப் பிடித்தவண்ணம், கடந்த ஐந்து வருஷங்களாக வாழ்க்கைக் கடலில் போராடி வருகிறேன்! உங்களது வலிமை மிக்க கையைக் கொடுத்துக் கரைக்கு என்னை இழுத்துக் காப்பாற்றுவதோ அல்லது உதறித்தள்ளிச் சீக்கிரத்திலேயே இவ்வுலகை விட்டு என்னைப் பிரியச் செய்வதோ, இந்த இரண்டும் உங்கள் கையில்தான் இருக்கின்றன. உங்களுடைய சமூகச் சீர்திருத்த எழுத்துக்கள், நோக்கங்கள், புதுமையான புனிதக் கொள்கைகள் முதலியவற்றைத் தன் மார்புடன் அணைத்து நிற்கும் இந்த நீலா, சமூகத்தின் அநியாயங்களுக்கு ஆளாகி அவற்றால் நிஷ்காரணமாக அழுத்தப்பட்டு வாடி நிற்கும் இந்த மொட்டு, உங்களது உதவியால் மறுபடியும் தலை தூக்கிப் பொலிவுடன் திகழ்ந்து, தன் சுகந்தத்தால் பெருமையுடன் விளங்கக் கூடிய நன்னாளைத் தீவிர ஆத்திரத்துடன் எதிர்நோக்கி நிற்கிருள்.

"நந்தன்! அவளுடைய கோரிக்கை ஈடேறுமா?

"தங்களுடைய

"—நீலா"

ஒரு சீர்திருத்த எழுத்தாளன் என்றும் மறுமலர்ச்சி எழுத்தாளன் என்றும் என்னைப்பற்றி நினைத்துக்கொண்டிருந்த எனக்கு, நீலாவின் இந்தக் கடிதத்தைப் படித்ததும், விவரிக்க முடியாத கலவரமும் மனக்குழப்பமும் அச்சமும் உண்டாயின! தன்னுடைய குணத்தினலும் புத்தி சாதுரியத்தினலும் சிறந்து விளங்கிய நீலா, எனக்கு என்றும் தேவையான, உகந்த, இன்றியமையாத சிநேகிதையாக இருக்க வேண்டும் என்றுதான் தோன்றிற்று. ஆழ்ந்து படித்து சுலபமாகவும் தெளிவாகவும் விஷயங்களைக் கிரகித்துக்கொண்டு, அநேக நுணுக்கமான வெவ்வேறு பொருள்களைக் குறித்தும் அநாயாசமாகவும் தெள்ளத்தெளியவும் தன் கருத்துக்களைத் தெரிவிக்கக்கூடிய ஆற்றல் வாய்ந்தவளும், என்னல் எழுதப்பட்ட புத்தகங்களின்மீது அழகிய பாரபட்சமற்ற விமர்சனங்களை எழுதி வருபவளும், தான் வேறு நான் வேறு என்றில்லாமல் என்னை மிகுந்த அன்புடன் நேசித்து வருபவளுமாகிய இந்தப் பெண்மணியின் நிரந்தர சகவாசம் எனக்குத் தகுந்தது அல்லவா? இந்தக் கேள்

விக்கு என் மனம் 'அல்ல' என்று விடை கொடுக்க மறுத்தது; ஆனால், 'ஆம்' என்று பதில் அளிக்கவும் துணியவில்லை. ஏனெனில், 'ஆம்' என்று கூறினால், 'அவள் ஏற்கனவே விவாகம் ஆனவள் ஆயிற்றே!' என்ற பிரச்சினை மலைபோல் முன் வந்து நிற்கலாயிற்று. ஆமாம், அவளைக் கை விட்டு விடுவோமே என்றாலோ, மலர விரும்பும் மணமிகுந்த அரும்பை மனமறியக் கசக்கி எறிவதுபோல், என் மனத்தில் பட்டது; அப்படிச் செய்வது இயற்கை நீதிக்குப் புறம்பானது அல்லவா? இயற்கை நியதிக்குப் பணிவதா, அல்லது மனிதனால் சிருஷ்டிக்கப்பட்ட, பாரபட்சங்கள் மலிந்த சமூகக் கட்டுப்பாடு என்னும் நியதிக்குப் பணிவதா? எது உசிதம்? அன்று முழுதும் இந்தப் புதிரை விடுவிக்க முயன்று முயன்று, ஒருவித முடிவுக்கும் வர இயலாமல் புண்பட்ட மனத்துடன், நான் வீட்டில் விழுந்து கிடந்தேன்.

நீதியும் நியமமும் ஒருபுறம் கிடக்கட்டும். விவகார திருஷ்டியுடன் நோக்கும்போது, சமூகத்தினிடையில் நிலவி வரும் என் பெயர், புகழ், நிலைமை இவை என்னாகும் என்ற கேள்வி எழுந்தது. என் உள்ளத்துக்குள்ளே ஒரு குரல் இவ்வாறு சொல்லிக்கொண்டிருந்தது: "இயற்கை நீதிக்குட்பட்டு மலர விரும்பும் மொட்டு, அதன் இஷ்டப்படி பொலிவுறச் செய். அப்படி நீ செய்யத் தவறினால், அது புழுப்பிடித்து, அதன் மூலம் சமூகம் என்ற விருட்சமே பாதகமடையக்கூடும். பெயர், புகழ், பதவி என்ற சுயநலங்களை அடிப்படையாகக் கொண்டு, ஆழ்ந்து ஆராயாமல், மேற்போக்காக உனக்கு யோசனை கூறும் குரலுக்கு நீ செவி சாய்க்காதே! நவீனக் கொள்கைகள் வெறும் ஏட்டுச் சுரைக்காய்களாய் இருந்து என்ன பயன்? தக்க சந்தர்ப்பம் வாய்த்த போதெல்லாம் அவற்றைக் காரியத்திலே காட்டவேண்டும். இது தவிர, சமூகத்திலே அமைந்திருக்கும் நியதிகளுக்கும் கூட, காலதேச வர்த்தமானங்களை ஒட்டி, புதுப் புது அம்சங்களைச் சேர்க்கவேண்டி இருந்தால், யாராவது ஒருவர் தைரியமாக முன் நின்று சில புரட்சிகளைச் செய்யத்தான் வேண்டி இருக்கிறது. அந்தப் புரட்சிகளின் விளைவாகத்தான், புதுச் சட்டங்கள் அமுலுக்கு வரக்கூடும்; வேறெப்படி வரும்?"

மாலை மறைந்து, இருளும் அறையில் பரவத் தொடங்கியது. ஆனால், எழுந்து விளக்கேற்றும் ஞாபகங்கூட, எனக்கு உண்டாகவில்லை. பலவித யோசனைகளுக்கு ஆளாகி, கண்களை மூடியவண்ணம், நான் படுத்திருந்தேன். இருந்தாற்போலிருந்து என்னிரு பாதங்களிலும் உஷ்ணமான, ஆனால் மிருதுவான, ஏதோ ஸ்பர்சம் ஏற்பட்டது. திடுக்கிட்டுக் கண்களைத் திறந்து பார்த்தேன். நீலா! ஆம், அவள்தான் என்முன் மண்டியிட்டு உட்கார்ந்திருந்தாள்! என் பாதங்களின் மீது அவளுடைய இரண்டு கண்ணீர் முத்துக்கள் உதிர்ந்து கொதித்தன. என் பாதங்களைப் பற்றியிருந்த அவளுடைய கரங்களை விடுவித்து, அவளைக் கை கொடுத்து எழுப்பி, நானும் எழுந்து சரியாக உட்கார்ந்து கொண்டேன்.

"நீலா! இதென்ன பைத்தியக்காரத்தனம்?"

"நந்தன்! உண்மையில் பைத்தியக்காரிதான் நான்; பெரும் பைத்தியக்காரி. எப்படிப்பட்ட பைத்தியக்கார ஆசையினால் உந்தப்பட்டு அந்தக் கடிதத்தை எழுதித் தங்களுக்குக் கஷ்டம் விளைவித்தேன்! அடடா! என் கழுத்தில் உள்ள இந்தக் கருமணித் தாலிச் சரடு, சுருக்குக் கயிறுபோல் என் கழுத்தைக் கெட்டியாக இறுக்கிக் கொண்டிருக்கிறது. அதைக் கைப் பிடித்து யாரோ என்னைப் பின்னுக்கு இழுப்பதுபோல் எனக்கு அடிக்கடி மனதிலே தோன்றுகிறது. நந்தன்! நந்தன்! இந்நிலையில் என் வேண்டுகோளை மறந்து விடுங்கள். வேண்டாம், வேண்டாம்—நந்தன்!........" என்று கண்ணீர் விட்டாள் நீலா.

"அறுத்தெறிந்து விடு அந்தத் தாலியை. எதற்கு அந்தத் தும்பு? நீ விலங்கல்ல; மனிதவர்க்கந்தான். மனித சுபாவத்துடன்தான் வாழ விரும்புகிறாய். மிகச் சிறப்புடன் மலர வேண்டிய மலர் நீ! இலைகளினிடையில் ஒளிந்து வாழ்க்கையைக் கடத்திவரும் முல்லைப் பூவைப்போல வீணாய் வாடிவிழ இஷ்டமில்லை அல்லவா உனக்கு? முரட்டு முள்ளுக்கும் சுரசுரப்பான இலைக்கும் மேலாகத் தலைநிமிர்ந்து அரசுபுரியும் ரோஜா மலரைப்போல..................கீழே என்ன பார்க்கிறாய் தலை குனிந்து? மேலே நிமிர்ந்து பார்; நன்றாகப் பார், என்னை! என் உள்ளம் என்னும் ரோஜா மலர்கூட எப்படி அழகாக மலர்ந்திருக்கிறது, நீலா! உண்மையில் நீ ஒரு ரோஜாமொட்டுதான். சீக்கிரத்திலேயே உன்னை மலர்விக்க வேண்டியது என் கடமை, நீலா!"

"நந்தன்!"

'நந்தன்!' என்று கூவிய அவளது குரலிலே உணர்ச்சியின் கனிவு நிறைந்த இன்பகீதம் ஒன்று ஒலித்தது; என் மனத்திலே ஒரு பரிபூர்ணம் நிறைந்தது.

குடியானவன் ராஜாவானால்......

பழைய ருஷியாவிலிருந்த குடியானவ சிப்பாய் ஒருவனை, ஒரு பத்திரிகைக்காரன் பின்வருமாறு ஒரு சமயம் கேட்டான்:—"உன்னை ருஷியாவின் ஏக சகாதிபதியான ஜார் அரசனாகச் சிம்மாசன மேற்றிவிட்டால், நீ என்ன செய்வாய்?"

குடியானவன் மிகவும் ஆழ்ந்து யோசனை செய்துவிட்டு, பிறகு அளித்த பதிலாவது:—"முதலில் மிக ஜோரான ஒரு ஜோடி பூட்ஸ் வாங்குவேன். அப்புறம், போர்ஷ் என்ற ருஷிய சூப்பு நிறையக் கொண்டுவர உத்திரவிட்டு, என்னால் முடிந்த வரையில் அதைக் குடிப்பேன். அதன்பின், 100 ரூபிள் காசுகளைத் திருடி, அவற்றை உதை உதையென்று உதைப்பேன்."

'பணமே! உன்னால் என்ன குணமே?' என்று வேதநாயகம் பிள்ளை பாடியது, இதற்கு முந்தியா பிந்தியா என்று நமக்குத் தெரியாது.

GRIPE REMEDY

அளவு: சிசுக்களுக்கு $\frac{1}{2}$ டீ ஸ்பூன், 6 மீ வரைக்கும் 1 டீ ஸ்பூன், 6 முதல் 12 மீ வரை 2 டீ ஸ்பூன்கள், 1 வயதிற்குமேல் 2 முதல் 3 டீ. ஸ்பூன்கள்

சௌத் இந்தியன் பிராடக்ட்ஸ் லிமிடெட்.

குழந்தைகளுக்கு ஏற்படும் வயிற்றுப் புளிப்பு, மந்தம், பசியின்மை, வயிற்றுவலி, அஜீர்ணம், அஜீர்ணபேதி, வாந்தி முதலிய வியாதிகட்கு சஞ்சீவி போன்றது. குழந்தைகளுக்காகவே மிக அரிய மூலிகைகளையும், உப்பு, பழ சத்துக்களைக்கொண்டும் குழந்தைகள் பிரியப்படும்படி செய்யப்பட்டது. நொடிப்பொழுதில் கோளாறுகளை நீக்கும் தன்மை யுள்ளது. தண்ணீர் கலவாமல் அப்படியே உபயோகிக்கலாம். குழந்தைகளை குடல் வியாதிகளி லிருந்து காப்பாற்ற ஆகாரத்துடன் சில துளிகள் எப்பொழுதும் கலந்து கொடுக்கலாம்.

ரிட்: உங்கள் வீட்டிலுள்ள எவ்வித உலோக சாமான்களையும் சுத்தப்படுத்தி பிரகாசிக்கச் செய்யும் பவுடர்.

காந்தி: எல்லாவிதமான உலோகங்களையும் பிரகாசிக்கச் செய்ய உதவும் திரவ ரூபமான பாலிஷ்.

ஷைனல்: மோட்டார்கார் ரேடியேட்டர்கள் நிக்கல் சாமான்கள் முதலியவைகளை வேறெரு பொருளின் உதவியின்றி மெருகு கொடுக்க உபயோகப்படும் ஒரு பாலிஷிங் துணி.

ப்ரேமா: இனிய பரிமளம் மிகுந்த டாயிலெட்

ஸிப்கோ பினையல்: துர்நாற்றங்களை தவிர்த்து தொத்து வியாதிகளைத் தடுக்கும்.

ஸிப்கோ ராகி மால்ட்: இயற்கை வைத்திய முறைப்படி செய்யப்பட்ட கேப்பை மா. கோடை காலத்திற்கு ஏற்ற பானம்.

தயாரிப்பவர்கள்:

சௌத் இந்தியன் பிராடக்ட்ஸ்
லிமிடெட்
மயிலாப்பூர் :: மதராஸ்

விநியோகிப்பவர்கள்:

ஐடியல் ஏஜென்ஸீஸ்
148, பிராட்வே :: மதராஸ்

ஸன்

ஆப்டோன்

பிளாக்குகள்

உங்களுக்குத் தேவையான எவ்விதமான பிளாக்குகளும் நவீன முறைகளில் துரிதமாகவும் சகாயமாகவும் செய்து தரப்பெறும்.

★

விவரங்களுக்கு எழுதவும்

மானேஜர்

"ஸண்டே டைம்ஸ்" பிராஸஸ் ஸ்டுடியோ
எர்ரபாலு செட்டித் தெரு :: சென்னை
Phone: 2678

தந்தி: "GOODWILL" த. பெ. நெ. 113 டெலிபோன்: 2724

ஸௌத் இந்தியா கார்பொரேஷன் (மதராஸ்) லிமிடெட்

80, செம்புதாஸ் தெரு, ஜியார்ஜ் டவுன், சென்னை

பிராஞ்சுகள்

கல்கத்தா, காரைக்குடி, கோயமுத்தூர், திருச்சினுப்பள்ளி

எம்மிடம் திரணை, சதுரம், பட்டா, இரும்புத் தகடு, கலாய்த்தகடு, கர்டர், கலாய்ப் பைப்பு, கலாய்க் கம்பி, ஆணி வகைகள், பெயிண்டு, சிமெண்டு முதலிய எல்லா விதமான, இரும்பு சாமான்களும் கட்டிட சாமான்களும் கிடைக்கும்.

சினிமா பிடிப்பதற்கு வேண்டிய 2000 பவர் முதல் 5000 பவர் வரையில் பிரகாசமான பல்புகளும் அதைச் சேர்ந்த லைட் பிட்டிங்குகளும்

எலெக்டிரிக் வொயரிங் சாமான்கள், வொயர், பல்பு, விசிறி, எலெக்டிரிக் மோட்டார், பம்பு முதலிய எல்லா எலெக்டிரிக் சாமான்களும் கைவசமிருக்கின்றன.

Sole Distributors for Madras Presidency and States

BLOOD VITA

பிளட் விட்டா என்பது கல்கத்தா மெடிகல் ரிசர்ச் லபாரட்டரியில் டாக்டர் அத்யக்ஷ மாதூர் பாபு என்பவரால் தயாரிக்கப்பட்ட உயர்ந்த இரத்த விருத்தி டானிக். **8 அவுன்ஸ் பாட்டில் விலை ரூ. 1/4**

*

ASCU WOOD PRESERVATIVE [ஆஸ்கூ]

இது மரப்பலகை, உத்தரம், விட்டம், டெலிபோன், எலெக்டிரிக் கம்பங்கள் முதலிய எல்லாவிதமான மரச் சாமான்களும் உளு, கறையான், மண் இவைகளால் பாதிக்கப்படாமல் இருப்பதற்கென்று, இந்திய சர்க்கார் காட்டு இலாகா ஆபீஸராக இருந்த டாக்டர் காமேசம் அவர்களால் கண்டு பிடிக்கப்பெற்ற, ஒரு ரசாயனப் பொருள். உபயோகப்படுத்தும் முறை இவைகளுக்கு, நேரிலோ, கடிதமெழுதியோ தெரிந்து கொள்ளலாம். ஜில்லா ஏஜண்டுகள் தேவை.

விவரங்களுக்கு எழுதவும்

கோலமா……?

(எஸ். விசாலாக்ஷி)

"காலணுவுக்கு ரெண்டு படி போடறதானல் போடு இல்லாவிட்டால் போ."

"சுண்ணும்பு விலை கூடக் கட்டாதேம்மா? மண்டை யெரியத் திருவத்தூர்லேந்து தூக்கியாந்தேனேம்மா? படி அரையணு வச்சுக்கோம்மா."

இந்தச் சம்பாஷணை, சீதாப் பாட்டிக்கும் கோல மாவு விற்கும் சிறுமிக்குமிடையே நடந்தது.

நல்ல கறுப்பு. ஒன்றிரண்டு அம்மைவடு வுள்ள முகம். வசீகரமான கண்கள். பல் துலக்கும் 'டூத் பேஸ்ட்' விளம்பரத்துக்குப் படம் போடுகிறார்களே அது போல் வெள்ளை வெளேரென்றிருக்கும் பல் வரிசை. கிழிசலும் அழுக்கும் நிறைந்த ஆடை. எண்ணெயே கண்டறியாத செம்பட்டை மயிர். 'குறு குறு' வென்றலையும் பார்வை. இந்த லட்சணங்கள் வாய்ந்த அந்தச் சிறுமிக்குப் பதினைன்கு வயதிருக்கும். இதையெல்லாம் பாட்டி கவனிக்கவில்லை. ஆனல், இப்பொழுதும் அந்தச் சிறுமியின் முகம் என் கண் முன் நிற்கிறது.

"போனல் போவுது, ரெண்டு தம்பிடி வைச்சுண்டு ரெண்டு படி போட்டுட்டுப் போ" என்றாள் பாட்டி.

"அஞ்சு தம்பிடி கொடு, தாயி! ஊட்டுக்குப் போகணும். அப்பன் காத்திருப்பாரு."

"ரெண்டு காசுக்கு மேலே அரைக்காசு கொடுக்க மாட்டேன். போட்டால் போடு; போடாவிட்டால், போ."

அசிரத்தையாகக் கதவைச் சாத்துவது போல், பாட்டி நடித்தாள்.

மனிதர்களின் வாழ்விலே இப்படி ஒரு விசித்திரம்: கடுகு போனதை ஆராய்வார்கள்; பூசணிக்காய் போவது தெரியாது. பாட்டி சிறுமியுடன் நடத்தும் பேரம் அதற்கு ஒரு உதாரணம்.

சிறுமியும் கூடையைத் தலையில் தூக்கிக்கொண்டு, "மொக்குமாவோ ஓஓஓஓஓ மொக்குமாவு" என்று கூவிக்கொண்டே, கிளம்பி விட்டாள். அவள் பக்கத்து வீடு தாண்டும் வரையில் சும்மாவிருந்த பாட்டி, "அடி குட்டி! இங்கே கொண்டாடி" என்று மீண்டும் கூப்பிட்டாள்.

பெண் திரும்பி வந்தாள்.

"படி காலணு வச்சுண்டு அள. இதோ பார். எங்க படிலேதான் போடணும்" என்று, பாட்டி தனது பேரத்தைத் திரும்பவும் வேறு ரூபத்தில் ஆரம்பித்தாள்.

சிறுமி: "இதென்னம்மா படி? மரக்கா லாட்டமா இருக்குதே! காலணுவுக்கு வெத்தலை பாக்கு வாங்கிப் போட்டுக்கினு துப்பிடறீங்கோ; இப்படி என்னை அநீதம் பண்ணுறீங்களே?"

பாட்டி: "விசாலம்! இந்தக் குட்டி வாயைப் பாத்தியா! விக்கிறது கோலமா; அளக்கிறது விண்ணளம்!........போட்டால் போடு; போடாவிட்டால் தூக்கிண்டு அலை."

இத்துடன் கதவைப் படீரென்று சாத்திக்கொண்டு, பாட்டி உள்ளே போய்விட்டாள். அந்தச் சிறுமியைப் பார்த்தால், எனக்குப் பரிதாபமாயிருந்தது. அது அழுதுவிடும் என்று நான் நினைத்தேன். ஆனல், ஒரு கண நேரம் கண்ணைச் சிமிட்டாமல் பாட்டி போன திசையைப் பார்த்துக் கொண்டிருந்துவிட்டு, மறு நிமிஷம் 'கொல்' என்று சிரித்தது அந்தக் குட்டி. முத்தைப் போல் வெளித் தோன்றிய அதன் பற்கள் பளபள வென்று மின்னின. எனக்கு இது வியப்பாயிருந்தது.

'இதென்னம்மா படி? மரக்காலாட்டமா, இருக்குதே!'

“ஏன் பெண்ணே, சிரிக்கிறாய்?” என்று கேட்டேன்.

“அது இல்லேம்மா! நெனச்சுக் கிட்டால் சிரிப்பு வருது. இந்தப் பாட்டியம்மா சாவப் போறதே யில்லையா? இப்படி அநீதம் பண்ணப் பார்க்கிறாங்களே!” என்று சொல்லி, தன் முகவாய்க்கட்டையில் கையை வைத்துக்கொண்டு, தலையை அசைத்தாள் சிறுமி. பிறகு கூடையைத் தலையில் தூக்கி வைத்துக்கொண்டு, “மொக்கு மாவோ ஓ ஓ ஓ மொக்கு மாவு!” என்று கூவிய வண்ணம் போய் விட்டாள்.

நான் சற்று நேரம் வரையில் கண் கொட்டாமல் அவளையே பார்த்துக்கொண்டு நின்றேன். என் மனதில் பலவித எண்ணங்கள் தோன்றி மறைந்தன. படி காலணாவாக ஒரு கூடை கோலமாவு விற்றால், இரண்டணா தேறக் கூடும். அதில் சுண்ணாம்பு விலை அரையணா போனால், மிஞ்சுவது ஒன்றரையணா; அந்த ஒன்றரையணாவிலே, ஒரு நாள் தள்ளியாக வேண்டும். தாயார், தகப்பன், சின்னத் தங்கை, தம்பி இத்தனை பேருக்கும் அதிலே காலட்சேபம்! —இப்படி யெண்ணிய நான் பெருமூச்செறிந்தேன்.

நேற்று மாலை சீதாப்பாட்டி யகத்தில் எல்லோரும் சினிமாப் பார்க்கப் போயிருந்தார்கள். ஒவ்வொருவருக்கும் ஒன்பதணாவாக, எட்டு நபருக்கு நாலரை ரூபாய் போய் விட்டது. இரண்டரை மணி நேரம் திரையில் தோன்றும் நிழலைப் பார்ப்பதற்கு நாலரை ரூபாய் கொடுக்க இசைந்த பாட்டி, கோல மாவு விற்கும் சிறுமியை ஏமாற்றிக் கால் காசுக் கோல மாவு திருடப் பார்க்கிறாள். கட்டணத்தில் காலணாக் குறைக்கும்படி சினிமாக் கொட்டகைக்காரனைக் கேட்டாளா? ஊஹூம்! அங்கே பலிக்காது. ஆனால், மொக்கு மாவு விற்கும் சிறுமியிடம் கால் காசுக்குப் பேரம் பேசுகிறாள்!

இதே மாதிரிதான் ரிக்ஷாக்காரர்களிடமும் அவள் தகரார் செய்வாள். அரசமரப் பிரதட்சணம் செய்வதற்காக இராயபுரத்துக்குப் போவாள். அப்போது ரிக்ஷாக்காரனிடம் ஒன்றரை யணாவுக்கு மேல் கொடுக்க முடியாதென்று வாதாடுவாள். ஆனால், அங்கே வரும் சாஸ்திரிகள் தனக்கு மந்திரம் சொல்கிறாரா அல்லது தன்னைத் திட்டத் தான் திட்டுகிறாரா என்று தெரியாவிட்டாலும் கூட, கூசாமல் இரண்டு ரூபாயை அவருக்கு அவிழ்த்து விடுகிறாள்! இது என்ன பிரக்ருதி!

அரச மரத்தைச் சுற்றிச் சுற்றி வருவதால், கைலாசம் கிட்டுமா? ஏழை ரிக்ஷாக்காரனை வயிற்றிலடித்துவிட்டுச் சாஸ்திரிகளுக்கு இரண்டு ரூபாய் கொடுப்பதால், ஸ்வர்க்கம் கிடைத்து விடுமா?

எங்கள் வீட்டுக்கு மூன்றாவது வீட்டில் ஒருவர் குடியிருக்கிறார். சிகரெட்டுக்காக ஒரு நாளைக்கு ஒரு ரூபாய் செலவு செய்கிறார். பண வசூலுக்காக அவருடைய குமாஸ்தா மைலாப்பூர் போகவேண்டியிருந்தது. அப்போது அவன் காலில் ஆணி தைத்துப் பெரிதாய் வீங்கியிருந்தது. ‘பஸ்ஸு’க்காக மூன்றணாக் கொடுக்கும்படி அவன் எவ்வளவோ கெஞ்சிப் பார்த்தான் எஜமான் மனம் இளகவில்லை. “வேணுமானால் சொந்தச் செலவில் போ” என்று உத்தரவிட்டு விட்டார்!

ஒரு செட்டியார் மூவாயிரம் ரூபாய் செலவிட்டு, ஒரு பெருமாள் கோவிலில் உற்சவம் நடத்தி வைத்தார். ஆனால், வீட்டிலே புடவை தோய்க்க வேண்டி யிருப்பதால், இரண்டணா அதிகம் கொடுக்கும்படி கெஞ்சின வேலைக்காரியைத் துரத்திவிட்டார்!

பொது மக்களுக்குத் தொண்டு செய்வதற்காக, ஒருவர் இரண்டாயிரம் ரூபாய் செலவு செய்து தேர்தலுக்கு நிற்கிறார். தம்மிடம் ஒரு வேலைக்குச் சிபார்சு தேடும் ஒருவரிடம் 50 ரூபாய் லஞ்சம் கேட்கிறார்! இது என்ன விபரீதம்! இதையெல்லாம் பற்றி உங்களுக்கு என்ன தோன்றுகிறது? காரணம் என்னவென்று நினைக்கிறீர்கள்? காலமா, காலத்தின் **கோலமா....?**

பத்திரிகைத் தொழில் லாபம்

அமெரிக்காவைச் சேர்ந்த டெக்ஸாஸில் ஒரு பத்திரிகைப் பிரசுரகர்த்தர், சமீபத்தில் அந்தத் தொழிலைவிட்டு விலகினார். அப்போது, பாங்கியிலே தமது பெயரால் 50,000 டாலர்கள் அவர் போட்டிருந்தார்.

“இவ்வளவு பணம் நீங்கள் எப்படிச் சேர்த்தீர்கள்?” என்று அவரை யாரோ ஒருவர் வினவினர்.

அவர் சொன்னார்: “பாங்கியிலே 40,000 டாலர்களை எப்படிப் போட்டேன் என்றுதானே கேட்கிறீர்கள்? சொல்லுகிறேன் கேளுங்கள்: 30 வருஷமாய் என் கடமையை மிக ஊக்கமாய்ச் செய்துவந்தேன்; கடுஞ் சிக்கனத்தைக் கடைப் பிடித்தேன்; சதா என் தொழிலிலே மனப்பூர்வமாய் ஈடுபட்டேன்; என் மாமா ஒருவர் சாகும்போது எழுதி வைத்த உயிலில் எனக்கு 49,999½ டாலர்களை இனும் அளித்தார்.”

போட்டிப் பரிசு முதலிய சூதுகளையோ, தானதர்மங்களையோ சாராமல் பத்திரிகைத் தொழில் நடத்துவது, பெரும்பாலும் எவ்வளவு ‘லாபம்’ தரும் என்பதற்கு இந்தக் கதை ஒரு சிறந்த உதாரணமாகும்.

பேதங்கள் எப்போது ஒழியும்?

ஒருவன் பூமியிலிருக்கையில் புல்லையும் வானுற ஓங்கி வளர்ந்த தேவதாரு மரத்தையும் கண்டு, “இந்த மரம் எவ்வளவு பெரியது, புல் எவ்வளவு சிறியது” என்கிறான். ஆனால், அவன் ஒரு மலைமீதேறி உச்சியிலிருந்து கீழே நோக்கும்போது, பெரிய தேவதாரு மரமும் சிறிய புல்லும் ஒருங்கே உருத்தெரியாத பச்சைப் பொட்டாகத் தோன்றுவதைக் காண்கிறான். அதுபோலவே, உலகப் பற்றுள்ளவர்களுடைய பார்வைக்கு ஒருவன் அரசனென்றும் மற்றொருவன் தெருப் பெருக்கும் தோட்டி யென்றும், ஒருவன் தகப்பனென்றும் மற்றொருவன் மகனென்றும், இம்மாதிரியான ஸ்தான பேதங்களும் அந்தஸ்து வித்யாசங்களும் தோன்றும். ஆனால், தெய்வ தரிசனம் பெற்ற பிற்பாடு எல்லாம் ஒரேவிதமாய்த் தோன்றும். அப்போது, நல்லது கெட்டது, உயர்ந்தது தாழ்ந்தது என்ற வித்யாஸங்களே இருப்பதில்லை.

—ஸ்ரீ பரமஹம்ஸர்.

பறித்த பூக்கள்

மகாராஷ்டிர இலக்கியம் பற்றி ராஷ்டிர வாணியில்' வெளியாகியுள்ள ஒரு கட்டுரை ரசமாயிருக்கிறது. அதன் சாரமாவது :

குடும்ப சௌஜன்யத்தைப் பற்றி வர்ணிப்பதுதான் குஜராத்தி இலக்கியத்தின் முக்கிய அம்சம். மராட்டியர்கள் எப்போதுமே அடிமைத் தனத்தையும், யதேச்சாதிகாரத்தையும் எதிர்த்து வருகிறார்கள். அதனால், மராட்டி இலக்கியத்தில் வீரமும் சௌர்யமுமே அதிகமாய்ப் போற்றப்படுவதைக் காணலாம்.

இந்தியாவின் இதர மாகாண இலக்கியங்களைப் போலவே தெய்வங்களையும் தெய்விக லட்சணங்களையும் வர்ணிப்பதில்தான், புராதன மராட்டி இலக்கியமும் ஆரம்பமாயிற்று. ஆனாலும் அவற்றிலும் முக்கியப் பொருள் யதேச்சாதிகாரத்தை எதிர்ப்பதுதான்.

நவீன மராட்டி இலக்கியத்தின் லட்சியம் சுதந்திரம் பெறுவதுதான். என்றாலும், அதில் இரண்டு விதமான கட்சிகள் இருக்கின்றன. ஒன்று புரொபசர் அகர்காரின் தலைமையில் நடக்கும் சீர்திருத்த இயக்கம். சமூக, தேசீய அமைப்பிலுள்ள ஊழல்களைக் கடுமையாகக் கண்டிப்பதன் மூலம் அவற்றை ஒழித்துவிட வேண்டுமென்பது அவருடைய கட்சியின் லட்சியம். இன்னொரு கட்சியின் தலைவர் காலஞ்சென்ற லோகமான்ய திலகர். வாழ்க்கையின் சிறந்த அம்சங்களையும் மனிதனின் தெய்விககுணங்களையும் வர்ணிப்பது தான் அவருடைய நோக்கம். அந்த இயக்கத்தின் பிரதிநிதிகளாக இன்று காகா காலேல்கரும் கேல்கரும் விளங்குகிறார்கள். ஹரிநாராயண் ஆப்டேயின் மூலமும் நவீன மராட்டி இலக்கியம் வளம் பெற்றிருக்கிறது.

ராஜாஜியிடம் பயம்!

மகாத்மா காந்தியின் தலைமையில் நடந்த பெல்காம் காங்கிரஸைப் பற்றிய மிக உருக்கமும் ரஸமுமான பல அரிய நிகழ்ச்சிகளை நண்பர் கி. ச. 'ஹிந்துஸ்தா'னில் எழுதி வருகிறார். ஒன்று இது :

விஷயாலோசனைக் கமிட்டியில் ஒரு சம்பவம் நடந்தது. சுயராஜ்யக் கட்சி சம்பந்தமாக ஒரு தீர்மானத்தை, காந்திஜீ தயார் செய்தார். அந்தத் தீர்மானத்தை, சித்தரஞ்சன் தாஸுக்கும் மோதிலால் நேருவுக்கும் அவர் காட்டினார். இருவரும் தீர்மானத்தை ஒன்றுக்குப் பல தடவை படித்துப் பார்த்தார்கள்; தீர்மானத்தைப் பிரேரணை செய்ய, சம்மதமும் கொடுத்தார்கள். வரிசையாகப் பல தீர்மானங்கள் நிறைவேறிக்கொண்டே வந்தன. ராஜாஜியை அழைத்து மேற்சொன்ன தீர்மானத்தைப் பிரேரணை செய்யுமாறு காந்திஜீ சொன்னார். ராஜாஜி தீர்மானத்தை வாசித்துவிட்டு, "இந்தத் தீர்மானத்தை நான் பிரேரணை செய்கிறேன். இது காந்திஜீ தயாரித்த தீர்மானமாகையினால், இதைக் குறித்து நான் ஒன்றும் பேசப் போவதில்லை. இதற்கு நீங்கள் ஓட்டுச் செய்வீர்கள் என்று நம்புகிறேன்" என்று கூறிவிட்டு, உட்கார்ந்தார். அந்தத் தீர்மானத்துக்கு ஓட்டுச் செய்யப் பிரதிநிதிகளும் தயாராக இருந்தார்கள். அந்தச் சமயத்தில் ஸ்ரீ சித்தரஞ்சன் திடீரென்று எழுந்தார்; "இந்தத் தீர்மானத்தை நான் எதிர்க்கிறேன்" என்று கூறினார்.

"இதென்ன அதிசயம்! நீங்கள் சம்மதம் கொடுத்த தீர்மானமாயிற்றே இது?" என்று காந்திஜீ கேட்டார்.

"ஆமாம். நான் சம்மதம் கொடுத்தது வாஸ்தவமே. ஆனால், ராஜாஜீ இந்தத் தீர்மானத்தைப் பிரேரணை செய்ய முன்வந்ததால், இதைக் குறித்து இன்னும் கொஞ்சம் தீர்க்காலோசனை செய்ய வேண்டுமென்று தோன்றுகிறது" என்று சித்தரஞ்சன் கூறினார். காந்திஜீ தீர்மானத்தை வாபஸ் செய்துவிட்டு, "நீங்களே இதைப் பிரேரணை செய்யலாம்" என்று தாஸிடம் கொடுத்தார். சற்று நேரம் தீர்மானத்தை ஆராய்ந்து பார்த்த பிறகு, ஸ்ரீ சித்தரஞ்சன் தாமே அதைப் பிரேரணை செய்தார். ராஜாஜி புத்திசாதுர்யக்காரர் என்று ஸ்ரீ சித்தரஞ்சன் முதற்கொண்டு வடநாட்டுத் தலைவர் எல்லோருக்கும் அவ்வளவு பயம்.

கண்ணாடிப் பட்டு

கண்ணாடிப் பட்டு அல்லது கண்ணாடிக் கம்பளி என்று சொல்லப்படும் பொருளைத் தயாரிப்பதில் சென்ற சில வருஷங்களாய்த் துரிதமான அபிவிருத்தி ஏற்பட்டிருக்கிறது. இது பற்றிக் 'குமரனி'ல் இந்த விவரம் காணப்படுகிறது :

மிக நுண்ணிய கண்ணாடி இழைகளால் தயாரிக்கப்படும் இந்தத் துணி குளிர்ச்சியையும் வெப்பத்தையும் தாங்கக் கூடியது. சென்ற பல வருஷங்களாக, கிரேட் பிரிட்டனிலுள்ள பல தொழிற்சாலைகள் இதைத் தயாரித்து வருகின்றன. அமெரிக்காவிலும் 'நார்க்கண்ணாடி' என்ற பெயரால் இது தயாரிக்கப்பட்டு வருகிறது. கண்ணாடி நாரின் குறுக்களவு, சாதாரண மனித ரோமத்தின் குறுக்களவில் பதினைந்தில் ஒரு பாகந்தான் இருக்குமாம். உருக்கிய கண்ணாடிக் குழம்பினின்றும் நூலிழைபோல, கண்ணாடி இழைகள் எல்லையற்ற நீளத்துக்கு இழுக்கப்படுகின்றன. இவ்வாறு இழுக்கப்பட்ட இழையை இதர இழைகளைப் போலவே நூற்று நெய்யலாம். கண்ணாடிக்கிருக்கும் தனிக் குணங்களெல்லாம் இந்தத் துணிக்கும் இருக்கும். எரியாது; புழு பூச்சிகள் அரிக்கமாட்டா; அழுகாது. மிக மெல்லிசாக இருந்தாலும், பலம் மட்டும் மிக அதிகம். மெல்லிய உருக்குக் கம்பியின் பலத்தைவிட இது அதிகப் பலமுள்ளது. சாதாரணத் திராவகங்கள் இதைப் பாதிக்கமாட்டா. மின்சாரம் இதைத் தாக்காது; இதனூடே பாயாது. இதர துணிகளைப் போலவே, கண்ணாடித் துணிக்கும் சாயமிடலாம். சாதாரணத் தறிகளில் துணி நெய்வது போலவே இதையும் நெய்யலாம். பிரஷால் துடைத்துவிட்டால், அழுக்கு பறந்து விடும். சலவை செய்யவேண்டியதில்லை. கோணிப்பை தயாரிக்க, இது ஏற்றதென்று ஒருவர் கூறுகிறார். முக்கியமாக, உடைப்பெடுத்துள்ள இடங்களை அடைக்க, மணல் மூட்டைகளுக்காக இதை உபயோகித்தால், நீரில் கெடாமலிருக்குமென்று அவர் கருதுகிறார். வீடுகளில் அடுக்கி வைத்திருந்தால், நெருப்புப் பொறி பறந்தாலும் பற்றாது. ஆனால், இதை உபயோகிப்பதில் சில கெடுதல்களும் இருக்கின்றன. இது தவறுதலாக உடம்பில் குத்திக் காயமுண்டாக்கி விடக்கூடும்.

மலிவான வீடு

ஒரு நண்பர் சொந்த வீடு கட்டினார். அதைத் தாம் போய்ப்

பார்த்து வந்த வைபவத்தை, ஸ்ரீமதி கே. ஆர். ஜெயலட்சுமி, பின்வருமாறு 'லோகோபகாரி'யில் வர்ணிக்கிறார் :

வெங்கோப ராவின் வீட்டைப் பார்க்கப் போன நான், "தாத்தா! வாசல் பார்வையில் இவ்வளவு சிறிய ஜன்னலாய் வைத்திருக்கிறீர்களே!" என்று கேட்டேன்.

"என்ன செய்வது அம்மா! கதவும் ஜன்னலும் வெவ்வேறு சமயத்தில் ஏலத்தில் மலிவாய்க் கிடைத்தன. காசு கொடுத்து வாங்கினதை உபயோகிக்காமல் வீணாக்க மனம் வருகிறதா?" என்றார் வெங்கோப ராவ்.

இதிலிருந்து ஆரம்பம். அகப்பட்ட போது சாமான்களைச் சரஸமாய் வாங்கி, கடைசியில் வீணாக்காமல் சிக்கனமாய் வீடு கட்டி முடிக்கும் விதம் எப்படியென்று தெரிய வேண்டுமானால், வெங்கோப ராவின் வீட்டைத்தான் போய்ப் பார்க்க வேண்டும்.

வீட்டில் ஒரு பாகம் சீமை ஓடு; ஒரு பாகம் நாட்டு ஓடு. வேண்டாத ஒரு பாகத்தில் தளவரிசை; முன்புறம் அறைகளுக்குச் சதுரச் செங்கல்; சாமான் உள்ளுக்குச் சலவைக்கல்—காரணம், மலிவாய் வாங்கிப் போட்டிருந்த சலவைக்கல் அந்தச் சிறிய அறை அளவுக்குத்தான் சரியாய் இருந்தது. தவிர, வாங்கின சலவைக்கல்லைப் பிரயோசனப் படுத்தாமல் இருக்கலாமா?

வானவில்லில் எவ்வளவு விதமான வர்ணங்களுண்டோ அவ்வளவையும் வெங்கோப ராவின் வீட்டில் காணலாம். பாவம்! வெங்கோபராவுக்கு வெவ்வேறு தினுசான பெயிண்டுகள்தான் மலிவாய்க் கிடைத்தன.

வீட்டைப் பார்த்து முடிந்ததும் வழக்கப் பிரகாரம் "வீடு எப்படி இருக்கிறது?" என்று கேட்டார் வெங்கோப ராவ்.

"நன்றாயிருக்கிறது; வெகு சிக்கனமாய் முடித்திருக்கிறீர்கள்" என்று பதிலளித்தேன்.

"வாஸ்தவம் தான். வீடு அழகுக்கும் அயலார் பார்த்து மெச்சிக் கொள்வதற்குமா கட்டுகிறோம்! வெயில் மழை மேலே படாமல் இருக்க வேண்டும். அவ்வளவுதானே!" என்றார் வெங்கோப ராவ்.

நெருப்பணைக்கும் வழி

சில எளிய உண்மைகள் நமக்குத் தெரிவதில்லை. காற்றைத் தடுப்பதால், நெருப்பை அணைக்கலாம் என்பதை, ஸ்ரீ என். கே. வேலன், பி. ஏ., 'செந்தமிழ்ச் செல்வி'யில் விளக்கியிருக்கிறார் :

எல்லாப் பொருள்களும் எரிவதற்குக் காற்று வேண்டும். இதனால்தான் அடுப்பு நன்றாய் எரிவதற்கு அதனை ஊதுகிறோம். கொல்லன் துருத்தியின் உதவியால் உலைக்குள் காற்றைச் செலுத்தி இரும்பைக் காய்ச்சுவதைப் பார்க்கலாம். நாம் அணிந்திருக்கும் துணியில் தீப்பிடித்துக் கொண்டால் அதனை உடனே அணைப்பது எப்படி? எரியும் ஆடைகளுக்குக் காற்று கிடைக்காமல் செய்து விட்டால், தீ அணைந்து விடும். ஆடை தீப்பிடித்து எரியும் போது கீழே படுத்துப் புரளலாம். சாக்கு, கம்பளி, போர்வை முதலியவற்றினால் போர்த்துக் காற்று உட்புகாமல் செய்யலாம். தீப்பிடித்து எரியும் போது அங்குமிங்கும் ஓடுவது தவறு. அங்ஙனம் ஓடுவதால் காற்றுவீசித் தீயை நன்றாய் எரியச் செய்யும்.

காற்றுக்கு எடை உண்டு. நம்மீது எடையுள்ள பொருள் ஒன்று இருந்தால் அது நம்மை அழுத்தவேண்டாமா? அப்படியானால் காற்றின் அழுத்தம் நமக்கு ஏன் தெரிவதில்லை? நம் உடம்பினுள்ளும் காற்று இருக்கிறது. அதன் அழுத்தமும் வெளியிலுள்ள காற்றின் அழுத்தமும் ஒன்றேபோல் இருப்பதால் நாம் காற்றினால் நசுக்குறுவதில்லை. பேனாவுக்கு மையடைக்கும் குழாயின் நுனியில் வாயை வைத்து உறிஞ்சினால் அதன் ரப்பர் சப்பையாக நசுங்கிப்போகிறது. நம் உடலிலுள்ள காற்றை எடுத்துவிட்டால் நாமும் அதைப்போல் நசுங்கிப் போய் விடுவோம்.

ரானடேயின் வசியம்

ரானடே என்ற பிரபல இந்தியத் தேச பக்தருக்கு மிக விரோதமாயிருந்தவர் குண்டே என்ற மற்றொருவர். அவர் ஒரு கூட்டத்திலே ரானடேயைக் கண்டித்துப் பேசிக் கொண்டிருந்தார். இந்தக் கூட்டத்துக்கு ரானடேயும் வந்து சேர்ந்தார். அதன்பின் நடந்த பின்வரும் ரசமான நிகழ்ச்சியைக் 'கலைமக'ளில் எஸ். ஆர். வேங்கடராமன், பி. ஏ., பி. எல்., எழுதியுள்ளார் :

அதுவரையில் கூட்டத்தை நேரே பார்த்துப் பேசிக்கொண்டிருந்த குண்டே, ரானடேயைக் கூட்டத்தில் கண்டதும் தம் முதுகை ரானடேயின் பக்கம் திருப்பி, சுவரைப் பார்த்துப் பேசிவிட்டுத் தம் இடத்தில் அமர்ந்தார்.

குண்டே பேச்சை நிறுத்தியதும், ரானடே மெதுவாகத் தம்மிடம் விட்டு எழுந்து குண்டே உட்கார்ந்திருந்த இடத்துக்குச் சென்று அவர் பக்கத்தில் உட்கார்ந்தார். உடனே குண்டேயைப் பார்க்க வேண்டுமே! குண்டேயின் மூஞ்சியில் எள்ளும் கொள்ளும் வெடித்தன. அவர் கண் சிவந்தது. முகம் கடுகடுத்தது. உதடு துடித்தது. உடனே தம்மிடத்தை விட்டு எழுந்து வீதியில் காத்திருந்த தம் வண்டியில் ஏறச்சென்றார். ரானடேயும் முகத்தில் ஒருவிதமான கோபக் குறியுமில்லாமல், சாந்த முகத்துடனேயே, நண்பர் குண்டேயைப் பின் தொடர்ந்தார்.

குண்டேயைப் பார்த்து, "குண்டே சாகேப்! வாருங்கள், நாம் இருவரும் என் வண்டியிலே போகலாம்" என்றார் ரானடே. குண்டே வெகு கோபத்துடன், "நான் உம்முடைய வண்டியில் வரத் தயாராயில்லை" என்று சொல்லிவிட்டுத் தம் வண்டியில் ஏறினார். அதற்கு ரானடே, "ரொம்ப ஸரி, நீங்கள் என் வண்டியில் வரத் தயாராயில்லாவிட்டால் போகிறது; நானே உங்களுடைய வண்டியில் வருகிறேன்; உங்களுடன் பேசி அதிக நாளாயிற்று. பேசவேண்டியது எவ்வளவோ இருக்கிறது" என்று சொல்லி, தாமே குண்டேயினுடைய வண்டியில் உட்கார்ந்து கொண்டார்.

குண்டேக்கு இன்னது செய்வதென்று புரியவில்லை. குண்டேயும் ரானடேயும் சுமார் இரண்டு மணி நேரம் பேசிக்கொண்டே வண்டியில் சவாரிசெய்துவிட்டு வீடு சேர்ந்தார்களாம். வழியில் இருவரும் என்ன பேசினார்களோ தெரியாது. மறுநாள் குண்டே ரானடேயின் கக்ஷியில் சேர்ந்துகொண்டதுதான் நமக்குத் தெரியும். அதன் பிறகு இருவருக்கும் நேசம் ஏற்பட்டது.

பசுக்களுக்குச் சில சமயம் மிக விசித்திரமான 'மசக்கை' உண்டாகிவிடுகிறது. கொஞ்ச காலத்துக்கு முன், பிரிஸ்பேனில் ஒரு பசுவுக்கு ஏற்பட்ட ஒரு நோயை இன்னதென்றே கண்டுபிடிக்க முடியவில்லை. அது மாண்டபின் அதன் குடலைக் கீறிப் பார்த்தார்கள். அதிலே 14 மூன்றங்குல ஆணிகளும், 20 மாங்கொட்டைகளும், 24 பீர் பாட்டில் மூடிகளும், பற்பல கூழாங் கற்களும், கண்ணாடிச் சில்லுகளும், பீங்கான் துண்டுகளும், இரண்டடி நீளம் ஒரு மோட்டார் பைஸிக்கிள் டயரின் துண்டும் அகப்பட்டன!

சுதேசி மாளிகை

பட்டுப் பட்டாடைகள், தோத்திகள், சீட்டி, வாயில் ரகங்கள், உல்லன் ட்வீட், பிளானல் தினுசுகள், இன்னும் எண்ணி லடங்காத சுதேசி பட்டு, நூல் கம்பளி தினுசுகள், சில்லறை சாமான்கள் யாவும் அடங்கிய மிகப் பெரிய சுதேசி ஸ்டோர்.

உயர்ந்த ரகம், குறைந்த விலை; இவைகளுக்கு உத்தரவாதமும் நாணயமும் நம்பிக்கையும் பொருந்திய இடம்.

சென்னையில் முதலில் தோன்றிய ஒரிஜனல் — சுதேசி ஸ்டோர் — கலப்பற்ற சுத்த சுதேசிச் சாமான்களுக்குப் பெயர் பெற்ற இடம் இதுவே

சுதேசி

விலாசத்தைக் கவனியுங்கள்

ஜெனரல் சுதேசீஸ்

லிமிடெட்,

(ஹைகோர்ட்டுக்கு எதிர்)

368, எஸ்பிளனேட், சென்னை.

பந்தோபஸ்துக்கும் சேவைக்கும்

மாறிக் கொண்டிருக்கும் ஒரு உலகில், ஒவ்வொரு தனிப்பட்ட, வர்த்தக அபாயத்திற்கும் பாலிஸிகளுடன் கூடிய **யுனைடெட் இந்தியா லைப்** ஆபீஸ் உறுதி, பந்தோபஸ்து, நேர்மை இவைகளுடன் கூடியதாயிருக்கிறது. லைப் அஷ்யூரன்ஸின் நிகரற்ற மதிப்பு, கவர்ச்சி தரும் அம்சங்கள் ஆகியவை லைப் அஷ்யூரன்ஸை சாதாரண காலங்களில் ஒரு அவசியமாகச் செய்தன. யுத்தம், மதிப்புகள் மாறி வரும் இந்நாட்களில் புத்திசாலித்தனமாகச் சேமித்து வைத்துக்கொள்ள வேண்டுமென்பதும் இந்த அவசியத்தில் இப்போது சேருகிறது. **யுனைடெட் இந்தியா லைப்** அஷ்யூரன்ஸை நம்புங்கள்; தாமதமின்றி உங்கள் ஆயுளை இன்ஷ்யூர் செய்யுங்கள்.

யுனைடெட் இந்தியா

லைப் அஷ்யூரன்ஸ் கம்பெனி லிமிடெட்

1906-ல் ஸ்தாபிக்கப்பட்டது.

யுனைடெட் இந்தியா லைப் பில்டிங்
பி. ஓ. பெட்டி 281, மதராஸ்.

டிரஸ்டி:

சென்னை சர்க்காரின் அபிஷியல் டிரஸ்டி.

இந்தியா, பர்மா, இலங்கை, மலேயா
ஆகிய இடங்களில் கிளைகளும்,
ஏஜென்ஸிகளும் இருக்கின்றன.

PARKER

◇

பார்க்கர்
புளூ டைமண்டு

ஆயுள் பரியந்தம்
உத்திரவாதமுள்ளது

பெரிய சைஸ்	பேனு	பேனுவும் பென்சிலும் (in Jewellers Gift box)
(Senior Maxima)	39 8	55
மேஜர் (Major)	33 8	48
ஸ்டாண்டர்டு (Standard)	27 0	42
ஜூனியர் (Junior)	19 8	33
Imperial Major (Golden)		96

புதிய மாடல்கள்

பார்க்கர் சர்வீஸ் ஸ்டேஷனர்

க னி & ச ன் ஸ்

(கடியார வியாபாரிகள்)

ஹெட் ஆபீஸ் :
55-57, ராட்டன் பஜார்.
மதருஸ்.

பிராஞ்சு :
190, மவுண்ட் ரோடு,



The Gift
That will be Cherished
FOR LIFE . . .

வியாபாரத்திற்கு அழகு
விளம்பரம் செய்தல்!

ஸிலன் பிளாக்குகள்-
ஆப்டோன் பிளாக்குகள்-
கலர் பிளாக்குகள்-
கலர்பிரிண்டிங் முதலியவை
செய்யுமிடம்!

டெலிபோன்
3202.

எம்.சி. அப்பாசாமிசெட்டி & கம்பெனி.

14, ஜோன்ஸ் தெருவு, மண்ணடி, மதருஸ்.

புத்தக உலகம்

தளபதி டிகால் — ஆசிரியர் : இ. சிவம். வெளியிட்டோர் : நவயுகப் பிரசுராலயம், ஜி. டி., சென்னை. விலை அணா 4.

பிரெஞ்சு சுதந்திர இயக்க ஸ்தாபகர் டிகாலின் சரித்திரச் சுருக்கம். ஆசிரியர் நன்ருக, எளிமையாக, புரியும்படி எழுதியிருக்கிருர்.

இராஜகோபாலாச்சாரியார் சரித்திரம் — ஆசிரியர் : ஆக்கூர் அனந்தாச்சாரி. பிரசுரித்தவர் : கிட்டப்பா பிரசுராலயம், செங்கோட்டை. விலை அணா 6.

அபூர்வமான விஷயங்களை ஆசிரியர் மிகுந்த கவனத்துடன் சேகரித்திருக்கிருர். எஸ்.எஸ்.எல்.ஸி. பரீட்சைக்குக் குறிப்புப் புஸ்தகம்போல், எளிய தோரணையில் புஸ்தகம் அமைந்திருக்கிறது. ஸ்ரீ ஆக்கூர் அனந்தாச்சாரியின் நடை சுலபமும் தெளிவும் நிறைந்தது; எல்லோருக்கும் புரிவது.

'பெண்'—ஆசிரியர் : ஸியாராம் சரண குப்தர். மொழிபெயர்ப்பாசிரியர்: கா. ஸ்ரீ. ஸ்ரீநிவாஸாச்சாரியார். வெளியிட்டோர் : நவயுகப் பிரசுராலயத்தோர், ஜி. டி., சென்னை. விலை ரூ. 1-12-0.

இந்நாவல் ஹிந்தி நாவல்களுக்குள்ளேயே மிகச் சிறந்தது என்று பாராட்டப்படுகிறது. இதன் கதைப்போக்கும், அக நிகழ்ச்சி விளக்கமும், சொல்லமைப்பும் யாவராலும் நன்கு போற்றப் பெற்றவை. பாரத நாட்டுப் பெண்மணிகளின் வீரமும் கற்பும் உலகப் பிரசித்தமானவை. இதில் உள்ள ஜம்னு அவ்வாறன ஒரு வீரமணியாகவே சிருஷ்டிக்கப்பட்டிருக்கிருள். தத்ரூபமாகச் சிருஷ்டிக்கப்பட்டு நம் உள்ளத்தைக் கொள்ளை கொள்ளும் பாலகன் ஹல்லீ. மூலத்தின் சுவை குன்ருமல் எளிய நடையில் இந்தத் தமிழ் மொழி பெயர்ப்பு அமைந்திருக்கிறது.

ஸப்த நதிகள் — காகா காலேல்கர் ஹிந்தியில் எழுதியதைத் தமிழில் மொழி பெயர்த்திருப்பவர்: கா. ஸ்ரீ. ஸ்ரீநிவாஸாச்சாரியார். வெளியிட்டோர் : நவயுகப் பிரசுராலயம், சென்னை. விலை அணா 8.

ஆதிகாலந் தொட்டு இந்திய பூமியில் வளம் பொருந்திய நதி தீரங்களில் பாரத நாகரிகம் ஓங்கி வளர்ந்து வந்திருப்பதற்கு ஜீவாதாரமாக இருந்துள்ள பெரு நதிகளில் சிலவற்றை - முக்கியமாக வட நாட்டு நதிகளை - காகாஜி தம் கவிதா சக்தியுடன் வர்ணித்துத் தருகிருர். சமீப காலத்திய சரித்திரத்தையும், அதற்கு முந்திய கால புராணம் போன்ற கதை நிகழ்ச்சிகளையும், நதிகள் பாயும் பூமி வகைப் பாகுபாடுகளையும், சுற்றுப்புறக் காட்சிகளையும் ஆசிரியர் வர்ணித்துள்ளார். தமிழ் மொழிபெயர்ப்பு தெளிவுடன் புரியும்படி அழகாக அமைந்திருக்கிறது.

சிறை அனுபவங்கள்—ஆசிரியர் : கி. சடகோபன். வெளியிட்டோர் : சக்தி காரியாலயத்தார். விலை அணா 12.

நமது சிறைகளைப்பற்றிய பற்பல ரஸமான தகவல்கள் இதில் அடங்கியிருக்கின்றன. ஹாஸ்யமும் சோகமும் நிறைந்த சம்பவங்கள் இதிலே வர்ணிக்கப் படுகின்றன. சிறைகளின் நிலைமையையும் அவற்றில் கைதிகள் நடந்து கொள்ளும் தன்மையையும் அதிகாரிகளின் போக்கையும் சிரிக்கச் சிரிக்க அழகான நடையில் சொல்லுகிருர் ஆசிரியர் சடகோபன்.

உரை நடைக் கோவை — ஆசிரியர்: பண்டிதமணி மு. கதிரேசச் செட்டியார். முதற்பகுதி (சமயக் கட்டுரைகள்). விலை ரூ. 1-4-0 இரண்டாம் பகுதி (இலக்கியக் கட்டுரைகள்) விலை ரூ 1-0-0. கிடைக்குமிடம் : சன்மார்க்க சபை, மேலைச் சிவபுரி.

தமிழிலும் வடமொழியிலும் நல்ல புலமையுடையவர் பண்டிதமணி. அவருடைய சமயக் கட்டுரைகள், சைவத்தின் பல நுட்பங்களை மிக அழகான முறையில் விளக்கிச் செல்லுகின்றன; இலக்கியக் கட்டுரைகள், பழந்தமிழ் இலக்கிய மரபுகள் பலவற்றை ஆராயும் இனிய ஆராய்ச்சிகளாகும். புலமையும் பொருட் செறிவும் நிறைந்த நடையிலே அமைந்திருக்கின்றன இவ்விரு நூல்களும்.

காந்தித் தாத்தா கதை—ஆசிரியர்கள் : ஸ்ரீமதி காவேரி வெங்கட்ராமன், ஸ்ரீ. எஸ். ஆர். வெங்கட்ராமன். வெளியிட்டோர்: சக்தி காரியாலயத்தார். விலை அணா 8.

மகாத்மா காந்தியின் சரித்திரம் ஒரு மகா காவியமாகும். அந்த மகா காவியத்தின் சார சங்கிரகம் இது. எனினும், காந்திஜீயின் பரிபூர்ண குண சித்திரத்தை இதிலே காணலாம். பாலர்களுக்கும் முதியவர் கல்விப் பயிற்சிக்குமென்றே இது எழுதப் பட்டிருக்கிறது. அதற்கேற்ற எளிய நடை. பல அபூர்வமான படங்கள் இதில் சேர்க்கப்பட்டிருக்கின்றன. முக்கியமாக, முகப்பிலுள்ள மூவர்ணக் காந்தி படம் குறிப்பிடத் தக்கது.

இதய ஒலி—ஆசிரியர் : டி. கே. சிதம்பரநாத முதலியார். வெளியிட்டோர்: புதுமைப் பதிப்பகம், தியாகராஜ நகர், சென்னை. விலை சாதா ரூ. 1-8-0; காலிகோ ரூ. 2-0-0.

"இதுதான் கவிதை" என்று ஸ்ரீ. சிதம்பரநாத முதலியார் சொன்னுல், அப்புறம் அதற்கு அப்பீலே கிடையாது; தேவையுமில்லை. வர கவிகள் என்று சிலரைச் சொல்வோ மல்லவா; அதேமாதிரி இவரை வர ரஸிகர் என்று சொல்லாம். கவிதைச் சுவையை நொடிப்பொழுதில் உணரும் இயற்கை அவரது பிறவியிலே அமைந்தது. புலமையும், விருப்பு வெறுப்பற்ற ஆராய்ச்சியும் நிறைந்தவர். பழைய, புதிய இலக்கியங்களைப் பற்றியும் புலவர்களைப்பற்றியும், ஆற்ருெழுக்குப்போன்ற நடையில், அவர் எழுதியுள்ள பல கட்டுரைகள் அடங்கியது 'இதய ஒலி'. பெயருக்கு ஏற்றாற்போல, தம் உள்ளத்திலே புலவர்களைப்பற்றியும் அவர்களது கவிகளைப் பற்றியும் தோன்றிய எண்ணங்களை உள்ளது உள்ளவாறு ஸ்ரீ. டி. கே. ஸி. வெளியிட்டிருக்கிருர். இலக்கியச் சுவையைப் பருகும் முறையைக் கற்க விரும்பும் தமிழர் அனைவரும் இதைப் படித்தாக வேண்டும்.

கதம்பம்

ஜப்பானியரின் டைப்ரட்டரில் 3,000 எழுத்துக்கள் இருக்கின்றன! ஆகையால், அதைப்பற்றி ஒரு தமாஷ் உலகில் பரவியிருக்கிறது. ஜப்பானிய முதலாளிகள், தங்கள் காரியதரிசியிடம் இன்று ஒரு கடிதாசை வாயால் சொல்லுவார்களாம். அதைக் குறுக்கெழுத்து மூலம் எழுதிக்கொண்ட காரியதர்சி, பல வருஷங்களுக்குப் பிறகுதான் டைப் அடித்துக் கொண்டு வருவாராம்!

*　　*

மாத உணவுச் சங்கம் என்று நியூயார்க்கில் ஒரு நூதனச் சங்கம் சிருஷ்டியாகியிருக்கிறது. மாதா மாதம் புதிய புதிய உணவுகளைத் தயாரித்து, சந்தாதாரர்களுக்குப் பார்ஸலில் அனுப்புவதுதான் இதன் வேலை. பத்திரிகைகளின் சந்தாதார்கள் மாதிரி, இந்தச் சாப்பாட்டுப் பொட்டணத்துக்காக, மாதம் 40 சதங்கள் விகிதம் கட்டணம் செலுத்தி, சந்தாதாராய்ச் சேரவேண்டுமாம்!

*　　*

"ஆங்கிலேயர்களுடன் போராட்டம் தொடுப்பதற்கு, நம்மை நாமே தயார் செய்துகொள்ள வேண்டும் என்ற எண்ணம், எனக்கு அந்தக் காலத்தில் அபாரமாக இருந்தது. 'பிரிட்டன் நம்மை ஆள்வது என்ன அதிசயம்!' என்ற ஒப்பற்றதொரு குஜராத்திக் கவியின் அடிகளை, எனக்குள் நானே சதா சொல்லிக் கொள்வேன். வெள்ளைக்காரருடன் சண்டை செய்ய எனக்குச் சக்தி உண்டு என்று காட்டவே, நான் மாமிசம் புசித்தேன். இங்கிலாந்து செல்லு முன்பு என் அபிப்பிராயம் அப்படியிருந்தது. பிறகு, அங்கே மாமிசம் புசிப்பது போன்ற செய்கைகள் ஒன்றிலும் நான் இறங்கவில்லை அதற்குக் காரணம், என் அன்னையின் உத்திரவை, சாகுமளவும் கடைப்பிடிப்பதென நான் கொண்டிருந்த உறுதியே யாகும். எனக்கு உண்மையினிடத்து இருக்கும் ஆழ்ந்த அன்புதான், எவ்வளவோ இடர்களிலிருந்து என்னைக் கரை சேர்த்திருக்கிறது." - காந்தி.

*　　*

ஸ்காட்ஸ்பிளப் என்னுமிடத்தில், ஒரு சிறுவனின் டிரை-ஸைக்கிளில் ஒரு அலாரம் டைம்பீஸை அவனது தாய் கட்டிவைத்து, அலாரத்துக்குச் சாவி கொடுத்து விடுகிறாள். அந்த ஸைக்கிளிலேதான் அவன் விளையாடப் போவான். அலாரம் மணி அடித்ததோ இல்லையோ, வீட்டுக்குத் திரும்பி விடுவான். சாப்பாட்டு நேரம் தவறாதிருப்பதற்காக, தாய் செய்துள்ள யுக்தி இது!

பாலர் பாட்டு:

புறா

வித்வான் சு. உமைதாணு பிள்ளை

வீட்டில் வளரும் புறாவே
　　விண்ணிற் பறக்கும் புறாவே
காட்டில் திரியும் புறாவே
　　கையில் வந்தே அமரவா　　(1)

மோட்டை விட்டுப் பறந்துவா
　　மரத்தை விட்டுப் பறந்துவா
கூட்டை விட்டு ஓடிவா
　　குஞ்சைக் கூடக் கூட்டிவா!　　(2)

வாயா லுன்னை அழைத் தழைத்தே
　　வாயுங் கூட நோகுதையோ
தாயை விடவே பன்மடங்காய்த்
　　தயவா யுன்னை வளர்ப்பேனே.　　(3)

மாட்டே னென்று சொல்லாதே
　　மனம் மாறுயும் கொள்ளாதே
கூட்டி வைத்த பண்டமெலாம்
　　கொள்ளு மட்டுங் கொடுப்பேனே.　　(4)

வேடனும் அதோ வருகின்றான்
　　வில்லைக் கையில் எடுக்கின்றான்
தேடித் தேடிப் பார்க்கின்றான்
　　தெருவில் எங்கும் அலைகின்றான்　　(5)

கூட்டைக் கட்டவேண்டாம் நீ
　　குளிரில் வருந்த வேண்டாம் நீ
வாட்ட மின்றி எந் நாளும்
　　வழுவா துன்னைக் காப்பேனே.　　(6)

பாலர் கதை:



மந்திரக்காரியின் மரங்கள்

'மாமி'

ஜிலுக்கு ஜிலுக்கு என்ற ஊரிலே, சின்னாணி என்ற ஒரு சித்திரக் குள்ளன் இருந்தான். அவனுக்குச் சிங்காரமான ஒரு பங்களா இருந்தது.

சாலையிலே போகிறவர்கள் எல்லாம் அந்தப் பங்களாவைப் பார்த்து மயங்குவார்கள். அதன் ஜன்னல் கிட்ட வந்து உள்ளே பார்ப்பார்கள். அங்கே சித்திரக் குள்ளன் இருப்பதைக் கண்டு, 'பூ!' என்று கேலிசெய்து நகைத்து விட்டுப் போவார்கள்.

இது சித்திரக் குள்ளனுக்கு ரொம்பக் கஷ்டமா யிருந்தது. இதற்கு என்ன செய்வது என்று அவன் யோசித்தான். காட்டிலே உள்ள ஒரு மந்திரக் காரப் பாட்டியை அவனுக்குத் தெரியும். அவளிடம் போய்க் கேட்டால், வழி சொல்லுவாள் என்று நினைத்தான். அப்படியே போனான்.

பாட்டி வீட்டிலே இருந்தாள். "பாட்டி! என் வீட்டில் ஜன்னல் இருக்கிறது. ரோட்டிலே போகிற ஜனங்க ளெல்லாம் அந்த ஜன்னல் வழியாய்ப் பார்க்கிறார்கள். அதை மறைக்க என்ன செய்கிறது?" என்று கேட்டான் குள்ளன்.

"நான் சில விதைகள் தருகிறேன். அவைகளை உன் வீட்டைச் சுற்றிலும் நடு. அவை முளைத்து, பெரிய மரங்களாய் வளர்ந்து, வேலியிட்டால் போல ஆகிவிடும்" என்றாள் மந்திரக் காரப் பாட்டி.

குள்ளன் : சரி; கொடு.

பாட்டி : கொடுக்கிறேன். ஆனால், அதற்கு நீ என்ன விலை தருகிறாய்?

குள்ளன் : விலையா? உனக்குத் தான் காடு நிறைய மரம் இருக்கிறதே; என்ன கேடு? காசு எதற்காகக் கேட்கிறாய், அடி பேராசைக் காரப் பாட்டி? சும்மாவே கொடு.

"அப்படியா! இரு இரு! உனக்கு நல்ல பாடம் கற்பிக்கிறேன்" என்று மனசுக்குள்ளேயே நினைத்துக் கொண்டாள் பாட்டி.

பிறகு, உள்ளே போய்ச் சில விதைகளை எடுத்துக் கொண்டு வந்தாள். "இந்தா!" என்று சொல்லி, குள்ளனிடம் அந்த விதைகளைக் கொடுத்தாள்.

விதைகளைக் குள்ளன் வாங்கிக் கொண்டான்; "ஆமாம், பாட்டி! இந்த விதைகள் என்ன மரத்து விதைகள்?" என்று கேட்டான்.

"அதுவா? சொல்லுகிறேன், கேள்" என்று கூறி நகைத்தாள் பாட்டி. பிறகு,

"உயர உயர வளரு மரம்;
உச்சாணிக் கொம்பு மரம்.
காசுக்கு நூறு மரம்;
காடெல்லாம் சூழு மரம்;
வேணமட்டும் தழைக்கு மரம்;
வினையாக வந்த மரம்"

என்று பாடிக் கொண்டு ஆடினாள்.

"ஓஹோ! என்னைப் பயமுறுத்தி ஏமாற்றப் பார்க்கிறாயோ? நான் ஏமாற மாட்டேன்" என்று சொல்லி, குள்ளன் அந்த விதைகளை எடுத்துக் கொண்டு வீட்டுக்கு ஓடினான். வீட்டைச் சுற்றி அவைகளை நட்டான். ஜலமும் விட்டான். என்ன ஆச்சரியம்! உடனே அவை முளைத்து, இலைவிட்டு, உயர்ந்து வளர்ந்தன. சாயங் காலத்துக்குள்ளே 'கிறு கிறு' என்று ரொம்ப உயரம் வளர்ந்து விட்டன.

"காலையில் என்ன ஆகிறது, பார்க்கலாம்" என்று எண்ணிய குள்ளன், படுத்துத் தூங்கப் போனான்.

குள்ளன் வெகு நேரம் தூங்கிய பிறகு, கோழி கூவியதைக் கேட்டு விழித்துக் கொண்டான். ஆனால், இருட்டு அகல வில்லை.

"வெளிச்சம் வரட்டும்; அப்புறம் எழுந்திருப் போம்" என்று நினைத்து, இன்னும் கொஞ்ச நேரம் படுத் திருந்தான். அப்போ தும் இருள் போக வில்லை. ரொம்ப நேர மாயிற்று; இருள் விலகி, வெளிச்சம் வரவே காணோம்.

"இதென்ன!" என்று பயந்த குள்ளன், எழுந்திருந்து, வாசலிலே பார்த்தான். வீட்டைச் சுற்றி, இடுக்கேயில்லாமல், ஆகாசமட்டும் ஓங்கி, அந்த மரங்கள் வளர்ந் திருப்பதைப் பார்த்தான். வெளியே போவோமென்றால், வழியே இல்லை; ஜெயில் மாதிரி ஆகிவிட்டது. "இனிமேல், என்ன செய்வேன்?" என்று அழுதான்.

இப்படி அவன் அழுது கொண்டிருக்கும் போது, அந்த மந்திரக்காரப் பாட்டி, விளக்கு மாற்றிலே ஏறிச் சவாரி செய்து கொண்டு, அங்கே வந்தாள். அவள் மந்திரக்காரி யல்லவா? ஆகையால், அவளுக்கு விளக்குமாறு தான் வாகனம்.

"ஏனடாப்பா, பேரா! என் மரங்களை உனக்குப் பிடிக்கிறதா?" என்று பாட்டி! கேட்டாள்.

சித்திரக் குள்ளன் அழுது கொண்டே, "இல்லை, பாட்டி! நாசமாய்ப் போகிற இந்த மரங்கள் எனக்கு வேண்டவே வேண்டாம். இந்த மரங்களாலே, என் வீடே எனக்கு ஜெயிலாய்ப் போய்விட்டதே! இவைகளை நீ எடுத்துக் கொண்டு போய்விடு" என்று கத்தினான்.

"இனமாய்க் கொடுத்த மரங்கள்தானேடா, அப்பா!" என்று சொல்லிச் சிரித்தாள் பாட்டி. அப்புறம் தன் மந்திரக்கோலை ஒரு சுழற்றுச் சுழற்றி விட்டு, மறைந்து போனாள். உடனே, மரங்கள், 'கிறு, கிறு', என்று குறுகிக் கொண்டே வந்து, அடியோடு ஒழிந்து போய் விட்டன.

அந்த மரங்களின் விதைகளை யெல்லாம், குள்ளன் தோண்டி யெடுத்தான். மூட்டையாகக் கட்டினான். காட்டிலே பாட்டியிடம் கொண்டு போய்க் கொடுத்தான்.

"பாட்டி! எனக்கு வேறே நல்ல விதைகள் கொடு, காசு கொடுக்கிறேன். இனிமேல் யாரிடமும் நான் இனம் கேட்க மாட்டேன்" என்றான் குள்ளன். ஒரு ரூபாய் பணத்தையும் பாட்டியிடம் நீட்டினான். பாட்டி அதைச் சந்தோஷமாய் வாங்கிக் கொண்டு "இதுதான் சரி; இது நல்ல பிள்ளைக்கு அடையாளம்" என்று சொல்லி, வேறே ஒரு பிடி விதைகளை எடுத்துவந்து, குள்ளனுக்குக் கொடுத்தாள்.

அவைகளை வாங்கிக் கொண்ட குள்ளன் "ஆமாம், பாட்டி! இவை என்ன மரத்தின் விதைகள்?" என்று கேட்டான்.

"அழகழகாய் வளரு மரம்;
ஆனந்தமாய்ப் பூ பூக்கும்;
சிங்காரமான மரம்;
சிறந்த நல்ல பழந் தரும்.
வீட்டுக் கேற்ற அலங்காரம்;
விளையாடிக் களித்து வாழ்"

என்று பாடினாள் பாட்டி.

குள்ளன் அந்த விதைகளைக் கொண்டு போய் நட்டான். வீட்டைச் சுற்றிலும் அழகான மரங்கள், இடைவிட்டு இடைவிட்டு முளைத்தன. பூ பூத்து, காய் காய்த்து, இனிப்பான பழங்களும் பழுத்தன. அவைகளைத் தின்ன வந்த பட்சிகள், மதுரமாய்ப் பாடின. குளு குளு வென்று காற்றும் வீசியது. அவைகளை யெல்லாம் அனுபவித்துக் கொண்டு, குள்ளன் ரொம்ப ஆனந்தமாய் வாழ்ந்தான்.

ஆண்டவன் அரண்மனை

ஏ பிரபஞ்சமே! உனக்கு எது இசைந்ததோ, அதுவே எனக்கும் இசைந்தது. உனக்கு எது சமயமோ, அதுவே எனக்கும் தகுந்த சமயம். அகால மல்ல, காலந் தவறி வந்தது மல்ல. பிரகிருதியே! உன்னுடைய பருவகாலங்களில் உண்டானவை யெல்லாம் எனக்கு நல்ல பக்குவமான பலனே யாகும். உன்னிடமிருந்தே எல்லாம் உண்டாகிறது. எல்லாவற்றையும் நீயே தாங்குகிறாய். எல்லாம் மறுபடியும் உன்னையே அடையும். நீயே ஆண்டவனுடைய அழகிய அரண்மனை.

—மார்க்கஸ் ஒளரேலியஸ்.

எம். எஸ். சுப்பிரமணிய அய்யர்

எழுதிய

சரித்திர தீபம்

[ஸ்ரீ. டி. டி. கிருஷ்ணமாச்சாரியார் முகவுரையுடன் கூடியது]

நம் நாட்டின் பெருமையை எடுத்துரைப்பது அதன் சரித்திரமே. மாக்ஸ் முல்லர், பால் டியூஸன் போன்ற எண்ணிறந்த பல அறிவாளிகள் நம் புராதனப் பெருமையை வியந்தும், புகழ்ந்தும் கூறியுள்ளனர். ஆனால் பிரிட்டிஷ் ஆட்சியின் பயனாக நமது சரித்திரப் பெருமை குன்றி தலைவோங்க விட்டாமல் பல விதங்களிலும் இன்னலுற்று வருகிறது.

இக்குறையைத் தீர்க்கும் பொருட்டு சுயரூபத்தில் நாம், நமது பூர்வீக வரலாற்றை உணர வேண்டி எழுதப்பெற்றது இந்நூல். நடை எளிதாகவும், இனிமையாகவும் உள்ளது. ஒவ்வொரு தமிழனும் வாங்கிப் படித்து இன்புற வேண்டிய நூல்.

விலை ரூ. 1-4-0

சக்தி காரியாலயம்

ஜி. டி. : : சென்னை.

தேவை

ஒவ்வொரு ஜில்லாவிலும் ஸ்லேட்டுகள் விற்க உற்சாகத்தோடும் சுறுசுறுப்போடும் வேலை செய்யும் ஏஜெண்டுகள் தேவை. விபரத்திற்கு கீழ்க்கண்ட விலாசத்துக்கு எழுதவும்.

☆

UNITED TRADING COMPANY
22, Second Line Beach,
G.T. MADRAS

சிறு கதை எழுத்தாளர்களுக்கு :: ஓர் அரிய சந்தர்ப்பம்

கதைக்கோவை — தொகுதி II

வரும் அக்டோபர் மாதத்துக்குள்ளாக 2-ஆம் தொகுதியை வெளியிட ஏற்பாடு செய்திருக்கிறது. இத் தொகுதியில் (முதல் தொகுதியில் விட்டுப்போன பிரபல சிறுகதை எழுத்தாளர்களின் கதைகள் - பெண்மணிகள் உள்பட) 25-முதல் 30-வரையில் வெளியிட உத்தேசித்திருக்கிறது. சிறு கதை எழுத்தாளர்கள், (முதல் தரமானது என்று தாங்கள் எண்ணுவதை) புதிய கதைகள் எழுதி அனுப்பலாம். அங்கீகரிக்கப்பட்ட கதைகளுக்கு சன்மானம் அளிக்கப்படும். 31-8-1941-க்குள், கதைகள் எங்களுக்குக் கிடைக்கும்படி அனுப்பப்பட வேண்டும். மற்றும் விபரங்கள் எழுதித் தெரிந்துகொள்ளலாம். கதைகளைத் தேர்ந்தெடுப்பதற்கும் நிராகரிப்பதற்கும் எங்களுக்கு உரிமை உண்டு.

அல்லயன்ஸ் கம்பெனி, 138, பிராடீஸ் ரோட், மயிலாப்பூர், சென்னை

சக்தி காரியாலயம், புத்தக வியாபாரிகள்

சக்தி மலர்கள்

		ரூ.	அ.
1	இனி நாம் செய்யவேண்டுவது யாது?	0	12
2	உலகம் சுற்றும் தமிழன்	0	12
3	நிர்மலகுமாரி	0	12
4	அசலா [கிருஹதாஹ்]	1	8
5	சிறை அனுபவங்கள்	0	12
	காந்தித் தாத்தா கதை	0	8
6	போரும் காதலும் I, II, III, IV each	1	8
7	டால்ஸ்டாய் சிறு கதைகள் I,II,III each	1	0
8	சரித்திரக் கதைகள்	1	0
9	கூண்டுக் கிளி முதலிய நாடகங்கள்	1	0
10	டால்ஸ்டாயின் நாடகங்கள்	1	0

அன்பு மலர்கள்

சுவாமி சுத்தானந்த பாரதியார் இயற்றியது

பைந்தமிழ்ச் சோலை	0	4
இன்ப மாலை	0	6
உடலுறுதி	1	0
பொது நெறி	0	2
திருக்குற ளின்பம்	1	4
,, ,, காலிக்கோ	1	12
இன்று மனிதனும் இனிவரும் மனிதனும்	0	6
வரகவி தாகூர்	0	3
தியான மாலை	1	0
புதுமையும் பழைமையும் (நாடகம்)	0	8
சிவாஸ்திரம்	0	8
புத்தர் கருணை	0	8
அன்பில் அற்புதம்	0	10
திருநூல் அல்லது தூயவாழ்வு	1	0
தமிழுணர்ச்சி	1	0
யோகசித்தி	2	8
அரவிந்த யோக தீபிகை	0	8
மஹாகவி காளிதாசன்	1	4
நாடகக் கலை	0	3
மஹரிஷி தாயுமானுர்	0	4
ஏழை படும் பாடு	1	8
இளிச்சவாயன்	1	0
பக்திப் பரவசம் (பாமலர்-க)	0	10
குழந்தை யின்பம் (,, -உ)	0	3
பேரின்பம் (,, -ங)	0	4
திருமணப்பாட்டு (,, -ச)	0	4
கவிக்கனவுகள்	0	10
அன்னை	0	4
சிலம்புச் செல்வம்	1	12
ஹிந்தி அவசியமா?	0	4
அருட்சுடர் வள்ளலார்	0	12
மகா கவி தாந்தே	1	0
அன்பு வழி	0	6

அல்லயன்ஸ் வெளியீடுகள்

	ரூ.	அ.
வாழ்க்கையே வாழ்க்கை!	1	0
கலைதக் கோவை கிளேஸ்பதிப்பு	3	0
,, பெதர் வெயிட்	3	8
விஷ விருக்ஷம்	1	8
ஆனந்த மடம்	1	8
துர்க்கேசநந்தினி	1	8
மாதங்கினி	1	4
இந்திரா	0	12
ரஜனி	0	14
தேவி சௌதராணி	1	4
கிருஷ்ணகாந்தன் உயில்	1	8
கபால குண்டலா	1	8
விஜயா	1	8
அமூல்யன்	0	15
லலிதா	0	12
காங்கிரஸ் 50 வருஷ சரித்திரம்	1	0
பண்டித மோதிலால் நேரு	0	12
வீரகேசரி விட்டல்பாய் படேல்	0	12
ஷண்முக விஜயம் (19-போட்டோ படங்களுடன்)	0	12
ஷண்முக சுந்தரம்	2	0
விஜய பாஸ்கரன்	2	0
விக்ரம சிங்கன் கோட்டை மர்மம் (கற்பின் வெற்றி)	1	0
மோகனங்கி	1	4

நவயுக வெளியீடுகள்

கம்பன் கவிதை	1	8
புதுமைப் பித்தன் கதைகள்	2	0
கட்ட பொம்மு	1	8
பேவலிஸ்ட் ஜடாமுனி	1	8
தேவதாஸ்	1	0
உலகத்துச் சிறு கதைகள்	1	0
மாகாண சுயாட்சி	0	8
தேய்ந்த கனவு	0	8
மழையும் புயலும்	1	8
பாகிஸ்தான்	1	0
பெண்	1	8
ஸப்த நதிகள்	0	12
எல்லோரும் ஓர் குலம்	0	8
வார்தா திட்டம்	0	8
இரட்டை மனிதன்	0	8
பொம்மையா, மனைவியா?	0	8
லெனின்	0	8
சீனு—ஜப்பான்	0	8
மைக்கேல் காலின்ஸ்	0	8

இன்னும் மற்றெல்லா இதர நூல்களும் எங்களிடம் கிடைக்கும்.

46, முத்துமாரி செட்டித் தெரு, ஜி. டி. சென்னை

உங்கள் குடும்பம் பெரிதாகிறது செலவும் அதிகமாகிறது

குழந்தைகளின்
படிப்பு —

பெண்ணின்
கலியாணம் —

கடைசியில்
முதுமைப் பருவம் —

ஹிந்துஸ்தான்

கோவாபரேடிவ் இன்ஷ்யுரன்ஸ்
கம்பெனி, லிமிடெட்.

அகஸ்தியர் அமிர்தம்

(18 வித துஷ்டரோக நிவாரணி)

இந்த அமிர்தம், ஹிமாலய பர்வதத்திலும், திபெத்திலும் இன்னும் அநேக மலைப்பிரதேசங்களிலு முள்ள அபூர்வ மூலிகைகளைக் கொண்டு இந்து, சீன, புத்த சாஸ்த்திர முறைப்படியும் மகா யோகீஸ்வராள் அருளிய படியும் மிக்க கவனத்துடன் அதிக பொருட் செலவில் தயாரிக்கப்பட்ட ஒப்பற்ற மருந்து.

எப்பேர்ப்பட்ட நாளான வியாதியாக இருந்தபோதிலும், சரீர முழுதும் அழுகி ஜலம் சொட்டிக் கொண்டிருந்தாலும் ஐந்து மாதத்தில் கண்டிப்பாய் பூர்ண சுகம் தந்து பழைய திரேகம் போலாகும். ரத்த பரீக்ஷையும் செய்து கொள்ளலாம்.

தயாரிப்பவர்கள் :

அம்பிகா ஔஷதாலயம் லிமிடெட்

17, அரிசிக்காரத் தெரு, மைலாப்பூர், மதராஸ்.

சக்தி மலர் 4

அசலா

ஸ்ரீ. ஆர். ஷண்முகசுந்தரம்

மொழி பெயர்த்தது

ஸ்ரீ சரத் சந்திர சட்டர்ஜியின் நாவல்களில் அசலா தலை சிறந்ததென்று எல்லோராலும் போற்றப்படுகிறது. மூலத்தின் சுவை குன்ருது இனிய நடையில் ஸ்ரீ ஆர். ஷண்முகசுந்தரம் மொழி பெயர்த்திருக்கிருர்.

சக்தி காரியாலயம்

ஜி. டி. சென்னை



P. Kothandaram Pillai

உயர்தர மரச்சாமான்கள் வியாபாரம்

HIGH CLASS

CABINET MAKER & UPHOLSTERER

Established in 1854

PONNUSAWMY PILLAI'S BUILDINGS

39 & 44, ESPLANADE WEST

(Rattan Bazaar)

P. T. MADRAS

Sure Safe Healer for Family use

Kills Septic Germs, Promotes Growth of New Skin.

VANISH

[Ringworm Cure]

"வானிஷ்"

சர்மரோக நிவாரணி

முகப்பரு, வேனல் கட்டி, கக்கூஸ்பத்து, கரப்பான், பித்தவெடிப்பு, தீப்பட்ட புண் மற்றும் எல்லாவித சர்ம ரோகங்களுக்கு சிறந்த ஔஷதம்.

Prepared by

Dr. V. S. S. MONI & Brother,

NATIONAL PHARMACY,

KARAIKUDI

New Model 75 *DeLuxe*

Remington

Room Air Conditioner

பழைய காலம் முதல் இந்நாள் வரை கடுமையான உஷ்ணமும், மித சீதோஷ்ண மந்தாரமும், உதறச் செய்யும் உறை பனியும் மனிதனின் ஆரோக்யத்தையும், சுறுசுறுப்பையும் சந்தோஷத்தையும் கெடுத்து வருகிறது இப்பொழுதோ வென்றால், 'ஏர் கன்டிஷனிங்' எனும் புதுமை, இயற்கையின் இடைஞ்சல்களை அறவே ஒழித்துவிட்டது.

மனித வாழ்க்கைக்கு மிக ஆரோக்யமான சீதோஷ்ண ஸ்திதி ஒரு வருஷத்தில் சில நாட்களே இயற்கையாய் அமைந்திருக்கிறது ஆனால் மாசற்ற "ஏர் கன்டிஷ' னிங்கோ நமக்கு இன்றியமையாத சம சீதோஷ்ண நிலையை, தானாகவே வருஷத்தில் ஒவ்வொரு நாளிலும் ஒவ்வொரு மணியிலும் ஏற்படுத்துகிறது.

'ஏர் கன்டிஷனிங்' எவ்விதமான சௌகர்யத்தையும் கொடுக்கிறது. ஒருவனுக்கு, பொறுக்க முடியாத கோடை வெப்பத்திற்கு மாற்றாக 'ஜில்' லென்று தனது வேலையில் ஈடுபடக்கூடிய சுகத்தை கொடுக்கிறது. மற்றொருவருக்கு மிக குளிரினால் ஏற்படக் கூடிய ஜலதோஷம், ஆஸ்த்மா, காய்ச்சல் முதலியவைகளைத் தடுக்கிறது. சகிக்க முடியாத உஷ்ணப் பிரதேசத்தில் இருப்பவர்களுக்கு குளிர்ச்சியான, சுகமான சம சீதோஷ்ண ஸ்திதியை அளிக்கிறது.

அநேக விதமான சௌகர்யங்களுக்காக அநேகர் "ஏர் கன்டிஷனிங்"கை அடிக்கடி ஆதரித்தாலும், நாம் எதிர்பாராத வேறு பல சௌகர்யங்களையும் "ஏர் கன்டிஷனிங்" அளிக்கும் என்று சொல்வது மிகையாகாது.

மேலே இருப்பது உங்களுக்கு வருஷம் **365** நாட்களும் ஆரோக்யமான சம சீதோஷ்ண நிலையை கொண்டுவரும் புதிய "ரெமிங்க்டன் மாடல் **75** டி லக்ஸ்" எல்லோருக்கும் எங்கிருப்பவர்களுக்கும் திருப்தி அளிப்பதற்காகவே மேலேயுள்ள 'ஏர் கன்டிஷனர்' ஏற்படுத்தப்பட்டது.

"புதிய மாடல் **75** டி லக்ஸ்" ஏர் கன்டிஷனர் எங்கள் லக்ஷியத்தின்படி எல்லாவித சௌகர்யங்களுக்கும் ஏற்பட்டது என்று நம்புகிறோம்.

ரெமிங்டன் ஏர் கன்டிஷனிங் கம்பெனி

ஹென்ரி டி. ஜோஸ்லின்

ப்ரெஸிடென்ட்

Remington AIR CONDITIONER WILMINGTON 1872

Tel. ARASAR Phone: No. 4551

Sub dealers:

UNITED TRADING CO.
No. 22, Second Line Beach
G. T. MADRAS

Edited, Printed and Published by V. Govindan at Shakti Press Limited
(Shanti Press), 46, Muthumari Chetti Street, G.T., Madras. Joint Editor: T. J. Ranganathan.